சுதேசமித்திரன்



தாய்மார்கள் அறிவர்.

⁘ உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ⁘
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

இப்பொழுது
நடைபெறுகிறது.
சென்னை
வெலிங்டனில்
தினசரி 2 காட்சிகள்: 6-15, 9-30
வெள்ளி, சனி, ஞாயிறு
மாட்டினி பகல் 3 மணிக்கு
★
உதய சங்கரின்
கல்பனா
ஜெமினி ரிலீஸ்
..... நேத்திரானந்தமான நடனங்களும் இனிமையான கானங்களும் நிறைந்தது.....

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
காளி முத்துவின் குழந்தை	வேம்பு	5
பூர்விகச் செல்வம்	'ராவி'	8
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
ரமாவைக் கேளுங்கள்	குங்குமம்	17
நாமொன்று நினைக்க	ய. மகாலிங்க சாஸ்திரி	20
கலா மண்டபம்	சாண்டில்யன்	24
பாக்ய சக்கரம்	வை. சுப்ரமண்யன்	27
பெரிய புராணம்	பி. ஸ்ரீ	31
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	33
துஷ்யந்தலம்	காகராஜன்	35
கால பலன்	'ராவ்'	38
காளியும் ராஜகுமாரியும் (சிறுவர் கதை)	ரங்கநாதன்	46

'மித்திரன்'' வாரப்பதிப்பில் தோனறும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கறபனையே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ பங்குனிமீ 28உ ★ 1949-௵ ஏப்ரல்மீ 10 உ No. 10

புதிய மந்திரி சபை

சென்னையில் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட புதிய மந்திரி சபை நிர்வாகப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற வாரம் நடந்த சென்னை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் தலைமைப் பதவி நாடிய அபேட்சகர் ஜாபிதாவில் கடைசி கட்டத்தில் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவின் பெயர் முன்னணிக்கு வந்து ராஜயோகத்தையும் பெற்றது. இம்மாகாணத்தில் பிளவுகளோ, போட்டிகளோ இல்லாமல் ஏகமனதாக காங்கிரஸ் கட்சி தனக்கு ஒரு தலைவரைத் தெரிந்தெடுத்துக் கொள்ள முடியாத துரதிருஷ்ட நிலைபற்றி இப்பொழுது ஆராய்ச்சியில் ஈடுபடுவது அவசியமில்லை. தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட தினத்தன்றே ஸ்ரீ ராஜா இதற்கான சந்தர்ப்ப விசேஷங்களைச் சுட்டிக்காட்டி அறிக்கை விடுத்தார்.

பிரதம மந்திரிப் பதவியைத் தாங்கும் ஸ்ரீ ராஜா, தமது மந்திரிசபையை நிறுவும் முன்னதாகக் காங்கிரஸ் மேலதிகார பீடத்தைக் கலந்தாலோசித்திருக்கிறார். நிர்வாகத்தை நேர்மையுற நடத்துவதற்கு அவசியமானதொரு மந்திரி சபை நியமிப்பதற்கு இது உதவிகரம் என்பது தெளிவு. ஆனால் இம்மாகாண மக்கள் சம்பந்தப்பட்டவரை புதிய மந்திரி சபையின் சாதனைகளைக் கொண்டுதான் அதன் திறமை, கிட்டிய பயன் இவற்றை நிதானிக்க வேண்டியிருக்கும்.

ஸ்ரீமான் குமாரஸ்வாமி ராஜா அனுபவம் முதிர்ந்த காங்கிரஸ்காரர். தியாகம், சேவை இவற்றில் யாருக்கும் பிற்பட்டவரல்ல. ஸ்தலஸ்தாபன நிர்வாக இனங்களில் பரிச்சயம் பெற்றவர். ஸ்ரீ பிரகாசம் அமைத்த மந்திரிசபையில் அங்கம் வகித்தவர். மந்திரியாயிருந்தவர். இப்போது பிரதம மந்திரிப் பதவியைத் தாங்குகிறார்! சர்க்கார் நிர்வாகத்தின் தன்மை, அதிலுள்ள பெரும் பொறுப்பு இவற்றையெல்லாம் ஏற்கனவே அறிந்த இவர், இன்று அதிகரித்திருக்கும் பெரும் பொறுப்பையும் இனிது நிறைவேற்றுவார் என்று எதிர்பார்ப்பது சகஜம். ஸ்ரீ ராஜா இதை நன்கு உணர்ந்தே அன்று விடுத்த தமது அறிக்கையின் வாசகத்தை அமைத்திருந்தார்.

காங்கிரஸ் நடவடிக்கைகளிலாகட்டும், நிர்வாகச் சிறப்பினில் தானாகட்டும் அகில இந்தியாவின் திருஷ்டியில சென்னைக்குப் பிரத்யேகமான ஒரு மதிப்பு உண்டு. பிற மாகாணங்களுக்குச் சென்னையை ஒரு வழிகாட்டி என்று கொண்டாடும்போது நம் மாகாணத்தவர் இதயம் பூரிப்பால் ஒரு முறை விம்மித்தணியும். ஆனால் இந்தப் புகழ்மாலை நலிந்து, நலமற்றுப் போகும்படியான பல விபரீதங்கள் முளைத்தன. மாகாண சுக வாழ்வைப் பாதிக்கும்படியான தகராறுகள், சில்லரைக் கிளர்ச்சிகள், வகுப்புத் துவேஷ நடவடிக்கைகள் முதலியன முளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்க வேண்டிய தீய சக்திகள் தலைதூக்கக் கண்டோம். நாட்டில் உணவுக்கும், உடைக்கும், அன்றாட ஜீவனத்துக்கும் அவசியமான பொருள்களுக்கும் மக்கள் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்துவரும் கட்டத்தில் இத்தகைய விஷவித்துக்கள் வேரூன்ற இடமேற்பட்டால், அது மிக்க கொடிதாகும். நமது பலத்தையும், பொழுதையும் இவற்றில் செலவிட இதுவல்ல சமயம்.

இந்தக் கொடுமையை இனியும் நீடிக்க விடுவதற்கில்லை. எனவே ஸ்ரீ ராஜாவும் அவரது மந்திரி சபையும் மேற்சொன்ன நாசப் பேயாட்டத்துக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து மாகாண சமூக வாழ்வு மகிழ்ச்சிகரமானதாயும், ஐக்கிய பத்தியத்துக்கு உகந்ததானதாயும் அமையத் திட்டமான செயல் முறையில் இறங்குமென்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

[இவ்விதழின் அட்டையில் தோன்றுவது ஸ்ரீ குமாரஸ்வாமிராஜாவின் படமே.]



திருவாங்கூர்-கொச்சி சமஸ்தான இணைப்பு சம்பந்தமாக மேற்படி இரு சமஸ்தானத் தலைவர்களும் சமீபத்தில் டில்லி சென்றிருந்தனர். இவர்களுக்குக் கவர்னர் ஜெனரல் ராஜாஜி சர்க்கார் மாளிகையில் ஒரு விருந்து நடத்தினர். நாற்காலியில் ராஜாஜியும், அவர் முன்பாகத் தலைவர்களையும் காண்க.

சென்னை ராஜாஜி ஹாலில் அகில இந்திய குழந்தைகள் கல்வி மகாநாட்டை பவநகர் மஹாராணி சென்ற வாரம் ஆரம்பித்து வைத்தார். படத்தில் அவரும் மிஸஸ் செரியன் முதலியோரும் காணப்படுகிறார்கள்.

காளிமுத்துவின் குழந்தை

வேம்பு

அந்த ஊருக்குப் புதியதாக டூரிங் டாக்கீஸ் வந்திருந்தது. நடுத்தரமான நகரமான புள்வேலூர் ஜனங்களுக்குச் சிறிது சந்தோஷம் தான் அவர்களுடைய அன்றாட வேலையை முடித்துக்கொண்டு மெள்ள அந்தப்பக்கம் போவார்கள். மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட டெண்டுக்குள் போய் சினிமா பார்க்காதவர்களே அந்த ஊரில் இல்லை

படம் ஆரம்பிக்கும் முன்னமே காளிமுத்துவின் பாண்டு கோஷ்டி இசைக்கும். மக்களுக்குப் பிடித்தமான பாடல்களை. சுலபமாகக் கவரக்கூடிய பாடல்களை வாசிப்பதில் காளிமுத்து கைதேர்ந்தவன். இன்று நேற்றா அவனுக்குப் பழக்கம். சிறு வயதிலிருந்தே அந்த டூரிங் டாக்கியோடு சுற்றியலைந்து அதன் சுகதுக்கங்களோடு சுகதுக்கமாக அனுபவித்து தன் வாழ்வின் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்துவிட்ட அவனுக்கு இந்தத் தொழிலில் கஷ்டமே தெரிவதில்லை இரண்டுவேளை சாப்பாட்டுக்கும் பனிரண்டு தடவை 'டீ' குடிப்பதற்கும் ஊதியம் அவனுக்குக் கிடைக்கிறது

'புசு புசு' என்று சுருட்டை சுருட்டையாக தலைக்குமேல் கிரீடம் வைத்தார் போன்ற கிராப்பு வெள்ளை மல் ஜிப்பா, அகன்ற நெற்றி. கருப்பான முகத்தில் பளிச்சென்ற வெள்ளைப் பற்கள். கையிலே அந்தக் கிளாரினெட்—இவ்வளவும் சேர்ந்த உருவம்தான் காளிமுத்து. அந்த டூரிங் டாக்கீஸுக்கே காளிமுத்துவினால் தான் உயிர்.

காலை வேளையில் ஒன்பது மணிக்கு கட்டை வண்டியில் தன் கோஷ்டியோடு பாடிக்கொண்டு கிளம்பினால் பகல் ஒரு மணிவரை ஊரின் வீதி பூராவும் அழகாக இசைத்துக் கொண்டு வருவான். வீட்டுக்குள்ளே என்ன வேலை, யார் செய்துகொண்டிருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு வந்து வாசலில் நின்று பார்ப்பார்கள். ஜனக்கூட்டம் அதிகமாகப் பார்க்கப் பார்க்க அவன் குஷி அதிகமாகும். மாலைவேளையில் தண்ணீர் தெளிக்கப்பட்ட டூரிங் டாக்கீஸ் வாயிலில் உட்கார்ந்து 'டமர டமர டக்டமர' என்று பாண்டு வாசிக்க ஆரம்பித்தவுடனேதான் மக்கள் கூட ஆரம்பிப்பார்கள்.

ஏழு மணிக்கு ஆட்டம் ஆரம்பமானபிறகு அவனுக்கும் வாத்தியத்துக்கும் வேலையில்லை.

அந்த ஊருக்கு வந்த இரண்டாவது நாளே. டெண்ட் போடப்பட்டிருந்த இடத்துக்குப் பக்கத்திலுள்ள கிணற்றங்கரைக்கு வந்தான். ஏழு மணியானாலும் நன்றாக இருட்டிவிட்டது. முன்னிலாவானதால் வானத்தில் மதி பளிச்சென்று காய்ந்துகொண்டிருந்தான்.

பச்சையம்மாவும் அப்பொழுது தான் கிணற்றில் நீர் எடுக்க வந்திருந்தாள். அந்தக் கிண்ற்றுக்கு ராட்டினம் கிடையாது. குனிந்து கையால்தான் இழுக்கவேண்டும்.

காளிமுத்து ஒருமுறை பச்சையம்மாவைப் பார்த்தான் இவனுக்கு முன்னேமேயே அவள் கவனித்திருக்கிறாள்.

அவன் வாசிக்கும் கிளாரினெட் வாத்தியம் எழுப்பும் இனிய நாதம் அவளது புது உள்ளத்தில் புகுந்து நரம்புகளிலே ஜீவனை ஒட்டி ஒரு தனி துடிப்பை உண்டாக்கும்.

வாழ்க்கையின் இருபது ஆண்டுகள் அவளைக் கடந்துவிட்டன. தாயும் அவளும்தான் வசித்து வருகிறார்கள். தகப்பன் இருந்திருந்தால்...தன் மகளுக்கு இன்னுமா கல்யாணம்' கட்டாமல் விட்டிருப்பான் பாவம் அவள்தான் திடீரென்று மனைவி மங்கம்மாவையும், பதிமூன்று வயசு பச்சையம்மாவையும் நூறு ரூபா கடனையும் விட்டுவிட்டு இறந்துவிட்டானே! தாயும்-மகளுமாகக்கஷ்டப்பட்டு வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். வயசு வந்த பெண்கள் அவள் வயசொத்தவர்கள் வீட்டிலே கூண்டு கிளிபோல் அடைபட்டிருக்க வயிறு நிமித்தம் இவள் நாலு வீடு சென்று மிகவும் ஜாக்கிரதையாக வேலை செய்து வாழும்படி நேர்ந்துவிட்டதே. தாய் மங்கம்மாவுக்கு இதெல்லாம் உள்ளூர வருத்தம்தான். என்ன செய்வது? ஊர் எல்லை அய்யனார் கண் திறந்து ஏழையைக் கவனித்து ஒரு வழி செய்யமாட்டாரா என்ற எண்ணத்துடன்தான் நாளை ஓட்டி வந்தாள் ஆனால் கௌரவமான வாழ்க்கை

சிறு குடிசையானாலும் குடிசையடுப்பு புகையாத நாளில்லை வயிறுக்கு மீறிதானே மீதியெல்லாம் என்பது அவள் எண்ணம்.

பச்சையம்மாளைக் கடைக்கண்ணால் ஒரு தடவை கவனித்தான் காளிமுத்து பருவகாலத்து புது மணம் அவன் சிந்தனையைக் கிளறிவிட்டது. எவ்வளவு நாள்தான் அவன் இப்படியே ஒண்டிக் கட்டையாகச் சுற்றி வருகிறது?

ஒரேஒருத்தி அவன் அக்கா எங்கோ இருக்கிறாள். அவள் முகம்கூட மறந்துவிட்டது இப்படியே வாழ்நாள் பூராவும் ஊதலும் கீதலுமாக கடத்தினால் வாழ்க்கையின் சோபைக்கு வித்தாக, இயற்கை வாழ்வு வாழ எப்பொழுது வழி தேடுவது! ஏண்டா காளி உன் ஆயுளை இப்படியே கழிச்சுடப் போறியா?'' என்று அவன் முதலாளி கேட்டிருக்கிறா. ஆனால் அவனுக்கு என்னவோ அந்த வாழ்வுதான்—நிம்மதியான வாழ்வுதான் பிடித்துவிட்டது; பழக்கம்தான் காரணம் ஊதலைக் கையிலெடுத்து நிம்மதியான மனதுடன் இலாவகம் நிரம்ப வாசிப்பது. அதைக் கேட்டு மக்கள் மகிழ்வதைக் கண்டு, தான் மகிழ்வது என்று வாழ்க்கையைச் சுலபமாகத் தள்ளி வந்த அவனது போக்கிலே அன்று சட்டென்று ஒரு மின்னல்போல் பச்சையம்மை குறுக்கிட்டு............

2

மூன்று வருஷம் மறைந்தன ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரு வார்டில் பச்சையம்மா படுத்திருந்தாள். அவள் முகத்திலே பழைய சோபை இல்லை. உடலிலே பழைய இளமை இல்லை. கண்களிலே காதல் பேசும் இன்ப ஒளி இல்லை முகம் வெளிரிட்டு, தலை சிடுக்குற்று. உதடுகள் வெடிப்புற்று. உடல் துவள அவள் ஆஸ்பத்

திரிக் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் ஆயுளிலேயே மெத்தென்ற படுக்கையில் படுத்தறியாள். சிவப்பு நிற கம்பளி அவள் இடுப்பு வரையில் மூடப்பட்டிருந்தது மிகக் கவலையுடன் கட்டிலின் கீழே அவள் தாய் மங்கம்மாள் உடகார்ந்திருந்தாள்

நிசப்தம் நிறைந்த அந்த வார்டில் அங்கொன்று இங்கொன்றுமாக இருமும் சப்தம் கேட்கும்.

மங்கம்மாவின் மடியில் தலையை வைத்துக்கொண்டு குழந்தை கண்ணப்பன் தூங்கிக்கொண்டிருந்தான் வாழ்வு பூராவும் அவனைச் சுற்றியல்லவா பின்னிக் கிடக்கிறது நான்கு ஆண்டுகள் நிரம்பப்பெற்ற அச் சிறுவனின் வாழ்வின் ஆரம்பத்திலிருந்துதான் பச்சையம்மாவுக்குப் பிடித்தது சனியன்

பச்சையம்மாவின் கட்டிலுக்கு அருகேயிருந்தவள் மிகவும் நல்லவள் நாளை அவள் டிஸ்சார்ஜ் ஆகப் போகிறாள். பச்சையம்மாவும். அவளும் மனம் விட்டுப் பேசிக்கொண்டனர்

உலகில் தன்னையொத்தவர்கள் நிம்மதியாக வாழும்போது தனக்கு மட்டும் இப்படி நேர வேண்டுமா ஆண்டவனே என அவள் மனம் புழுங்கிப் புழுங்கி தொண்டைக் குழி வரை எண்ணம் விம்மி எழுந்துத் தணியும்.

ஒரு குரல் தன் குறையை யாரிடமாவது சொல்லி அழாவிடில் தீராது போலிருந்தது. அதற்குச் சமயம் வாய்த்ததுபோலும்

“அம்மா” என்று ஆரம்பித்தாள் பச்சையம்மா மெல்லிய குரலில் இதை ஆரம்பிக்கும்போது அடுத்தக் கட்டிலில் இருந்த அவளுக்கு என்ன தோன்றியதோ என்னவோ பச்சையம்மாவின் கட்டிலருகே வந்து உட்கார்ந்தாள்.

“நான்கு வருடத்துக்கு முன்பு எங்கள் ஊருக்கு ஒரு டூரிங் டாக்கீஸ் வந்திருநதது தந்தையற்ற நானும் தாயும் கஷ்டப்பட்டு வீடு வீடாக வேலைசெய்து பிழைத்து வந்தோம். வயதாகி வளர்ச்சியின் எல்லையை அடைந்து விட்ட என் மனதிலே களங்கமில்லை. உலகமே தெரியாது என்றுகூட சொல்லலாம்

அவர்—காளிமுத்து—பெயரே முதலில் என்னைக்கவர்ந்து விட்டது அவர் வாசிக்கும் கிளாரினெட்டின் இனிய நாதம் என்னை ஒரு குலுக்கு குலுக்கியது. நான் இழுக்கும் கிணற்றுக்கு தான் அவரும் மாலை வேளைகளில் தண்ணீருக்காக வரவேண்டும்.

பேதை மனதை எப்படியோ அவரிடம் பறிகொடுத்தேன் வாழ்நாளின் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து விட்ட அவரது நிலையற்ற வாழ்க்கையின் மீது எனக்கு வருத்தம் பிறந்தது வேளையற்ற வேளையுண்டும் சாப்பாட்டினால் உடல் பாழாய் போவது கண்டு டாசமுண்டாகியது; ஏன் நான் அவரது மனைவியானால்? அவருக்கு என்ன குறைச்சல்?

இருவரும் அடிக்கடிச் சந்திப்பது ஏற்பட்டது வீட்டிலே செய்யும் பலகாரங்களை நானே வாழை இலையில் மடித்து,கொண்டு கொடுப்பேன் யார் எங்களைப்பார்ப்பார்கள் ?

‘என்ன இருந்தாலும் வீட்டிலே ஒரு பெண்—அதுவும் பச்சையம்மாயைப் போன்றஒருபெண்—ஆக்கியளித்தால் அதிலே ஒரு தனி சுவைதான் இருக்கிறது’’ என்று சப்புக்கொட்டிச் சாப்பிடுவார் அவர்.

“ஏண்டி பொண்ணே...ஊர் வாய் சும்மாயிராதடி...உன் அப்பன் இருந்திருந்தால் இப்படியெல்லாம் ஆகவிடுவாரா?’’ என்றாள் அம்மா தழுதழுத்த குரலுடன். அவளுக்கு என் உள்ளம் தெரியாதா? தாயுக்கு மகள் மனது அறியாதா ?

குடிசைக்கே நான் அவரை சில நாள் அழைத்து வந்திருக்கிறேன். என்ன தைர்யம் எனக்கு? என் வாழ்விலேயே என்றும் காணாத புது ஒளி உண்டாகியது அமைதியான என் வாழ்வின் குளத்திலே சிறு கல் விழுந்தாலும் அதில் எழும்பிய அலைகள் மெள்ள மெள்ள வட்ட வடிவமாக எழுந்தன.

அவர் தேவையான பணம் எண்ணாமலேயே கொடுக்க ஆரம்பித்தார். மனதிலே எண்ணற்றக் கோட்டைகள் கட்டினேன் இன்பக் கனவுகள் கண்டேன் நாள் நகர்ந்தன.

என் உடலிலேயே ஒரு மாறுதல். ஆம் நான் தாயாகப் போகிறேன்

இது அறிந்த அம்மா அசந்து அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அவள் வாய் யாராரையோ சபித்தது.

ஆனால்...நான் திருட்டு வழியிலா சென்றேன் ... மனதிற்கு விரோதமாகவா சென்றேன்...?

அவரிடம் மெள்ள விஷயம் கூறினேன் அவர் ஒன்றும் பதில் பேசவில்லை. என்ன ஆழ்ந்த சிந்தனை செய்தாரோ என்னவோ? ஆனால் கைபிடித்து சத்யம் செய்து 'பச்சை' உன்னையும் என்னையும் பிரிக்க பிரம்மனால் கூட முடியாது' என்று ஆணையிட்டாரே அந்த எண்ணம் தைர்யம் எனக்குப் பெரும் நம்பிக்கையை அளித்து உற்ற துணையாக இருந்து வந்தது.

ஆனால் அன்று காலை...படுக்கையை விட்டு எழுந்தேன்...முதல் நாள் சீக்கிரமாகவே படுத்துவிட்டேன்.

எங்கே டூரிங் டாக்கீஸ்? டூரிங் டாக்கீஸ் என்ற இடம் வெறிச்சென்று இருந்தது

அடி பெண்ணே நேற்று இரவோடு லைசென்ஸ் முடிந்துவிட்டதாம். டாக்கீஸை 'பிரிச்சுண்டு போய்விட்டார்கள் என்றாள் ஓலமிட்டு தாய்

டக்கென்று யாரோ பின்னின்று உளியால் மண்டையில் பேதமை ஆணிக்கு ஆப்பு அடித்ததுபோலிருந்தது.

பிரக்ஞையற்று விழுந்தேன் உண்மையில் அவர் கைவிட்டாரா? அவரது இனிய வார்த்தை எங்கே? நம்பிக்கையூட்டிய நல்ல சொல் எங்கே? ஆணையிட்ட ஆதரவுக் குரல் எங்கே?

அம்மா மடியில்' படுத்து விம்மினேன்

★ ★ ★

ஊரிலே வம்புப்பேச்சு வதந்தித் தேவதைக்கு இறகு முளைத்தது. ஒவ்வொருவர் வீட்டிலும் இதுதான் பேச்சு!

என் தாய் ஒரு குரல் அழுதாள். பாவ உன்னால் வெளியே தலைகாட்டவே முடியவில்லையே' டிராமாக்காரர்கள் எப்பவுமே அப்படித்தான் பெரியதனமான குடும்பத்துக்கிழிவு கொண்டு வந்து விட்டாயே எனக் கதறினாள்

அவர் வருவார் என்ற நம்பிக்கை இருந்தது எனக்கு.

* * *

சே! இந்த வம்புப்பேச்சு மனிதனுடைய திட எண்ணத்தை குலைத்துவிடுகிறதே.....என்னாலேயே தெருவில் நடந்து போக முடியவில்லையே. நான் அப்படி என்ன செய்துவிட்டேன்?

மாதங்கள் கடந்தன. பிரசவ சமயம் அம்மா அந்த ஊரில் இல்லாமலிருக்க முடிவு செய்துவிட்டாள் அந்த டாக்கீஸ் எங்கு போயிருக்கிறதென விசாரிக்கவே முடியவில்லை

பட்டணம ஆஸ்பத்திரியில்தான் இவன் பிறந்தான்

எனக்கு ஒரு நிம்மதி பிறந்தது அம்மா. இங்கு வம்பு பேசுபவர் இல்லை ஆனால் வாழ்க்கையை ஒழுங்காக நடத்துவதுதான் கஷ்டமாயிற்று.

தாய் ஒருநாளில் பதினெட்டு மணி நேரம் உழைத்தாள கல்யாணம் இல்லாமல் இப்படியே கழித்துவிடுவதா? இருவரும் விம்முவோம். அடிக்கடி என்ன செய்வது?

மகனின் அழகான மழலைச் சொல்லில் மன நிம்மதியடைவேன் எவ்வளவோ கஷ்டங்கள். அதனைக் கூறமுடியுமா?

வருஷம் இரண்டு கழிந்ததம்மா. எங்கிருந்தோ வயிற்று வலி வந்துவிட்டது அம்மா.

இதோ ஆஸ்பத்திரியில் வந்து படுத்துவிட்டேன் என் வேதனை, துன்பம், துயரம் எல்லாம் கூறி என் மனதுக்குச சாந்தியைத் தேடிக கொள்ளலாம்......ஆனால் துன்பமும், துயரமும என்னுடனிருக்கட்டும். கவலையற்ற உங்களுக்கு எதுக்கம்மா,

என்று முடித்தாள் பச்சையம்மாள் அவளுக்குப் பெருமூச்சு வாங்கியது

* * * *

இந்தக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தாள் அருகிலிருந்தவள் என்ன தோன்றியதோ என்னவோ. அவள் ஒன்றும் பேசவில்லை அன்று மாலை டிஸசார்ஜ் ஆகிப் போகும் போது பரிவுடன் விடைபெற்றுக கொண்டாள்.

ஆனால் உடல் நோய் அன்று பச்சைக்கு அதிகமாகியது இரவெல்லாம என்னென்னவோ முணுமுணுப்பு

பச்சையம்மாளின் கட்டிலுக்கு அருகேபடுத்திருந்த ருக்மணியம்மாள பாலகிருஷ்ணா டாக்கீஸ் சொந்தக்காரரின் மனைவி இவள் கூறி வந்த சம்பவங்களைக் கேட்கும போதே அவள் மனதில் ஒருவிதமாக உருவகப்படுத்திவிட்டாள்.

பல்லாவரததில் அப்போது அந்த டூரிங் டாக்கீஸ் ஆறு மாதமாக ஆடிக்கொண்டிருந்தது அன்று இரவே கணவனிடம்' பூரா சமாசாரத்தையும் கூறினாள்

காளிமுத்து வழக்கம்போலவே அங்கு இனிமையாக கிளாரினெட வாசித்துக்கொண்டிருந்தான்

காளி என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். முதலாளி நின்றுகொண்டிருந்தான்.

மெள்ள அவனை வீடு அழைத்துச் சென்றாள் என்றுமே ஒன்றும் பேசாத முதலாளியின் மனைவி அன்று படபடத்துப் பேசியதைக் கேட்டு......

* * * *

ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினான் காளிமுத்து நாலு வருஷத்துக்கு முந்திய சம்பவம் நினைவுக்கு வந்தது அவன் மறக்கவில்லை தினமும் தான் நினைவில் வந்து வந்து வேதனை செய்தது. பயமுறுத்தியது

அவனாக அவளைப் பிரியவில்லையே. திடீரென்று அன்று இரவோடு இரவாக டாக்கீஸை மாற்றவேண்டியிருந்தது. இயற்கையாகவே நிச்சய புத்தியில்லாமல் பழகிய அவன் பச்சையை பிறகு பார்க்கலாம் என்று இருந்ததில் ஆச்சர்யமில்லை.

* * * *

'பச்சை...' என்று கூவிக்கொண்டு கட்டிலிடம் ஓடினான். மங்கம்மா கண்ணீர் பெருக கட்டில் காலில் சாய்ந்திருந்தாள். கீழே அவள் மகள் ஏதோ விளையாடிக் கொண்டிருந்தாள்

"என்னை மன்னிச்சுடு பச்சை... நான் உன்னை மறந்துபோகவில்லை" என்று கூவி அவள் அருகே நின்றான்.

பச்சை கண்விழித்தாள், வாழ்வின் ஒளி மறையும் சமயத்து சிறுவிழிப்பு அது

நன்றாகப் பார்த்தாள். அவர் தான்.........வாழ்வைக் கெடுத்தார் என்று இப்பொழுது ஏன் நினைக்க வேண்டும்? அவள் என்னமோ பேச வாயெடுத்தாள். நெஞ்சுக் குழியிலே வார்த்தை சலனமிட்டன. அவர் வருவார் என்றாகிலும் என்ற நம்பிக்கை நிஜமானதே

ஓடிப்போனவளின் மகன் என்ற பெயர் தன் பிள்ளைக்கு வரக்கூடாதே என்று பயந்திருந்த அவளது கடைசி எண்ணத்திற்குச் சிறு தைர்யம் கிடைத்தது. ஆனால் மகனை அவளிடம் கையைப் பிடித்து ஒப்படைத்தாள் அவ்வளவுதான். எதற்காக அவள் வந்தாளோ அதற்காக அவள் மீண்டும் இந்த உலகை விட்டுச் செல்கிறாள்.

* * * *

"பச்சை!" என்று அவள் சடலத்தின் மீது விழுந்து பச்சைக் குழந்தைபோல வீரிட்டான் காளிமுத்து

அவன் குழந்தை ஒன்றும் அறியாமல் அவள் கால்களைக் கட்டிக்கொண்டு கோ வென விவரம் அறியாமல் கதறியது.

மங்கம்மாள் மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள்.

பூர்விகச் செல்வம்

'ராவி'

2

நமக்குக் கிடைக்கும் கருவிகள்

★

'நம் தமிழகம் எப்பொழுது தோன்றிற்று? தமிழ் மக்கள் எப்பொழுது வாழத் தொடங்கினர்? தமிழ் மொழி எப்பொழுது முளைத்தது?' என்று எவராலும் சொல்ல முடியாது? ஆனால் உலகத்தில் மிகப் பழைய நாடுகளுள் தமிழகம் ஒன்று என்பதையும் தமிழ்மொழி உலகப் பழைய மொழிகளுள் ஒன்று என்பதையும் எவரும் ஒப்புக்கொள்கின்றனர் தமிழகத்திலேயே தமிழின் பழமையைப்பற்றிப் பல வரலாறுகள் கிடைக்கின்றன ஆனால் அவையெல்லாம் சரித்திர ஆராய்ச்சி முறைக்கு ஒவ்வனவல்ல பாண்டக் குழிகள் என்று சொல்லப்படும் சில மிகமிகப் பழங்காலக் குழிகளிலிருந்து சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந் நாட்டு மக்கள் கையாண்டு வந்த சில கருவிகள் கிடைக்கின்றன ஆனால் அவை நமக்குத் தெரிவிக்கும் கருத்துக்கள் மிகச் சிலவே. மொழி வரலாறுகள். கதைகள், நாட்டுப் பாடல்கள் முதலியன மக்களின் வாழ்க்கையைக் காட்டுமே என்றால இவற்றை முறைப்படி ஒருவரும் ஆராய்ந்து எழவில்லை கரூர் முசிறி, கொற்கை. கூடல், உறையூர். புகார் முதலிய நகரங்கள் நம் பண்டைப் பெருமையைக் காட்டுமேயென்றால் அவற்றிற் பல இருந்த இடந்தெரியாமல் முற்றிலும் அழிந்துவிட்டன அல்லது உருத் தெரியாமல் மாறிவிட்டன மிகப் பழைய காலத்து இலக்கிய நூல்கள், நாடக நூல்கள் இசை நூல்கள். விஞ்ஞான நூல்கள் எல்லாம் கடலுக்கு இரையாயின கல்வெட்டுக்களோ பிற்காலத்தில் எழுந்தவை. அன்னியர் எழுதி வைத்த சரித்திரங்கள் நம் வாழ்க்கை முறைகளை ஊடுருவிப் பார்த்து எழுதப்படவில்லை. ஆகவே அவையும் போதிய பயனைத் தரமாட்டா. நமக்கு எஞ்சி நிற்பன நம்முடைய இலக்கிய நூல்களே அவைகளும் வாழ்க்கையை முற்றிலும் சித்தரிக்கும் படங்களாகமாட்டா என்றாலும் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டே அவை எழுந்தன. அவற்றையே நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். இவையே நம் பிதிரார்ஜித சொத்தைக் காப்பாற்றி வைத்த அரும் பெட்டிகள்.

இன்று நமக்குக் கிடைக்கும் தமிழிலக்கியங்களுள் மிகப் பழைமையானவை சங்க இலக்கியங்கள் எனப்படும். சங்க காலத்தை இன்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் என்பர் அன்று எகிப்து கிரீஸ் ரோம், பாலஸ்தீனம். சீனா. இந்தியா என்ற நாடுகளே உலகத்தில் சீர் பெற்று விளங்கி வந்தன இவற்றோடெல்லாம் சங்க காலத்துத் தமிழகம் உறவு பெற்றிருந்தது இச்சங்க நூல்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு இவற்றில் பொய் இல்லை; அழகுக்காகப் புனைந்துரை இல்லை, தெய்வக் கதைகள் அதிகம் இல்லை நூல்களை ஆக்கி உலகத்துக்கு அளிக்க வேண்டுமென்ற பிரசார நோக்கத்துடன் இவை எழுதப்படவில்லை நாட்டில் கல்வி வளம் செழித்திருந்தது, செல்வ வளமும் மேலோங்கியிருந்தது. மக்களுக்குஓய்வும் அமைதியும் நிரம்ப இருந்தன புலவர்கள் தங்கள் மனத்திருப்திக்கும் தங்களை ஆதரிக்கும் பிரபுக்களின் திருப்திக்கும் சிறியனவும் பெரியனவுமான தனிப்பாடல்களைப் பாடினர் தாங்கள் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையுமே அவர்கள் கூறினர். மெருகு கொடுக்கும் அணிகளை அவர்கள் மதிக்கவில்லை சங்க நூல்கள் எனக் கருதப்படும் நீதி நூல்கள் சிறிதளவு காலந் தாழ்ந்தே தோன்றின. குறள் நாலடியார் என்பன இவ்வகையைச் சார்ந்தவை. எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பவை சங்க நூல்களில் முந்தியவை. இவையே நம்முடைய ஆராய்ச்சிக்கு முதலில் பயன்படுபவை.

மேலே சொல்லப்பட்ட சங்க நூல்கள் எழுந்த காலத்தில் வடமொழியாளர்களுடைய கூட்டுறவும் தமிழகத்தில் ஏற்பட்டிருந்தது. அம்மொழியிலுள்ள சிறந்த கருத்துக்களையும் அம்மொழியாளர்களுடைய சிறந்த பண்பாடுகளையும் தமிழகம் மனமார ஏற்றுக்கொண்டாலும் நகரங்களில் வாழ்ந்தவர்களிடமே அவை அதிகமாக விளங்கின மலைகளிலும், புல்தரை வெளிகளிலும். கடலோரங்களிலும், ஆற்றங்கரைகளிலும் வாழ்ந்து வந்த நாட்டு மக்கள் தம் இயல்புகளில் குறையாமல் தம் பழக்க வழக்கங்களையே கையாண்டு வந்தனர். சங்க புலவர்கள் பெரும்பாலும் நாட்டு வாசிகள் நாட்டு மக்களிடையே பழகி வந்தவர்கள். பிரபுக்களையும் அரசர்களையும் காண அவர்கள் சில சமயங்களில் நகர்ப்புறங்களுக்குச் செல்வதுண்டு. ஆகவே அவர்களின் பாடல்களில் நாட்டு நடப்பு, நகரச் செய்திகள் ஆகிய இரண்டும் அவ்வவ்விடத்திற்கு ஒத்த முறையில் உண்மையாகக் காணப்படும் இவைகளே சங்ககாலத்தைப் பற்றி அறிய நமக்குக் கிடைக்கும் சிறந்த கருவிகள்.

முதலில் குறிப்பிட்டிருந்தபடி மிகப் பழங் காலந்தொட்டே வடமொழியாளர்களின் கூட்டுறவுநமக்கு வாய்த்திருந்தது வட நாட்டில் மதம், ஒழுக்கம். ஆகியவை சாஸ்திர ரீதியாக ஆராயப்பட்டு நன்கு வளர்ந்திருந்தன ஜைனம் பௌத்தம் என்ற மதங்கள் அங்கே தோன்றி மக்களின் வாழ்க்கை முறைகளைச் சீர்ப்படுத்தி வந்திருந்தன. வேத மதமும் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது இந்தக் கருத்துககளும் தமிழ் மன்னர்களின் மனத்தையும் தமிழ்ச் சான்றோர்களின் மனத்தையும் ஈர்க்க. அவற்றின் மேன்மைகளை உணர்ந்த அவர்கள் தமிழிலே பல நீதி நூல்களைத் எழுதினார்கள். அவற்றை மக்களும் பின்பற்றி ஒழுகத் தொடங்கலாயினர். இப்படி அமைந்த காலத்தில் நாட்டில் வல்லரசுகளும் சாம்ராஜ்யங்களும் நன்றாக ஓங்கிவளர்ந்த காலம். இஃது ஏறக்குறைய கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளையொட்டியதையும் அதைச் சார்ந்ததுமான காலமாகலாம். இவையே சங்க நூல்களைச் சார்ந்தவையெனச் சொல்லப்படும் கீழ்க்கணக்கு நூல்களின் காலம்.

திட்டப்பட்ட வாழ்க்கையும், செல்வ நிலையும், பொருளாதாரத்

துறைகளும், அரசியலும் கல்வியும் கடவுளுணர்ச்சியும் உச்ச நிலையடைந்த இக்காலத்தை ஒட்டிச் சிலப்பதிகாரம். மணிமேகலை என்ற பெருங் காப்பியங்கள் தோன்றின. இந்த இரண்டு நூல்களையும் நம் பழங் காலத்தைக் காட்டும் பெரும் கண்ணாடிகள் என்னலாம் இவ்விரு நூல்களும் நமக்குக் கிடைத்தது பெரும்பாக்கியம். நம் நாட்டுக் கலைகளையெல்லாம் இவை களஞ்சியம் போல் தொகுத்து வைத்தன.

கி பி ஆறும் நூற்றாண்டுமுதல ஒன்பதாம் நூற்றாண்டுவரையில் நம் நாடு மிகுந்த அறிவு விளக்கத்துடன் தோன்றிற்று எங்கும் சுபிக்ஷம். எங்கும் அறிவு எங்கும் கோயில்கள் எங்கும் பிற கட்டடங்கள் எங்கும் பக்தி. நாயன்மார்கள் ஆழ்வார்கள். இக்காலத்தில் தோன்றித் தம் இன்னிசைப் பாடல்களால் நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டி வந்தார்கள் இவற்றையொட்டிச் சூளாமணி. சிந்தாமணி, பெருங்கதை போன்ற மிக மேன்மையான காவிய நூல்கள எழுந்தன. இந்த நூல்கள் வட மொழி வரலாறுகளைக் கொண்டிருந்தாலும் நம நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை அடிப்படுத்தியே கூறுகின்றன அன்பியும் வட மொழி தென்மொழி என்ற வேற்றுமை இல்லாமல் எல்லாம் ஒரு நெறி, ஒரு பண்பாடு, ஒரு கலை என்ற உணர்ச்சியே நாடெங்கும் மலிந்து கிடந்ததால் இந்நூல்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நம முன்னோர்கள் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்பதை நன்ருகக் காட்டுகின்றன

இவையே நம் பிதிரார்ஜிதத்தின் உண்மை நிலையைக் காட்டும் கருவிகள்.

3
இயற்கை நாகரிகம்

மலை நாகரிகம்

மனிதனுடைய நாகரிக வளர்ச்சி வரலாறு மிக விசித்திரமானது திடீரென ஒரு நாடு நாகரிகத்தில் ஓங்கிவிட்டதென்பதை எங்கும் காணபதற்கில்லை. ஒரு விதையிலிருந்து பெரிய மரம் வளர்வதற்குள் என்ன என்ன வளர்ச்சி முறைகளைக் காண்கிறோமோ அவற்றைவிட அதிகமான முறைகளை நாகரிக வளர்ச்சியிலும் நாம் காணக்கூடும்.

மனிதன் தன் குடும்பத்தோடும் பிற மக்களோடும் சேர்ந்து வாழ வேண்டிய அவசியத்தை உணர்ந்த அன்றுதான் அவனிடம் நாகரிகம் வேரூன்றியது என்று சொல்லலாம் அப்படிப்பட்ட ஆதிக் காலத்திலே மனிதன் எங்கே வாழ்ந்தான்? கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி என்று தமிழர்களுள் மிகப் பழமையான மறவர்களைப்பற்றித் தமிழ் நூல் பேசுகிறது இதிலிருந்து மனிதன் முதலில் கல்லிடையேதான் வாழ்ந்தான். பிறகுதான் மண்ணிடையே வாழத் தொடங்கினான் என்பது ஏற்படுகிறது இதுதான் இயற்கை முறை.

கல் என்பது மலை. மலையில்தான் இயற்கையான வாழ்க்கை வசதிகள் உண்டு மர நிழல்கள், கிளைகள் குகைகள், மலைச் சாரல்கள் இவை வாழ்க்கைக்கு ஏற்ற இடங்கள் உணவுப் பொருள்களும் அங்கே நிரம்ப உண்டு பாரி என்ற மன்னன் பறம்பு மலையை ஆண்டு வந்தான் அம்மலையைப் பகைவர் நீண்ட நாள் முற்றுகையிட்டு அங்குள்ளவர்களைக் கொல்லப் பார்த்தனர். அப்பொழுது பாரியுடனிருந்த ஒரு புலவர் அவர்களுக்கு ஒரு தூது அனுப்பினர். அவனிடம் அவர் சொல்லியனுப்பியதைப் பாருங்கள் "மன்னர்களே! நீங்கள் எத்தனை காலம் வேண்டுமானாலும் எங்கள் மலையைச் சூழ்ந்து நிற்கலாம். வெளியிலிருந்து உணவுப்பொருள்கள் வந்து தான் நாங்கள் பிழைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை வள்ளிக் கிழங்கு, தேன் பலாப்பழம், மூங்கிலரிசி ஆகிய இவ்வுணவுப் பொருள்கள் இயற்கையிலே எங்களுக்கு வேண்டிய மட்டும் கிடைக்கும். எங்களைப் பட்டினிபோட்டுக் கொல்ல உங்களால் முடியாது" என்று அவர் சொல்லியனுப்பினர். இப்படிப்பட்ட இயற்கைவளம் நிறைந்த மலையிடங்களை நம நூல்கள் மிக அழகாகப் பல பாடல்களில் வருணித்திருக்கின்றன இப்படிப்பட்ட பாடல்கள் நூற்றுக்கணக்கில் நம்மிடம் இருக்கின்றன. கலித்தொகையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறிய பாடடின் கருத்தைப்பாருங்கள்.

"பக்க மலைகள் வறுமை என்பதை ஒரு நாளும் கண்டறியவல்ல-அங்குச் சுரபுன்னை மரங்கள் நெருங்கி வளர்கின்றன. அதன் ஓரங்களில் மணம் மிகுந்த காந்தள்கள் பூத்து விளங்குகின்றன அப்பூக்கள் யானைத் தந்தங்கள்போல உருண்டும் திரண்டும் விளங்குகின்றன அருவிகள் ஆரவாரித்துக் குதித்துக்கொண்டு ஓடிப் பள்ளங்களையெல்லாம் நிரப்புகின்றன. மலையுச்சியில் மேகங்கள் தங்கள் நீர்த்துளிகளை மாறுமல் சொரிந்துகொண்டிருக்கின்றன."

மலைபடுகடாம் என்ற பத்துப் பாட்டுப் பாடலில் மலைச்சாரலிலே எழும் இயற்கையான ஓசைகளை இனிமைபட வருணிக்கின்றார்.

"ஆண் யானையானது கருப்பமுற்றிருந்த தன் மனைவிக்கு உணவு ஊட்ட விரும்பி அது இருக்கும் இடத்தை நாடிச் செல்லும்; அந்த யானையை வழியிலே ஒரு புலி மறித்து அதன்மேலே பாய்ந்து அடிக்கும்; அதனைக் கண்ட பெண் யானை தன் சுற்றத்தாரைக் கூவி, அழைத்துப் பிளிறும். கருங்குரங்கொன்று பாறைக்குப் பாறை பாயும் போது அதன் வயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த குட்டி கை நெகிழ்ந்து பிளவுக்குள்ளே விழுந்துவிட அதனையெடுக்கமாட்டாமல் தன் இனத்தாரைக் கூவி தாய்க்குரங்கு அழும். குரங்குகளுக்கு அஞ்சித் தேனீக்கள் ஏறமுடியாத மூங்கில் நுனிகளில் இறால் கட்டியிருக்க அம்மூங்கில் கணுக்களின் வழியாக ஏறிக் குரங்குகள் அவற்றை அழிக்க அழிந்து சிந்தும் அத்தேனைக்கண்டு ஈக்கள புலம்பும்"

பெருங்கதை என்ற நூலிலே உதயணன் தான் காதலித்த வாசவதத்தையோடு ஒரு யானைமீது ஏறி விந்திய மலையைக் கடந்தபோது அவன் சென்ற வழியைப் புலவர் பாடுவதைக் காணுங்கள்:

"மலைக்கற்களினிடையே பிறந்த இரத்தினங்களும் மண்ணுள் பிறந்த —மாசற்ற பசும்பொன்னும், மூங்கிலில் பிறந்த ஒளிவீசும் முத்துக்களும் வெதிரென்னும் ஒருவகை மூங்கிலிற் பிறந்த அருமையான நெல்லும், யானைத் தந்தங்களுட பிறந்த கழுவப்படாத முத்தும், மலைகளிற் பிறந்த வயிரமும் நெருங்கி வழியெல்லாம் கிடந்தன வளைந்த பலாமரங்களிலிருந்து தொங்கும் குடம்போன்ற பழங்கள் வெடித்துச் சுளைகள் உதிர்ந்து கிடந்தன நீண்ட அடிமரத்தையுடைய மாமரங்களில் தொங்கும் கனிகள் தேனைச் சொரிந்தன. கரிய நிறத்தையுடைய மலைவாழைகள் தம் பருத்த குலைகளிலிருந்து பழங்களைத் தோற்றுவித்தன பெரிய தேனிறால்கள் சிதைந்து தேனை அருவிபோல் சொரிந்தது. நீரருவிகள் ஒன்றுகூடி ஆறாக ஓடின அதன் இரு கரைகளிலும் குருக்கத்தி, அதிரல் மணிச்சை, மயிலை மௌவல், ஞாழல். புன்னை, குருந்து கொன்றை, தடவு, பிடவு, முளவு. முருக்கு, மா. மருது சே, சுரா, நறை, நாகம் வழை, வாழை, கதை, ஆல் அரசு, புன்கு, நாவல், கோடல். அனிச்சம், அசோகம், பளிச்சை, பயின், வள்ளி, மால், முதலிய மரங்களும், செடிகளும், கொடிகளும் தம்முள் மயங்கிக்

கிடந்தன காட்டுப்பசு மான் முதலியவை எங்கும் மேய்ந்தன.

சிலப்பதிகாரத்திலே மலைநாட்டில் வாழும் குறவர்கள் ஒரு முறை தங்கள் அரசன் சேரன் செங்குட்டுவன் அருகாமையில் ஓரிடத்தில் வந்து தங்கியிருந்ததைக் கேட்டு அவனைக் காணச் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தூக்கிச் சென்ற கையுறைகளை இளங்கோவடிகள் அழகுபட வருணித்திருக்கிறார். அவற்றிலிருந்தும் நாம் மலைவளமைகளை ஒருவாறு உணரலாம்.

யானைவெண் கோடும், அகிலின் குப்பையும்,
மான்மயிர்க்1கவரியும், 2மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும், சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்,
ஏலவ வல்லியும், இருங்கறி வல்லியும்,
3கூவை நூறும், கொழுங்கொடிக் கவலையும்,
தெங்கின் பழனும், தேமாங் கனியும்,
பைங்கொடிப் படலையும், பலவின் பழங்களும்
4காயமும், கரும்பும், 5பூமலி கொடியும்,
கொழுந்தாள் கமுகின் செழுங்குலைத் தாறும்,
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்,
ஆளியின் 6அணங்கும், அரியின் குருளையும்,
7வாள்வரிப் 8பறழும், 9 மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும், 10குடாவடிக்உளியமும்,
வரையாடு வருடையும், மடமான் மறியும்,
11காசறைக் கருவும், மாசறு 12நகுலமும்,
பீலி 13மஞ்ஞையும், நாவியின் பிள்ளையும்,
கானக் கோழியும், தேன்மொழிக் கிள்ளையும

1. வெண்சாமரை. 2. மது-தேன். 3 கூவைக்கிழங்கினமா, 4. வெள் உள்ளி. 5. பூங்கொடி. 6, குட்டி. 7. புலி. 8. குட்டி. 9. யானைக் கன்று, 10, கரடிக் குட்டி, 11. கஸ்தூரிக் குட்டி. 12. கீரி, 13. மயில்.

ஆகிய இவற்றை வேடுவர்கள் தம் தலைகளிற் சுமந்துகொண்டு மன்னனைக் கண்டனர்.

இப்படி இயற்கை வளங்களால் செறிந்த மலை நாட்டிலே ஆதியிலே குறவர்கள் அல்லது வேடர்கள் என்ற மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் காலையிற் கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக் கொண்டே ஜீவித்துவந்தார்கள் சில இடங்களில் அவர்களே நிலங்களைச் சீர்திருத்தி ஓரளவில் சாகுபடி செய்வதுமுண்டு.

ஐவனநெல், வள்ளிக்கிழங்கு, கரும்பு, கருந்தினை, பெருந்தினை, குரல், இஞ்சி, கூவைக்கிழங்கு, நாகம், ஏலம், அகில், குங்கப்பூமரம், மிளகு, மஞ்சள், தகரம், கடுக்காய், திப்பிலி, நெல்லி சிறுகாய் முதலியன அவர்களுக்குக் கிடைக்கும் உணவுப் பண்டங்கள்.

வேடர்கள் வேட்டையிலே சிறந்தவர்கள், அவர்கள் காட்டிலுள்ள எல்லா விலங்குகளையும் வேட்டையாடுவர் அவர்களின் வேட்டைக்காக நாய்களைப் பழக்கிவைத்திருப்பர். அவற்றின் நிணத்தை நெய்யூற்றிப் பொரிப்பர் கடமான் முள்ளம்பன்றி, உடும்பு இவற்றின் மாமிசத்தில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். அதனைத் துணையாக்கிக் கொண்டு தினைச் சோற்றை ஆக்கி உண்பர். கற்பாறைகளிலே குழித்த உரலே அவர்கள் தினையிடிக்கும் உரல்கள் யானைக்கொம்புகளே உலக்கைகள் மூங்கிற்குழாய்களுக்குள்ளே தேனை ஊற்றி அதனை ஒருவகைக் கள்ளாகச் செய்து அதனைக் குடிப்பர். நெல்லினாலும் ஒருவகைக் கள் செய்ய அவர்களுக்குத் தெரியும். விடியற்காலையிலே அவர்கள் கள் உண்பது வழக்கம். அவர்கள் உணவு ஆக்கும் முறை விந்தையானது பலாவிதைகளை மாவாக்கி. புளியுடன் மோரையும் கலந்து அம் மாவை அதனிற் கரைத்து. அதனிலே மூங்கிலரிசியைப் போட்டுத் துழாவிச் சோறு சமைப்பது ஒருவகை,

இளமகளிர் தினப்புனத்தைக் காப்பர் ஆண்மகள் வேட்டையாடச் சென்றிருக்க, தாய்மார்கள் வீட்டு வேலைகளைப் பார்த்திருக்க இளம் பெண்களே புனம் காவல் காக்கக் கிடைப்பவர். அவர்கள் கிளிகளை ஓட்டியும் அருவியில் விளையாடியும் கானகத்திலுள்ள பூக்களைப் பறித்துச் சூடியும் பொழுது போக்குவார்கள். அக்காலத்தில புனங்காக்கும் ஒருத்தியைத் தனியே கண்ட இளைஞன் அவள்மீது காதல் கொண்டு அவளை மணப்பான். தினைப்புனங் காத்த வள்ளியையே முருகன் கண்டு அவளை மணந்துகொண்டான் என்று புராணம் கூறும்.

குறவர்களின் வாழ்க்கை நிலையைக் குறிக்கும் ஒரு பாடலை இங்கு கவனிப்போம். இதனைப் பாடியவர் குமரகுரு ஸ்வாமிகள்:

கொழுங்கொடியின் 1விழுந்தவள்ளிக்
இழங்கு 2கல்லி யெடுப்போம
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
3தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும மரவுரியும
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேறும்
4விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
5பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற கணிகாலில்6
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே

அவர்கள் வீடுகளைப் பாருங்கள். இதுவும் சுவாமிகள் பாடியதே.

7புல்வாயின் பார்வையையெம்
புலிப்பார்வை இணங்கும்
புதுத்தினை கல் உரறபாறை 8
முன்றில்தொறும் உணங்கும
9 கல்விடரில் வரிவேங்கை
10கடமாவோடு உறங்கும்
கருமலையில் வெள்ளருவி
11கறங்கிவழிந் திறங்கும்
சில்வலையும் பல்வாரும்12
முன்இறப்பில் தூங்கும்
சிறுதுடியும் பெருமுரசும்
திசைதொறும் நின் றேங்கும்
கொல்லையின் மான் பிணையும்இளம்
பிடியும் விளையாடும்
13குறிச்சி எங்கள் குறச்சாதி
குடியிருப்ப தம்மே

1 விழுந்த-தாழ உண்டான. 2 கல்லி-தோண்டி. 3 தேறல்-தேன். 4, விருந்து-விருந்தினர். 5 பாயல்-படுக்கை. 6 வினை-பாவத்தை. 7 புல்வாயின் பார்வை-மானாகிய பார்வை மிருகம. விலங்குகளைப் பிடித்தற்காகப பழக்கப்பட்டு வைக்கும மிருகம. 8 உணங்கும்-காயும 9கலவி ர்-மலைக்குகை. 10 கடமான்-யானை. 11 கறங்கி-ஒலித்து. 12 இறப்பு-கூரையின் தாழ்ந்த பகுதி. குறிசசி-குறிஞ்சி நிலத்து ஊர்.

குறவர்களின் ஊரைச் சிறு குடி என்றும் குறிச்சி என்றும் கூறுவர். அவர்களுக்குள்ளே தலைவன் ஆட்சி முறை முதலியன உண்டு கண்ணப்ப நாயனாரின் பிதா ஒரு குறிச்சித் தலைவன். குறவர்கள் முருகனை வணங்கி வந்தார்கள் அவனுக்கு வேலன் என்ற பூசாரியைக்கொண்டு பூசை போடுவார்கள் வெறியாட்டு என்பது அவர்கள் முருகனுக்குச் செய்யும் ஒரு வகைப் பூசைமுறை. கொடிய பலிகளும் அங்கே இடப்படுவது உண்டு குறவர்கள் இசையிலும் வல்லவர்கள். அவர்கள் பாடிக்கொண்டு குரவை என்னும் ஒருவகைக் கூத்தாடுவார்கள். கடம்பமரம் முருகனுக்கு உரிய ஒரு மரம். அக்கடம்ப மரத்தையே முருகனாகக் கொண்டு அவர்கள் பூசிப்பதும் உண்டு. குழந்தைகளுக்குப் புலிப் பல்லினாற் செய்த ஒருவகைத் தாலி கட்டுவார்கள்.

இம்மலை நாட்டில் ஆதியிலிருந்து மனிதர்கள் சிறுகச் சிறுக நாகரிகம் முதிர்ந்து பிறகு, அம்மலைகளையொட்டிய காடுகளில் வாழத் தலைப்பட்டனர் இங்கும் புல் தரைகள் நிரம்ப இருந்தன இங்கே அவர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் அவர்களுடைய நாகரிகம் வேறு துறைகளில் மாறிற்று.

தொடர்கதை

சொப்பன வாழ்க்கை

'ஆர்வி'

முன் கதை

★

பங்களூரில் தொழிற்சாலை ஒன்றில் மானேஜராக இருக்கிறான் விசுவநாதன். பானுமதி என்ற யுவதியிடம் அவன் கொண்டிருந்த நட்பைச் சந்தேகித்து அவன் மனைவி சுசீலா அவனிடம் சச்சரவிட்டுக் கொண்டு சென்னையிலிருக்கும் தன் சகோதரன் வீட்டுக்கு வருகிறாள். மறுநாளே விசுவத்தின் சகோதரன் சுவாமியும் லீவு நாட்களைச் சென்னையில் கழிக்க வந்து சேருகிறான். இந்த நாட்களில் விசுவம்—பானுமதியின் நட்பு புதிய கட்டத்தை நெருங்குகிறது. சுசீலா வந்தது அவள் சகோதரன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அதே சமயத்தில் சுசீலாவுக்கு எதிர் வீட்டிலிருக்கும் சீதா என்ற பெண்ணின் சினேகம் ஏற்படுகிறது. குமார், சுசீலா, சீதா மூவரும் ஒரு நாள் சினிமாக் காட்சிக்குச் செல்லுகிறார்கள். குமார், சீதாவிடம் யாருக்கும் தெரியாமல் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுக்கிறான். சீதா வேறு இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விடுகிறாள். குமாரும், சுவாமியும், இதனால் மன அமைதி குலைந்து உட்கார்ந்திருக்கின்றனர்.

19

பொழுது புலரும் சமயத்தில் வண்டி அந்தச் சிறிய ஸ்டேஷனில் நின்றது. பரக்கப் பரக்க ஸ்டேஷன் மாஸ்டர் சட்டையைக்கூடச் சரியாக மாட்டிக்கொள்ளாமல் பச்சை-சிவப்புக் கொடிகளைச் சுருட்டி, எடுத்துக்கொண்டு வெளியிலே வந்தார். அந்த வண்டி வந்து நின்றதும் தூக்கக் கலக்கத்துடன் மணியை அடிக்கச் சொல்வதில்தான் அவருக்கு எப்போதுமே குறி. ஆனால் இன்று அவரே அயர்ந்துபோய் நின்றுவிட்டார். 'நம் ஊர் ஸ்டேஷனிலும் இரண்டுபேர் இறங்குவதா, அதுவும் பெட்டி படுக்கைகளுடன் இறங்கி இந்த ஊருக்குள் போகக்கூடியவர்கள் இருக்கிறார்களா? என்ன அதிசயமடா இது!' என்று ஸ்டேஷன் மாஸ்டர் ஆச்சரியத்தில் முழுகிப்போய் அந்தோணிசாமியைக் கூப்பிட்டு மணி அடிக்கச் சொல்லவே மறந்துபோய் விட்டார்.

ரெயில்வே கார்டும், போலீஸ்காரனும் ஸ்டேஷன் மாஸ்டரைக் குசலம் விசாரித்தாகிவிட்டது. ரெயில் கோழியைப்போல 'கொக்கர கூ' என்று ஒரு தடவை இரண்டு தடவை கூவியாகிவிட்டது! ஏன் இன்னும் வண்டி நிற்கிறது? சாவியிருக்கும் 'பௌச்'சைத் தோளில் மாட்டிக்கொண்டு அந்தோணிசாமி அதோ பெட்டியை அல்லவா இறக்கி வைத்துக்கொண்டிருக்கிறான்!

ஸ்டேஷன் மாஸ்டருக்கு உண்மை விளங்கிவிட்டது. அந்தோணிசாமிக்கு வரும் அபூர்வ கிராக்கிக்கு விரோதமாக அவர் அவனை அதிகாரம் செய்ய முடியாது! அதிகாரம் செய்தால் என்றைக்காவது ஒருநாள் அவர் குறட்டைவிட்டுத் தூங்கும்போது எழுப்பாமல் கோட்டை விட்டுவிடுப் போய்விடுவான். ஆகவே அவர் தண்டவாளக் கம்பியைத் தொங்கவிட்டிருந்த இடத்துக்குத் தாவி ஓடினார். அதில் செருகியிருந்த பெரிய ஸ்குரூ ஆணியை உருவி எடுத்து 'டண், டண், டண்' என்று பலம் கொண்ட மட்டும் அடித்தார். அதற்குப் பிறகு பச்சைக் கொடியைப் பாய்ந்து வந்து விசிறினார். கார்டு குழலை எடுத்து ஊத, எஞ்சின் குரல் எடுத்துக்கதற, வண்டி அசைந்தது......நகர்ந்தது; மறைந்து போயிற்று

அன்னிய ஆட்சி இருந்தபோது அந்த ஊர்ப் பிரமுகர் ஒருவருக்காக அந்த ஸ்டேஷன் ஏற்பட்டது. அந்த ஒரே பிரமுகருககாக ஒரு வெயிட்டிங் ரூம்கூட அந்த ஸ்டேஷனுக்கு உண்டு. அதன் உபயோகமே இப்போது வேறு...அந்தோணிசாமியின் செருப்பை நாயிடமிருந்து காப்பாற்ற அந்த ரூம் அபயம் அளித்து வந்தது. மூலையில் ஒரு விளக்குமாறு; எதிர் மூலையில் இன்னொரு விளக்குமாறு, ஓர் ஓட்டை ஜாதிக்காய்ப் பெட்டி. அதன்மேல் ஒரு கிழசல் படுக்கை. கிராமந்தரத்து க்ஷவரக் கொட்டகையில் கிடப்பதுபோல இரண்டு ஓலைத் தடுக்குகள்...

விளக்கு இருந்த இடத்தில் அணைத்து வைத்த பீடித் துண்டுகள்; புகையிலைச் சுருள்கள் முதலியன. வெயிட்டிங் ரூம் இந்த லக்ஷணத்துடன் இருக்க, அதற்குக் காரணமாய் இருந்த பிரமுகரோ தம்முடைய காரில் ஏறிக்கொண்டு பக்கத்திலுள்ள மாயவரம் ஜங்ஷனிலிருந்தே தம் பிரயாணத்தைத் தொடங்குவார். அந்த ஸ்டேஷனில் வண்டி ஏற அவருக்கு என்ன கௌரவக்குறைச்சலோ, நமக்குத் தெரியாது.

நிற்க, ஸ்டேஷனிலிருந்து ஊர். இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருந்தது. அல்லிக்குளமும். ஆல விருக்ஷமும், சவுக்குத் தோப்பும் சம்பா நெல் வயல்களும், சலசலவென்று அரித்துக்கொண்டு ஓடும் பெரிய வாய்க்காலும் ஒட்டுமா மரத்தில் கண்ணுக்குத் தெரியாமல் உட்கார்ந்து யாரையோ கூவியழைக்கும் குயில்களும் 'அக்கோ' குருவிகளும். ஆகா. அந்தக் கிராமக் காட்சி வண்டியிலிருந்து இறங்கிய இரண்டு பிரயாணிகளின் நெஞ்சத்தில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கியது. அவர்கள் ஸ்டேஷன் படியில் காலை வைக்கும்போது அவர்களைப் பார்த்து அந்தோணி சாமி, "அதோ பெரிய ஐயா வண்டியிலே வர்ருங்களே" என்ருன். இதற்குள் ஸ்டேஷன் மாஸ்டரும் வந்திருப்பவர்களை நெருங்கி வந்து டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு பிரயாணிகளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு வண்டியிலிருந்து இறங்கிவந்த பெரியவரையும் கவனித்தார்.



"ஓகோ—உங்க வீட்டுக்குத்தானு? முன்னே எப்பவோ வந்துட்டுப்போனுப்பிலே இருக்கே—உங்க பெண்தானே?" என்ருர்.

பெரியவர் புன்னகையுடன் ஆமோதித்துவிட்டு, 'வாமமா, சுசீலா...அடேடே, சுவாமியாடா நீ?... அடையாளமே தெரியல்லியே' என்ருர்... அந்தோணிசாமியைப் பெட்டியை எடுத்து வண்டியில் வைக்கும்படி சொல்லிவிட்டு ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து, "என்ன ஐயா, அதிசயமாயிருக்கே வண்டி கரெகட்டயத்துக்கு இன்னிக்கு வந்துவிட்டதோ?" என்ருர்.

அவர் முகத்தில் அசடு வழிந்தது.

"சுசீலா, இவர் யார் தெரியுமோ?" என்று ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்துக் கேட்டார் பெரியவர்.

"தெரியல்லியே அப்பா."

"மயிலாப்பூரிலே நம வீட்டுக்கு எதிர்த்தாப்போல..."

"நினைச்சேன்...அந்த ஜாடை இருக்கிறது சீதாவுககு..."

"ஆமாம்; அவளுடைய அண்ணுதான் நான்! எங்கப்பாதான் அங்கே இருக்கிறது" என்ருர் ஸ்டேஷன்மாஸ்டர்.

"உங்க பேரு?"

"சீதாராமன்."

"ரொம்பச் சந்தோஷம் அதான் சீதா கூட நான் வரேன் என்று சொன்ஞர். நான் கேடக சந்தர்ப்பமில்லை. இப்பத்தானே தெரியறது அப்படியா? ரொம்பச் சந்தோஷம்!" என்று கூறிவிட்டு அந்த ஸ்டேஷனை சுற்று முற்றும் பார்த்தாள்.

"ஊரிலே எல்லாரும் சௌககியந்தானே?"

"ஆகா!"

ஸ்டேஷனில் வழக்கமில்லாத வழக்கமாய்ப் பேச்சுக்குரல் கேட்பதனுலோ என்னமோ ஸ்டேஷனுக்குப் பின்புறமிருந்த வீட்டிலிருந்து ஐந்தாறு வயசுப் பையன் ஒருவன், "அப்பா" என்று ஓடி

வந்து தன் தங்கையிடம் அந்நியர் பேசிக்கொண் டிருப்பதைக்கண்டு நின்றுவிட்டான்.

"உங்க பையனு?"

"ஹி......ஹி......ஆமாம்."

"அப்போ நாம்ப போகலாமா?" என்றூர் பெரியவர்.

"எங்க ஜாகையைப் பார்த்துட்டு......" என்றூர் ஸ்டேஷன்மாஸ்டர்.

"இங்கேதானே இருக்கப்போகிறும்........ அப்புறம் ஒரு தடவை வந்து பார்த்தால் போகிறது...என்ன?" என்றூர் பெரியவர்.

தன் வீட்டுக்கு யாரோ உறவினர்கள் வந்ததைப் போல உணர்ந்து பெருமூச்சுவிட்டார் சீதாராமன் முதலில். அவர்கள் வண்டியிலேறிக்கொண்டு ஊருககுள் சென்றபின்புதான் அவர் மனசில் சிறிது ஏமாற்றம் கண்டது. "இந்தச் சனியன் பிடித்த ஊரிலே கொண்டு போட்டான்களே நமமை. ஒரு ஈ, காக்கா இறங்கி வரணுமே—அப்படியே வந்தாலும் நம வீடடுக்கென்று ஒரு பிராணி...சூ...கத்தேரி!" என்று காறித் துப்பினுர் தன் அறையைப் பார்த்துக்கொணடே. "போயும் போயும்

வந்தால் இந்தக் கிழக்கோட்டான் வந்து நிற்கும், அருமையான தன் மாப்பிள்ளையையும் பெண்ணையும் பார்க்க யார் அழுதா இவ வரலேன்னு?'' என்று எப்பவாவது வருகிற தன கிழ மாமியாரை நினைத்துக்கொண்டு மறுபடியும் காறித் துப்பினார்.

அந்தோணிசாமி திரும்பி வந்து, "நானும் இந்த டேசனிலே மூணு வருஷங்களாச்சுங்களே வந்து, இந்த ஐயா ஒருத்தருககிட்டே கலகலன்னு பேசி இன்னைக்குத்தானுங்க பாத்தேன்'' என்று சுசீலாவின் தகப்பனுரைக் குறிப்பிட்டுக் கூறினன்

"சரி, போய் பாயின்டை இறக்கி ஸ்டேஷன் ரூமிலே எரியற விளக்கை அணைச்சு வை! நீ பாட்டுக்குப் போயிட்டயே மணி அடிக்காமே...சொல்லிவிட்டுப் போகப்படாது போ...போ! அந்த வெயிட்டிங் ரூமைச் சுத்தமாய் வை...யாரானும வந்தாலுமில்லே போனுலுமில்லே'' என்ருர் சீதாராமன் தன் கோட்டைக் கழற்றிக்கொண்டே. இனிமேல் ராத்திரிதானே அந்தக் கோட்டுக்கு அவசியம் என்று சுழற்றி ஒரு மூலையில் எறிந்தார் அவர் மனசிலிருந்த பாரத்தையே சுழற்றி எறிவதுபோல் அவருக்கு ஒரு நினைப்பு.

"பொண்ணும் பிள்ளைங்களும் இருக்கறப்போ இந்தப் பாளாப்போன ஊரிலே கிடந்துகிட்டு இந்த ஐயா ஏன் இப்படி திண்டாடறுரு!'' என்ருன் அந்தோணிசாமி!

'அவரும் இங்கே இல்லாமே போயிட்டா இவங்களெல்லாம் இந்த ஊரிலே ஏன் இறங்கப் போருங்க? இந்த ஸ்டேஷனையேகூட எடுத்துடலாம். வேலை, நமககு?'' என்ருர் சீதாராமன், ஆத்திரமும் வேடிக்கையுமாக.

ஸ்டேஷன்மாஸ்டர் கையிலிருந்த டிக்கட்டைப் பார்த்துவிட்டு, "ஒண்ணு தஞ்சாவூருக்கு வாங்கியிருக்கிற டிக்கட்டாய் இருக்கே?'' என்ருர்.

"அந்தப் பையன் அந்த அம்மாளுடைய கொழுந்தனும் நேரே போறவரு பார்த்து டுத்தான் போவோம்னு இறங்கியிருப்பாரு!'' என்ருன் அந்தோணிசாமி.

"ஹூம்! மனுஷன் உத்தியோகம் பார்க்க வேண்டியதுதான் ஆனு இந்த ரெயில் உத்தியோகம் மட்டும் பார்க்கக்கூடாது'' என்று சொல்லிவிட்டு சீதாராமன் உள்ளே போனுர்.

வீட்டுக்குப் போனதும் "யாரோ ஒரு பொண்ணிடம் பேசிக்கொண்டிருந்தேளாமே அந்தப் பெண்தானே வண்டியில் போறது?'' என்ருள் அவர் மனைவி.

"ஆமாம்; ஆமாம்...பெரியவர் இருக்காரே அவர் பொண் வந்திருக்கா!''

"அதான் குழந்தை வந்து சொன்னுன். உங்க கிட்டே வந்து எந்தப் பொண்ணு பேசப்போருள்னு பார்த்தேன். பட்டணத்துலே எதிர் வீட்டிலே இருக்காளே விமலா அவ நாத்தனுர்தானே? பெங்களூரிலே இருக்கான்னு சொல்லிக்கொண்டாளே!''

"அது யார் விமலா! விமலாவோ கமலாவோ அந்தச் சொந்தமெல்லாம் எனக்குத் தெரியாது. நமப சீதாவுக்குக்கூடத் தெரியுமாம!''

"பின்னே என்ன குறைச்சல்? சீதாவுக்குத் தெரியாமே இருந்துடுமா என்ன?''

"ஏன், எதிர்வீடென்ருல் தெரியப்படாதோ?''

"அப்போ விமலாவோடே நாத்தனுர்தான். ரொம்ப ராங்கிக்காரின்னு அவள் அடிக்கடி சொல்வாள் நான் போயிருக்கிறபோதெல்லாம். எங்கே வந்திருக்காளாம் இங்கே?''

சீதாராமன் இதற்கெல்லாம் பொறுமையுடன் பதில சொல்லகூடிய நிலையில் இல்லை ரத்தினச் சுருக்கமாக ஒரே வார்த்தையில், "கேட்டுண்டு வந்து சொல்றேன்'' என்ருர்.

"பின்னே என்னதான் பேசிண்டிருந்தேள் அதெல்லாம் கேட்காமே?'' எனறு வம்புககு வந்தாள் அவள்.

பொழுது விடிந்தால் பொழுது போனுல் வீட்டுக்குள் அவள் முகத்தில் விழித்தாகவேண்டியிருக்கிறது இதற்குள் எவ்வளவு கட்டைதான் ஒருவருக்கொருவர் சண்டை போடடுக் கொள்வது! இவளிடம என்ன பேச்சு!' என்ற தோரணையில் அவர் சோப்புப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஸ்நானத்துக்குக் கிளம்பினர்.

பதினேரு மணிக்குச் சாப்பாட்டையெல்லாம் முடித்துககொண்டு ஊரிலுள்ள தெருப் பக்கம் வந்தார்.

"என்ன ஸார், சாப்பாடு ஆகவில்லையா இன்னும்?'' என்று கேடடுக்கொண்டே பெரியவர் வீடடுத் திண்ணையில் உட்கார்ந்தார்.

பெரியவர் அவரை வரவேற்ரூர். சுவாமி வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனுன்.

"யார் இது? உங்க பொண்ணுக்கு......''

"மைத்துனன்!...தஞ்சாவூருக்கு லீவுக்குப் போகிறவன் வழியில் இரண்டு நாள் இறங்கிவிட்டுப் போகலாம் என்று...''

'ஆமாம் ஆமாம்...நியாயந்தானே? இன்னும்...''

"கல்யாணம் ஆகல்லே...ஆகணும்!'' என்ருர்

பெரியவர். சீதாராமன் அதன் பிறகு சுவாரஸ்யமாய்ப் பேசலானார்.

20

சுப்பண்ணாவை எல்லோருமே அந்த ஊரில் 'பெரியவர்' என்றுதான் அழைத்தனர். குணத்திலும் சரி, பிடிவாதத்திலும் சரி அவர் உண்மையில் பெரியவர்தான். வருஷத்துக்கு அறுநூறு கலம் நெல் விளையும் பூமியும் தெருவில் இரண்டு மனைக்கட்டுகளும் இருந்தன. அதனால் அவர் பெரியவராகிவிடவில்லை. அவரைவிட அந்த விதத்தில் பெரியவர்கள் இரண்டொருவர் உண்டு. எல்லாரிடமும் அந்தரங்க அபிமானமும் அன்பும் கொண்டிருப்பதில் அவர் பெரியவர். அதிகமாய் யாருடனும் பேசமாட்டார். கட்டுப்பாடு என்று சொல்லிக்கொண்டு வீண் வம்புக்கு உட்படாமல் சமரஸம் செய்து வைப்பதில் அவர் பெரியவர். அவர் தலையிட்டு ஒரு முடிவு சொல்லிவிட்ட பிறகு மீறிப் போனால் அவர் விடமாட்டார். அவரைத் தன் நிலையிலிருந்து அசைக்க ஒருவராலும் முடியாது. பிடிவாதம் இதில்தான். பெண்ணாகட்டும் பிள்ளைகளாகட்டும், ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் சின்ன மனிதர்களாகட்டும், யாரானாலும் அவரிடம் இது விஷயத்தில் கெடிதான். பிள்ளைகள் உத்தியோகம் பார்க்கிறார்கள். பெரிய இடத்தில் சம்பந்தம் செய்திருக்கிறார். அப்படியெல்லாம் இருந்தும் கிராமத்தையும் அந்த வீட்டையும் விட்டுச் செல்லாமல் வயசான சிறிய தாயாரும் அவரும் மட்டும் இங்கிருந்து வந்தது அவர் மதிப்பைச் சிறிது அதிகமாக்கியே விட்டிருந்தது. சுப்பண்ணாவின் காரியங்களுக்கும் பேச்சுக்கும் ஒரு நியாயம் இல்லாமலிராது. தனக்கென்று ஒரு பற்றுதல், ஆசை இதெல்லாம் அவரிடம் சிறிதும் கிடையாது. கிராமத்தில் அவருடைய நேர்மையில் சிலருக்கு வெறுப்போ வருத்தமோ இருக்கலாம். அதையெல்லாம் அவர் லட்சியம் செய்பவரல்ல. அவர் வரையில் பிறருடைய வருத்தமும் வெறுப்பும் பயனற்றவைகளாகத்தான் இருக்கும். சுசீலா இதையெல்லாம் நன்கு அறிவாள்.

இதைப்பற்றித் தீவிரமாக ஆலோசித்த பின்பே சென்னையில் செய்த தவறை மீண்டும் இழைக்கக் கூடாது என்று முன் ஜாக்கிரதையாக இருக்க எண்ணினாள். அன்று சாயங்காலம் சுப்பண்ணா சாவகாசமாய் அவளை விசாரிக்க வந்தபோது அவள் ஆதியோடு அந்தமாய் எல்லாவற்றையும் கூறினாள்.

"அப்பா—இப்படி எனக்கு நேரும் என்று நான் எண்ணவேயில்லை. எவ்வளவோ பெருமையாக, கௌரவமாக இருந்தேன்-இனிமேல், இனிமேல்...." என்று மேலே சொல்லமுடியாமல் விசும்பினாள்.

சுப்பண்ணா நிதானமாக அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு "நடந்தது நடந்துவிட்டது. ஊரிலிருந்தபடியே ஒரு வரி எழுதியிருந்தால் தீர்ந்துபோகிற விஷயம். பெண்களுக்குப் பொறுமை வேண்டும். அவள் பொங்கி எழுந்துவிட்டால் நிலைமை பழையபடி ஆக ரொம்பச் சிரமப்படும். என்னவோ ஆகட்டும் பார்க்கலாம்" என்றார். சுவாமி கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தான். சுசீலாவின் சிறிய பாட்டி பக்கத்திலிருந்து அவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் நெஞ்சு தவித்தது. தாயில்லாப்பெண் என்ற எண்ணத்தினால் அவளிடம் கொள்ளை ஆசை வைத்திருந்தாள் அவள். "நாயாட்டுமா, கதறக் கதற வந்து அழைச்சிண்டு போகிறவரைக்கும் சும்மா விடலாமோ அவனை!" என்றாள் அவள் கோபத்துடன். எப்படி விசுவத்தைக் கதற அடிப்பது என்று அவளுக்கு வழி தெரியாது. ஆனாலும் சுசீலா அந்த வார்த்தைகளினால் ஆதரவு கொண்டாள். 'பாட்டி, உன் வேலையைப் பார். இதிலெல்லாம் உன் மனசை செலுத்திக் கஷ்டப்படாதே. எப்படி ஆகிறதோ ஆகட்டும். அதற்கு நான் தயார். நீ ஏன் வருத்தப்படுகிறாய்?" என்றாள்.

"என் குழந்தை கண்ணைக் கசக்கினால் அவன் விடிந்து போவானேன்?" என்று இரைய ஆரம்பித்தாள் பாட்டி.

"சரி, சரி—உம்...மூச்சுக் காட்டாதீர்கள்!" என்று அடக்கினார் சுப்பண்ணா! பொன்னுப்பாட்டி எழுந்து போய்விட்டாள். சுசீலாவின் மனப் பாரத்தை யாரோ அகற்றிவிட்டதுபோலிருந்தது. அவள் சின்னஞ் சிறு குழந்தைபோலப் பாட்டியைக் கூப்பிட்டு கையில் சாதம் எடுத்துப் போடச் சொல்லிச் சாப்பிட்டாள். இரண்டாம் வேளை டிபன்! புக்ககச் சிறையிலிருந்து விடுபட்டு வந்த பக்ஷியைப்போலக் கொல்லைக்கும் வாசலுக்கும் போய்விட்டுவந்தாள். மாதுளங்கன்று பெரிதாகப் போயும் சரியாகக் காய்க்கவில்லையே என்று பாட்டியிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்துபோனாள். கொல்லையிலிருந்த ஒட்டுமா மரம் காய்க்கிற பருவத்தில்தான் வந்திருப்பதை எண்ணிக் குதூகலித்தாள் அவள். ஒரு காய்கூடத் தின்றதில்லையாம். இந்த வருஷம்தான் அந்தப்பாக்கியம் தானாக வந்து வாய்த்திருக்கிறதாம்!

அஞ்சலைக்குப் பிள்ளை இல்லை என்று குறைப்பட்டுக்கொண்டிருந்தாளே அது என்ன ஆயிற்று, என்று விசாரித்தாள்.

"பொறந்துதுடியம்மா! பொறந்தது! இருக்கப்படாதோ! தோசிகளுக்கு ஒட்டலே...மறுபடியும் நாலு மாசம்போல இருக்கு" என்றாள் பொன்னுப்பாட்டி. அவளைப் பார்க்க சுசீலாவுக்கு ஆவலாயிருந்தது. "இங்கே வராளோல்லியோ?" என்று கேட்டாள்.

"வராமே என்ன? நீ வந்திருக்கிறது தெரிஞ்சா அவளுக்கு அங்கே எப்படி இருப்புக்கொள்ளும்!" என்றாள் பாட்டி. "கண்ணுச்சாமியைக்கூடக் கண்டு, 'குழந்தை வந்திருக்கடா' என்று சொன்னேன். பாரேன் இன்னும் சித்தே கழித்து இரண்டு பேருமே ஓடிவறதை" என்றாள் மீண்டும்.

சசீலாவின் மனம் சிட்டுக் குருவியைப்போன்று 'ஜிவ்'வென்று பறக்கவாரம்பித்தது. தெருவிலுள்ள ஒருவரை விடாமல் விசாரித்துத் தெரிந்துகொண்டாள். எல்லாரையும் அவள் நாளைக்குப் பார்ப்பாள்; விசாரிப்பாள். ஆனால் அவர்கள் தன்னை விசாரித்தால் என்ன சொல்வது? செய்வது? மூச்சுக் காட்டக்கூடாது என்று அப்பாவே சொல்லியிருக்கிறாரே, அதுதான் மந்திரம்! 'மூச்சுக் காட்டக்கூடாது!'

அஸ்தமிக்கும் சமயத்தில் சுவாமி படத்துக்கு எதிரே விளக்கு ஏற்றி நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்தபோது வாசலில் விசுவத்தின் பேச்சுக் குரலைப் போலக்கேட்டு அவளுககுச் சொரேர் என்றது. விசுவமா அது? இல்லை, சுவாமி! அசைப்பில், தோற்றத்தில், பேச்சில், பாவனையில் அவன் விசுவத்தைக் கொண்டிருந்தான் அந்தப் பேச்சின் ஒலியிலே விசுவத்தின் அழுத்தமான கட்டைத் தொண்டையின் சப்தம் கலந்திருந்தது. சுசீலாவின் மனம் அமைதி பெற ஒரு நாழிகை பிடித்தது சுவாமி அப்பாவிடம் பேசிக்கொண்டிருந்தான்.

"வாய்க்கால் ஆறுபோல இருக்கிறதே ஊர் பெரிய சோலைபோல இருக்கிறதே! காற்று தலையைப் பிய்த்துக்கொண்டு போகிறதே!'

எல்லாம் அவனுக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது. சுசீலா பெருமூச்சுவிட்டாள். சுவாமியின் உள்ளந்தான் எப்படிப்பட்டது? எவ்வளவோ தடவை அவள் தடுத்துப் பார்த்தாள்; கோபித்துக்கொண்டாள். சென்னையில் நேர்ந்த அவமானம் போதும் என்று ஜாடையாகவும் சொல்லிப்பார்த்தாள். சுவாமி எதையாவது காதில் வாங்கிக்கொண்டால் தானே? கள்ளங்கபடற்ற அவன் உள்ளத்திலே உலகத்தின் சந்தேகப் பார்வை பதியவில்லை அவன் எவ்வளவு சிறியவன்! மன்னியிடம் அவனுக்கு எவ்வளவு மரியாதை! ஆனால் உலகம் இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் அதற்கு அவன் என்ன செய்வான்? அவனுக்கு அதெல்லாம் புரியவேவில்லை. சுசீலா அப்பாவிடம் சொன்னது ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அவனைப்பற்றிச் சொல்ல வந்தபோது, "எங்கள் மனஸ்தாபம் இவனுக்குத் தெரியாது" என்றே சொல்லிவிட்டாள் ஆயினும் சுவாமியின் மனசில் எதுவுமே தங்காது அப்பா கேட்டால் அவன் தன் நிலைமையை விளக்கிச் சொல்ல ஆரம்பித்து விடுவான். அப்போது சுசீலாகூடப் பொய் சொன்னவளாகி விடுவாள் தன் தந்தையின் ஆதரவைப் பெற எவ்வளவு சொல்லவேண்டுமோ அதை மட்டுமே அவள் சொன்னாள் சுவாமியின் மனம் அடிபட்டுத் தன்னைக்கண்டு இரங்கி பச்சாத்தாபத்தினாலேயே தன்னைவிட்டுப் பிரியாமல் இருக்கிறான் அதனாலேயே கிருஷ்ணனுக்கும் தனக்கும்மனஸ்தாபம் ஏற்பட்டது என்பவைகளை அவள் சொல்லவில்லை. அது அவளுக்கு மட்டும்தான் தெரியும் பிறர் அதை உண்மையென்று நம்ப முடியாது; உணர முடியாது. இப்படி உலகத்தில் எங்குமே நேர்வதில்லை நேர்ந்தாலும் யாரும் இதற்கு இடம் கொடுப்பதில்லை; அநுமதிப்பதும் இல்லை. இதையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். சுவாமியை எப்படி அவள் தன்னிடமிருந்து விலக்குவது, விரட்டுவது? அவனோ எல்லாம தெரிந்த சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தான். அவனுக்கு எப்படி உள்ள நிலைமையின் உண்மைத் தன்மையை விளக்கிச் சொல்வது?

விளக்குச் சுடர்விட்டது அவள் உடனே சுவாமியை உள்ளே கூப்பிட்டு பாட்டியிடம் போய் எண்ணெய் வாங்கி வந்து விளக்குக்கு விடும்படி சொன்னாள் அப்பாவிடம் அதிகம் அவனைப் பேசவிடாமல் செய்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவனை ஊருக்கனுப்பவேண்டும். என்று தீர்மானித்துக்கொண்டாள்.

"மன்னி, பங்களூர் கெட்டது இந்த ஊரைப் பாரேன்! என்ன ஜோராய் இருக்கிறது!" என்றான்.

"ஆமாம் ஆமாம் என்றாள் அவள்.

"காலையில் பார்த்த ஸ்டேஷன் மாஸ்டரை வழியில் பார்த்தேன் அவர் தான் எல்லாவற்றையும் சுற்றிக் காட்டினார்!"

"சரிதான்!"

"அவர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் பிரமாத உபசாரமெல்லாம் செய்தார்..."

"ஊஹூம்...டிபன் ஏதாவது-?"

"காப்பி!"

"தேவலையே...வந்ததும் வராததுமாய் சிநேகம் பிடித்துவிட்டாய் போலிருககிறதே."

"உன்னை அழைத்துக்கொண்டுபோக நாளைக்கு அவர் சம்சாரம் இங்கே வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாள்."

"என்னையா?"

"...ம் .."

"ஏது ஏது? அவள் எப்படி இருக்கிறாள்?"

"அவள் எப்படியோ இருக்கட்டும் நிச்சயம் உன்னைப்போல இல்லை! அதுமட்டும் தெரியும் எனக்கு! ஸ்டேஷன்மாஸ்டரைக கண்டு அந்தோணிசாமி பயப்படுவான். அவர் கொஞ்சம் பேசாமலிருந்தால் ரெயில்கூட அவுட்டரில் நின்று அவரைக் கூப்பிடும். ஆனால் வீட்டில் தோப்புக்கரணம் போடு என்றால் 'உம், எண்ணிக்கிறயா?' என்று கேட்பார் போலிருக்கிறது..."

சுசீலா இதைக்கேட்டு நகைத்தாள். "காப்பியைக் குடித்துவிடடுக் குறை சொல்லுவதா?" என்றாள் பிறகு.

"விமலாவுக்கு அவள் சிநேகிதமாம்! போதுமோ, இல்லையோ! எப்படி இருப்பாள் என்று பாாத்துக் கொள்ளேன்!"

"எந்த விமலா!"

"சாக்ஷாத் உன் மன்னி விமலா! அங்கே வரும்போது போகும்போது பழக்கமாம்!"

சுசிலாவின் சிரிப்பெல்லாம் எங்கேயோ பறந்து போய்விடடது சிடு சிடு என்று கோபம் வந்தது. ஆனால் யாரிடம் தன் கோபத்தைக் காட்டிககொள்வது? பேசாமல் எழுந்து உள்ளே சென்றாள். சுவாமி வாசற் பக்கம் சென்றான் சுசீலாவின் கோபம அவனுக்குச் சிறிதும் விளங்கவேயில்லை.

(தொடரும்)

அன்புள்ள கீதாவுக்கு!

முன் கடிதத்தில் ரங்கராஜன் என்ற ஒரு பையனைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேனே. அவனும் அப்படி ஒன்றும் லேசுப்பட்டவனில்லையாம். ஒரு பெரிய ஜமீன்தாருடைய பிள்ளையாம். ஜமீன்தாருக்கு மூன்று மனைவிகள் 'தவறிப்போய்' இப்பொழுது நான்காவதாக ஒரு மகராஜியைக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறாராம். ஜமீன்தாருக்கு வயது ஒன்றும் அதிகம் ஆகிவிடவில்லையாம். அறுபதுதான் ஆகிறதாம். மூத்த மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டுப் போய்விட்டாளாம். இரண்டாவது மனைவி கலியாணமான மூன்றுவது மாதமே இறந்துவிட்டாளாம் மூன்றுவது மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுதது விடடு குழந்தை பிறந்த பன்னிரண்டாவது நாளே இறந்துவிட்டாளாம்.

அப்பொழுது ஜமீன்தாருக்கு வயது முப்பத்தி எட்டாம. அடுத்தடுதது மூன்று மனைவிகள் இறந்துவிடவே சரி! சரி! நமக்கும் மனைவிக்கும் பொருத்தம இல்லை இனி கல்யாணமே வேண்டாம்' என்று ரொம்ப நாள் வரையில் கல்யாணமே செய்துகொள்ளாமல் இருந்து விட்டாராம்.

'உங்களுக்கென்ன ஸார்! பணமில்லையா? அந்தஸ்தில்லையா? வயது தான் என்ன அப்படி 'மாளாத வயது ஆகிவிட்டதா? இன்னும நாற்பதுகூட ஆகவில்லை. பேசாமல் இன்னொரு கல்யாணத்தைச்செய்துகொள்ளுங்கள் என்று அவருடைய நண்பர்களும் உறவினர்களும் நச்சரித்துவிட்டார்களாம் ஆனால் மனுஷ்யன் கொஞ்சம கூடப் பிடிகொடுத்தே வார்த்தை சொல்லவில்லையாம்.

14

'பாவம்! அதுகள் இன்னும் யாரையாவது கல்யாணம் செய்து கொண்டாலும் ஆயுசோடாவது இருக்குங்கள். நம்மை மணந்து கொண்டு எதற்கு அதுகள் அலபாயுசாக மாளவேண்டும்? என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு, எனக்கென்னவோ மனசு சரியாக இல்லை, காரணம் என்னவென்று கேட்காதீர்கள் எனக்கே சொல்லத் தெரியவில்லை. கல்யாணப் பேச்சை மாத்திரம் என் காதில் போடாதீர்கள் என்று கேட்பவர்களுககுப் பதில் சொல்லிவிட்டாராம்.

மூத்த மனைவியின் பிள்ளை வகுப்புககு இரண்டு வருஷத்துக்குக் குறையாமல் மூன்றுவது பாரம் வரையில் படித்துவிட்டு, 'மைனர்களுடன்' சேர்ந்துகொண்டு வீட்டு வழியே திரும்பிப் பார்க்காமல் லீலா விநோதங்கள் புரிந்து வருகிறுனும்.

மூன்றுவது மனைவிபெற்றடுத்த பிள்ளைதான் ரங்கராஜன். முதல் பிள்ளை தான் உருப்படாமல் போய்விட்டானே, இவனையாவது நன்ருகப்படிக்கவைக்க வேண்டுமென்று இவனுடைய படிப்பு விஷயத்தில் ரொம்பவும் அக்கரை எடுத்துக்கொண்டாராம், ஆரமபத்தில் கொஞ்சம் சுமாராகத்தான் இருந்தானும். 'வர வர மாமியார்...ஆனுளாம்' என்று சொல்வர்களே அந்த மாதிரி வயது ஆக ஆக முதல் பிள்ளையின் குணங்கள் எல்லாம் இவனிடம் காண ஆரம்பிததுவிட்டனவாம்.

தகப்பனுருடையபேச்சைக் கேட்பது கிடையாது ஏதாவது சொன்னுல் எதிர்த்துபேசுவது ரொம்பவும் அடங்காப்பிடாரியாகப் போய்விட்டானும்.

இந்த சந்தர்ப்பத்தில் ஜமீன்தாருக்கு ஒத்தாசையாய் இருந்த அவருடைய மூத்த சகோதரியும் இறந்துவிட்டாளாம். இவள் பால்யத்திலேயே விதவையாகிவிட்டாளாம். குழந்தை குட்டிகள் ஒன்றும் கிடையாதாம். கிடைத்த ஜீவனும்சத்தைச் சகோதரனிடம் (ஜமீன்தார்) கொடுத்துவிட்டு அவர் வீட்டிலேயே அவருக்கு ஒத்தாசையாய் இருந்து வந்தாளாம். ஜமீன்தாரும், அவருடைய பெற்றோர்களுக்கு அவரும் அவருடைய சகோதரியும், ஆக இரண்டே பேர்கள்தானும் பெற்றோர்களை பால்யத்திலேயே இழந்துவிட்டாராம். சகோதரி இருந்தவரையில் அவருக்கு யாதொரு கஷ்டமும் தெரியவில்லையாம். அவளும் இறந்துவிடவே ஜமீன்தாருககுக் கையே ஒடிந்த மாதிரிபோய்விட்டதாம். பிள்ளைகளும் ஒன்றும்ஸாரமில்லை. இதுகள் தன்னுடைய பேச்சைக் கேட்காததுடன் தன்னைச் சரியானபடியும்ரட்சிக்காதுகள்என்ற பயம் வேறு ஏற்பட்டுவிட்டதாம்.

இந்த சமயத்தில் தான் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளவேண்டியதின் அவசியம் தெரிந்ததாம் வயது 56 ஆகிவிட்டதாம். இருந்தால் என்ன?

பெரிய ஜமீன்தார் பார். 'ஊம்' என்றது தான் தாமதம். போட்டியின் மேல் போட்டியாகப் பெண்களின் ஜாதகங்கள் வந்து குவிய ஆரம்பித்துவிட்டனவாம். கடையிசில் ஒரு பெண்ணைத்தேர்ந்தெடுத்துக் கல்யாணம் செய்துகொண்டாராம் நான்காவது அகமுடையாள் வீட்டுக்கு வந்து நான்கு வருஷங்கள் ஆகிறதாம்.

இதன் மத்தியில் ரங்கராஜனுடைய தொந்திரவு வீட்டில் சகிக்க முடியவில்லை. எல்லோருமே ஆச்சரியப்படும்படியாக எப்படியோ எஸ். எஸ் எல். ஸி பாஸ் செய்துவிட்டான் அவன் 'பெயில்' ஆகப் போய்த் தொலைந்து வீட்டிலேயே இருந்துகொண்டு பிராணனை 'வாங்'கப் போகிறானே யென்று ஜமீன்தார் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்தாராம். ரங்கராஜன் பாஸ் செய்துவிட்டான் என்ற செய்தி கேட்டதும்தான், அவா காதுகளில் அமிர்த வர்ஷம் வர்ஷிக்கிற மாதிரி இருந்ததாம் எதற்குத் தெரியுமா? அவனை வீட்டில் இல்லாமல் மேலே காலேஜுப் படிப்புககு சென்னைக்கு அனுபபிவிடலாம் பார், அதற்காகத்தான.

முதலில் ரங்கராஜன் படிப்பு அத்துடன் போதும் என்று சொன்னானும். அப்புறம் யார் யாரையோ கொண்டு நல்ல வார்த்தைகள் சொல்லச் சொல்லி மேல்படிப்புக்குச் சென்னைக்கு அனுப்புவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டதாம்.

பட்டணத்துக்கு வந்து ரங்கராஜன் நடத்துகிற வாழ்க்கையைப்போல மகாராஜாக்களின் பசங்களால்கூட நடத்த முடியாதாம. பணததைப் பணம் என்று கருதியா செலவழிககிறான்! ஜலம் மாதிரி வாரி இறைக்கிறானும் ஜமீனை அழிந்துவிட்டாலும்சரி (இப்பொழுதுதான் சட்டம் வந்துவிட்டது. அப்பொழுது இதெல்லாம் ஒன்றும் இல்லை பார்)அவன் இங்கு வநது தொந்தரவு செய்யாமல் இருந்தால்போதும் என்று ஜமீன்தாரும் அவன் கேட்பதற்கு முன்னாடியே பணத்தை அனுப்பி வந்தாராம்.

'கல்கத்தாவில் 'ஆர்ட்' எக்ஸிபிஷனும். காலேஜிலிருந்து சில பிள்ளைகளும புரொபஸாகளும் போகிறார்கள் நானும போகப் போகிறேன். செலவுக்கு இருநூறு ரூபாய் அனுப்பவேண்டும் என்று தகப்பனுருக்குக் கடிதம எழுதுவானும் ரங்கராஜன்.

'அவசியம் போகவேண்டியதுதான், பார்க்கவேணடியதுதான். முதல் வகுப்பிலேயே போ மூன்றுவது வகுபபில் ஒரே கும்பலாக இருக்கும், அத்துடன் கடைசி சமயத்தில் போய் டிக்கெட கேட்டால் அகப்படுகிறதோ இல்லையோ இரண்டுநாள் முன்னதாகவே ஸீட்டை ரிஸர்வ் செய்துகொண்டுவிடு' என்று ஜமீன்தார் தந்திமணியார்டராகவே அனுப்பிவிடுவாராம்.

எதற்காக? பையனுக்கு வீட்டு நினைவே வராமல் இருபபதற்காகத்தான் முதலில் ஏதோ இனிமேல் கல்யாணமே வேண்டாமென்று இருந்துவிட்டாரே தவிர நான்காவது இளையாள் வந்த பிறகு அவள்மீது அவருக்கு ஏற்பட்டுள்ள ஒரு மோகத்தைச் சொல்லியே முடியாதாம், போயேன் அவளுக்கு இவர்மீது அவ்வளவு ஆசை இருக்கிறதோ இல்லையோ அவளமீது இவருக்கு இருக்கும் ஆசையின் அளவை இவ்வள்வு அவ்வளவு என்று சொல்ல முடியாதாம் எங்கள் பெரிய மாமா சொல்கிறமாதிரி ஏற்கெனவே கிழவர்களுக்குப் பெண்டாட்டிகள்மீது அசாத்ய ஆசை. அவர்கள் ஒரு நிமிஷம் தங்கள் பார்வையில் இல்லாவிட்டால் ஏய், ஏய் எங்கேயடி போய்த் தொலைந்தாய்? தாகம் நாக்கை வறட்டுகிறது. சுடச்சுடக்கொஞ்சம் வெந்நீர் கொண்டுவா என்பார்களாம். அல்லது 'அலமாரியில் மூக்குக் கண்ணாடி வைத்திருக்கிறேன். அதையும் பஞ்சாங்கத்தையும் எடுத்துக்கொண்டு வா' என்பார்களாம். அதுவும் இல்லாவிட்டால் 'கொடியில் சிட்டக் கரைத்தளுவம் (டவல்) இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வா' என்பார்களாம். அதாவது எப்படியாவது அவர்கள் கூடவே இருந்துகொண்டு அவர்களுடன் தொண தொணவென்று ஏதாவது பேசிக்கொண்டிருக்கவேண்டும. அவர்களே அப்படியிருக்கும்போது இளையாளாகவும் இருந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா?

எதற்காக இதெல்லாம் இவ்வளவுதூரம் என்று கேட்கிறாயா? ரங்கராஜன் சென்னையில் எந்த தினுசில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பான் என்ற ஒரு அபிப்ராயம் உன மனதிலும் ஏற்படுவதற்காகத்தான்.

ரொம்பபேர், 'இவன் கள்ள நோட்டு கிள்ளநோட்டு ஏதாவது போட்டுவிட்டானோ? இல்லாவிட்டால் இவவளவு ஆடம்பரமாய்ச் செலவழிகக முடியாது' என்றுதான் சந்தேகப்பட்டார்களாம்.

ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தால் பத்து ரூபாய்க்குக் குறைந்து பில்லை கையால் தொடுவது கிடையாதாம் பீச்சுக்குச் சென்றால் 'பட்டாணி, வேர்க்கடலையா? அந்தக் கூடை' முழுவதுக்கும் அப்படியே என்ன கேட்கிறாய்? பச்சை திராக்ஷையா? அந்தத் தட்

டோடு அப்படியே மொத்தம் என்ன சொல்கிருய்?' என்ற இதேமாதிரி பேரம்தானும். பத்து பேருக்குக் குறையாமல் எப்பொழுதும் அவனுடன் சுற்றிக்கொண்டே இருப்பார்களாம். சினிமா, டிராமா, சங்கீதக்கச்சேரி ஒன்று தவறமாட்டானும். அவன் படிப்பதற்காகவா பட்டணம் வந்திருக்கிருன்? இதையெல்லாம் அனுபவிப்பதற்காகத்தான் வந்திருக்கிருன். 'இங்கே தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும். அவன் கண் மறைவில் எதையாவது தொலைத்துக்கொண்டு போகட்டும்' என்று தகப்பனுரும் இதற்கெல்லாம் சம்மதித்துத் தலையில் தண்ணீரைத் தெளித்து அனுப்பிவிட்டார் அவன் யாருக்குப் பயப்பட வேண்டும்? வேண்டிய பொழுது செலவுக்குப் பணமும் கிடைத்துக்கொண்டிருப்பதால், சுயேச்சையாக மனம் போனபடி 'கோவில் ரிஷபம்' மாதிரி திரிந்து கொண்டிருக்கிருன்.

பேர்வழி பார்ப்பதற்கு அழகாகவும் கம்பீரமாகவும் இருப்பானும். என்னதான் ஆயிரம் அக்கிரமங்கள் செய்தாலும் ஒரு ஜமீன்தாரன் இல்லையா!

இப்படிப்பட்ட சமயத்தில்தான் திடீரென்று ஒருநாள். மருண்டு மருண்டு திரியும் காஞ்சனுவின் அந்த நேத்ர வண்டுகள் ரங்கராஜனைச் சுரீரென்று கொட்டினவாம். அவ்வளவுதான். பேர்வழி அந்தக் கொட்டுதலின் வலியைத் தாளமுடியாமல் தவியாய்த் தவித்தானும். அதற்கு மருந்து அவளை நோக்கி, 'கிருதார்த்தனுனேன் நீயே கதி' என்ற காதல் கீதத்தைத் தன்னுடைய கண்களின் மூலம் தெரியப்படுத்துவதைத் தவிர வேறு கிடையாது என்பதை மறுக்ஷணமே தெரிந்துகொண்டு விட்டானும்.

அன்றிலிருந்து காஞ்சனுவும் ரங்கராஜனும், நகமும் சதையும், பூவும் மணமும், தந்தியும் நாதமும், இன்னும் என்னவெல்லாமோ சொல்வார்களே அந்தமாதிரி ஒருவர்க்கொருவர் நடந்துகொண்டார்களாம். அதிகம் சொல்வானேன். காஞ்சனுவின் மீது அவன் தன் பிராணனையே வைத்திருந்தானும.

காஞ்சனுவும் ரங்கராஜனே கதி என்ற தோரணையில்தான் அவனிடம் பழகி வந்தாளாம். காஞ்சனு, கோபாலனிடம் நட்பு கொண்டிருப்பது ரங்கராஜனுக்குத் தெரியாது

வழக்கம்போல் ரங்கராஜன் அன்று காஞ்சனுவின் வீட்டுக்கு வந்திருந்தானும். வெளியில் கிளம்புவதற்காக டிரெஸ் செய்து கொண்டு வர காஞ்சனு உள்ளே சென்றிருந்தாளாம.

அப்பொழுதுதான் கோபாலன் அனுப்பியதாக ஒருவன் ஒரு கடிதத்தைக் காஞ்சனுவின் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிருன். அதை ரங்கராஜன் வாங்கினுனும், படித்துப் பார்த்தானும். முன் கடிதத்தில் போலீஸார் கையில் அகப்பட்டதாக எழுதியிருந்தேனே, அந்தக் கடிதம்தான் இது.

'காஞ்சனு! நீ என்னை வஞ்சித்து விட்டாய். இது ஏதோ விபரீதத்தில்தான் போய் முடியப் போகிறது, ஜாக்கிரதை!

— கோபாலன்.'

— என்று எழுதியிருந்ததாம்.

ரங்கராஜன், கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது காஞ்சனுவும் அங்கு வந்து சேர்ந்தாளாம்.

மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள,

ரமா.





நாமொன்று நினைக்க...!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எல்

ஸீதாராமன் பரீக்ஷை முடிந்ததும் ஊருக்குப் புறப்பட்டான். அவனுடைய விவாஹ முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டு அழைப்புப் பத்திரிகையும் அச்சுப்போட்டு பந்துமித்ரர்களுக்கு அனுப்பப்பட்டது. சேஷு சாஸ்திரிகளும், மணி சாஸ்திரிகளும் காந்திமதி கல்யாணத்திற்கு வந்துவிட்டுப் போகும்போது ஸ்ரீ வேங்கடசுப்பையரிடமும், அவர் குடும்பத்தவர்களிடமும் "எங்கள் ஏழைக் கல்யாணத்தை உங்கள் வரவினால் பெருமைப்படுத்த வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். ஸீதாராமனும் ஐயர் அவர்கள் அடி பணிந்து நன்றி உணர்ச்சியால் தடதடத்த குரலில் தாங்கள் நேரில் வந்து என்னை அனுக்ரஹிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்

ராமனாதனிடம் அவன் "நீ வருவாய் என்று நம்புகிறேன் ராமனாதா! மோசம் செய்துவிடாதே. உன்னைக் காணாவிட்டால் ஆயிரம் பேர்கள் வந்திருந்தாலும் என்னைத் தனிமை உணர்ச்சி தழுவிக்கொள்ளும்" என்று உண்மை நட்புடன் சொல்லி விடைபெற்றுக்கொண்டான்.

சங்கரி அம்மாள் செல்லத்தைதான் சில தினங்களில் அழைத்துக்கொண்டு சியாமளாம்பாபுரம் வருவதாய் சிவராமனிடம் சொல்லிச் செல்லத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு சிவராமனை மீனாவுடன் ஊருக்கு அனுப்பியிருந்தபடியால், அவன் சீதாராமனுடன் சியாமளாம்பாபுரத்திற்குச் செல்லத்தைக்கொண்டு போய்விடுவதற்காகவும் சீதாராமனின் கல்யாணத்தை உத்தேசித்தும் பிரயாணமானாள்.

முத்துசாமி ஸ்தாலீபாகத்திற்குச் சியாமளாம்பாபுரம் போகவேண்டியிருந்ததால் இரண்டு நாள் தங்கி சீதாராமனின் கல்யாணத்தையும் விசாரித்துக்கொள்ளலாம் என்று யோசித்திருந்தான்.

சியாமளாம்பாபுரத்தில் கல்யாண முழக்கம் முழங்கலாயிற்று. மணி சாஸ்திரி பிரபல தனவந்தரல்ல என்றாலும் மனுஷ்ய ஸகாயம் அதிகம் உள்ளவர். மைத்துனன் கோபாலன், மாமனார் ராமஸ்வாமி அய்யர் இவர்களின் ஒத்துழைப்பினாலும், உத்சாகத்தினாலும் மணியின் பளு மிகவும் குறைந்தது. ஊர் லௌகீகர்களும் வைதீகர்களும் மணி வீட்டுக் கல்யாணத்தை தங்கள் தங்கள் கல்யாணமாய் நினைத்துப் பொறுப்பு எடுத்துக்கொண்டார்கள். மணி ராமாயண பாகவதப்ரவசனம், காவ்ய சாஸ்திர பாடல்கள் சொல்வது முதலிய ஸாத்விக ஸேவைகளில் ஊர்வாஸிகளுக்கு உபசரித்துவந்ததால் அவர்கள் மதிப்பைப் பெற்றிருந்தார். தன் ஆத்மார்த்த அநுஷ்டானங்களுக்குக் குறைவில்லாமலும் பராச்ரயமில்லாமலும், புண்ணியமானதும், கண்ணியமானதும், தனக்கும் பிறநக்கும் இம்மையில் ஆனந்தத்தையும் மறுமையில் நன்மையையும் தரக்கூடியதான ஸத்கதா பிரசாரத்தை தன் வாழ்க்கையில் இணைத்துக்கொண்டு அனைவராலும் கௌரவிக்கதகுந்தவராய் விளங்கிவந்த மணி சாஸ்திரிகள் ஒரு பாக்கியசாலி என்றே எல்லோராலும் கருதப்பட்டார் அவர் பெண் கல்யாணத்தில் காசுச்செலவு செய்து சம்பாதிக்க வேண்டிய சிறப்பெல்லாம் அன்பிற்கும். மதிப்பிற்கும், அடைக்கலமாகிக் கூடியிருந்தன. ஐச்வரியவான்கள் ஐச்வரியத்தையும், சாமர்த்தியசாலிகள் சாமர்த்தியத்தையும், வித்வான்கள் வித்துவத்தையும் அவருக்கு அர்ப்பணம் செய்யப் பிரியத்துடன் வந்தார்கள். சௌ. ஸரஸ்வதி கல்யாணத்தில் ஏராள்மான ஜனங்கள் சாப்பாடு, நல்ல வைதிகச் செலவு. சம்பந்திச் சீர்கள் விமர்சையானவை. ஸங்கீதக் கச்சேரிகள் பல.

ஆசீர்வாதத்தின்போது பிள்ளை வீட்டு வாத்யார், பெண் வீட்டு வாத்தியார்களைத் தவிர இரண்டு மூன்று பேர்களுக்கு வேலை சரியாயிருந்தது. முதலில் ஸ்ரீ வேங்கிடஸுப்பையரின் ஆசீர்வாதம் பிள்ளைக்கு ரூபாய் ஆயிரம்; பெண்ணுக்கு ரூபாய் ஆயிரம் ராமநாதன் தான் நேரில் வரமுடியாததற்கு ஒரு நீண்ட மன்னிப்புக் கோரும் கடிதத்துடன் பிள்ளைக்கு ரூபாய் ஆயிரத்திற்கு ஒரு செக் அனுப்பியிருந்தான். அக்ரஹாரப்பிரமுகர்களும் (சிவராமன் உள்பட) வியாபாரிகள், உத்யோகஸ்தர்கள் முதலியவர்களும் ஐந்தும், பத்தும், நூறும் ஓதியிட்டார்கள். பல வெள்ளிப் பாத்திரங்கள் பரிசளிக்கப்பட்டன. மணிசாஸ்திரிக்குப் பெண் கல்யாணத்தில் விரயமும் ஆதாயமும் சரிக்கட்டிப்போகும் நிலை இருந்தது

சேஷு சாஸ்திரிகளுக்கும் வேம்புவுக்கும் நிரம்ப சந்தோஷம். தங்களை மணி ஏமாற்றிவிட்டான் என்று அவர்கள் நினைக்காமலிருப்பதற்காக மணி கல்யாண வரும்படிகளை எல்லாம் ஸீதாராமன் பேரில் பாங்கில் போட்டு விட்டார். அத்திம்பேருக்குச் செலவு ஒன்றும் இல்லாதபடி தானே எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு கணக்குத்தீர்த்தார். சேஷு சாஸ்திரிகளும் அதற்குமேல் ஆசைப்படவில்லை மணி இவ்வளவு விதரணையாகச் செய்வானென்று அவர் எதிர்பார்க்கவில்லை வேம்புவுக்கும் திருப்திதான் நாகுவிடம் குணத்தையும் ஸரஸ்வதியினிடம் அழகையும் அவள் புதிதாகக் கண்டுகொள்ள ஆரம்பித்தாள் ஊரார் மதிப்பிற்கும் உறவினர் மதிப்பிற்கும் அவ்வளவு சம்பந்தமிருக்கிறது. ஐச்வரியமும் அந்தஸ்தும் வாழ்க்கையின் யௌவன தசைக்குரிய செழுமையை மனிதனுக்கு அளிக்கின்றன. அந்தச் சோபையைப் பெறமுடியாதவன் அகாலத்தில் மூப்புப்பிணி பிடித்தவன்போல் பந்துக்களால் வெறுக்கப்படுகிறான்.

ஸரஸ்வதியைத் தன் குடும்பத்திற்கு லட்சுமியாகவே வேம்பு மதித்தாள். நாகுவிடம் நாத்தித் தன்மையைக் காண்பிக்காமல் வெகு கண்யமாய் நடந்துகொண்டாள் ஆனால் நாகுவிற்கும் வேம்புவிற்கும் ஒரு வித்யாசம்உண்டு. நாகு முன்னுக்குப் பின் ஒத்துப்பார்த்து நடவடிக்கை

களை நிதானிப்பவள். வேம்பு
தற்கால ஸாதகத்தைமட்டும் குறி
வைப்பவள் மனுஷ்ய ஜாதியிலேயே
இப்படி ஒரு ஸூக்ஷ்மமான பாகு
பாடு இருக்கிறது இதற்கு மிருகங்
களிலிருந்தே திருஷ்டாந்தம் கொடுக்
கலாம். ஸம்ஸ்கிருதத்தில் அஜகஜாந்
தரம் என்று சொல்லுவார்கள. இது
ஆகிருதி வித்தியாசத்தைமட்டும்
குறிபபதாய் நினைக்கக்கூடாது
சுபாவ வித்யாசம்தான் அதில் முக்ய
மானது கஜம்மானி, தனி மதிப்பிற்
குரியது தனக்கு ஒருவன் செய்த
நன்மை தீமைகளை வெகுகாலம் வரை
யில் மறக்காது தீங்கிழைத்த எதிரி
மாறு வேஷம் போட்டாலும் அவனை
அறிந்துகொள்ளும் அஜம் தழை
தின்பதைத்தவிர வேறு உணர்ச்சி
களை அறியாதது சாதாரண இனத்
தைச் சேர்ந்தது ஸ்திரீகளுக்குப
பழக்கத்தால் பர்த்தாவின் குணங்
கள் படியும் என்று வேணீ ஸம்ஹா
ரத்தில் கூறபபடுகிறது. அரிய
விற்பன்னரான மணி சாஸ்திரிகளின்
வாழ்க்கைத் துணைவி நுட்பமான
அறிவு - உணர்ச்சிகளுடையவாளா
யிருந்தது வியப்பில்லை.

கல்யாணம் ஆனதும் ஊருக்குப்
புறப்படும்போது ஸ்ரீவேங்கிட சுபபை
யர் ஸீதாராமனுக்குத் தன் ஆபீ
ஸில் வேலை ஒன்று ஒதுக்கி வைத்தி
ருப்பதாயும, அதை அவன் உடனே
வந்து ஒத்துக்கொள்ள வேண்டு
மென்றும், படிப்பு வேலையை இறுதி
நோக்கமாய் உடையதாகையால்
வேலை கிடைக்கும்போது அதை
விட்டுவிட்டுப் படிபபைத் தொடர்
வது முக்கியமில்லை என்றும் வற்
புறுத்தினார். சாஸ்திரிகளுக்குப் பரம
சந்தோஷம் தான் குருமபி ஆதலால்
பையன் சம்பாதிக்க வேணடியது
மிக்க அவசியம் என்று அவர்
எடுத்துக் காட்ட யத்தனித்ததில்.
தன் குடும்ப யோக க்ஷேமத்தின்
ஆவல் நிலையை அதிகம் விஸ்தரிக்கத்
தொடங்கிவிட்டார். மணி சாஸ்திரி
கள் அதை ஓரளவில் கட்டுப்படுத்
துர்பொருட்டு குறுக்கே பேசி, தன
வந்தர்களின் உபகார சிந்தனை தங்கத்
தாமரைப்புஷ்பத்தின் வாஸனைபோல்
என்று உபமானத்தை எடுத்துக்
கொண்டு. காளிதாஸ, வால்மீகி,
நீலகண்ட தீக்ஷிதர் முதலிய மஹா
கவிகளின் சுலோகங்களை உதா
ஹரித்து உபன்யாஸம் செய்யலா
னார்

* * * * *

இப்போது ஸீதாராமன் ஸ்ரீமான்
வெங்கட ஸுப்பையர் கம்பெனி
யில் தான் பெறற ஸ்தானத்தி
லிருந்து படிப்படியாய் ஏறி வலு
வாக ஊன்றிக்கொண்டு விட்டான்.
ஐயர், தான் "ரிடையர்" ஆகும்
போது தன்னுடைய இடத்தில்
அவனை அமர்த்திவிட உத்தேசித்
திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

ஸரஸ்வதியும் ஸீதாராமனும்
தனிக்குடித்தனம் செய்கிறார்கள்
ஓழிந்த நேரங்களில் நைஷதம், பார
தசம்பு, முராரி நாடகம் முதலிய
உயர்ந்த ஸாஹித்ய கிரந்தங்களைப்
படித்து ஆனந்திப்பது அவர்களின்
பொழுது போக்காக இருக்கிறது

முத்துஸ்வாமி ஹைஸ்கூல் இறு
திப்பரீக்ஷையில் ஒப்பற்ற ரீதியில்
மார்க்குகள் வாங்கியிருந்ததால்
காலேஜில் உபகாரச் சம்பளத்
துடன் சேர்த்துக்கொள்ளப் பட்
டான். அவகும் அவன் முதல்
பரிசுக்கு உரியனாகவே எல்லா கட்
டங்களையும் தாண்டி மேலும் அர
சாங்க உபகாரச் சம்பளத்துடன்
லா காலேஜில் சேர்ந்தான்.

முத்துசாமி தன் தொழில் வழியை
தேர்ந்தெடுககச் சொல்லப் படட
போது, வக்கீல் தொழிலையே விரும்பி
னான்.

முத்துசாமி ஸ்ரீமான் வேங்கிட
சுப்பையர் வீட்டில் சிலகாலம் இருந்து
பின்பு. சிவராமன் பட்டணத்தில்
தன் ஜாகையை ஏற்படுத்திக்
கொண்டதால் மாமனுடன் வஸிக்க
லானான். சிவராமனுக்குக் கடன்
தொல்லைகள் ஒழிந்து வரவேண்டிய
தொகைகளும் எதிர்பாராதவிதமாய்க்
கைக்கு வந்ததால் தெம்பு உண்டாகி
விட்டது. செலவு விஷயத்தில் சிவ
ராமன் இப்போதெல்லாம் வெகு
நிதானம் முத்துஸ்வாமியைப் பார்த்
துக்கொண்டு ஆசாரம், சீலம் இவை
களின் பெருமையை உணர்ந்து
சிவராமன் தன் பழக்க வழக்கங்களை
முற்றிலும மாற்றிககொண்டு விட்
டார். ஸத்காலக்ஷேபம், வேதாந்த
பாடம் இவைகளில் ஈடுபட்டு நல்ல
பொழுதாக்கப் போக்கத் துவக்கி
னார். அதைக் கண்டு மீனு அடைந்த
ஆச்வாஸத்திற்கு அளவில்லை மாப்
பிள்ளையிடம் மீனுவுக்கு அபார
மதிப்பு ஏற்பட்டுவிட்டது

தன் படிப்பிலேயே கண்ணும்
கருத்துமா யிருந்தாலும் முத்துசாமி
செல்லத்தின் அளவுகடந்த ஆசை
வெள்ளத்தையும் பரமேச்வரன்
ஆகாயத்திலிருந்து விழும் கங்கை
யைத் தாங்கினதுபோல் வாங்கிக்
கொண்டு அவளை ஸுமுகமாய் இருக்
கச் செல்வதில் சிரத்தையுள்ளவனா
யிருந்தான். ஆரம்பத்தில் அதிலும்
ஒரு கண்டம் ஏற்பட்டது. அதி
லிருந்து அவன் சாமர்த்தியமாய்த்
தப்பித்துக்கொண்டான். சிவஸ்கந்த
சர்மா ஒரு சுய அபிமானமுள்ள
எழுத்தாளர் ஆனபடியால், தான்
சிருஷ்டித்த வெந்த உள்ளத்தின்
கவிதையை அவன் ஒரு கதைப பகுதி
யில ஒரு பத்திரிகையில் பிரசுரிககச்
செய்திருந்தான் அதன் பிரதி
ஒன்றைக் காந்திமதி நாக்பூரிலிருந்து
செல்லத்திற்குத் தபாலில் அனுப்பி
வைத்தாள். செல்லம் அதைப்
பார்த்து ஆச்சரியமும், சந்தேகமும்,
கலக்கமும் அடைந்தாள்.

"எப்படி இது சர்மாவிடம் சென்
றது யார் அனுமதியின் பேரின்
அவன் இதைப் பிரசுரித்தான்," என்
றெல்லாம் முத்துசாமியின்பேரில்
கடுமையான குறுக்கு விசாரணை
யைத் தொடர்ந்துவிட்டாள். முத்து
சாமிக்குத்தான் அக்கடிதத்தின்
சிருஷ்டிகர்த்தா அல்ல என்று சொல்
லிக்கொள்வதற்கு இப்போதும் சந்
தர்ப்பம் சரியாக இல்லை செல்லம்,
தனக்காகமுத்துசாமி வெந்த உள்ள
மாகித் தவம் கிடந்து தன் கருணை
யைப் பெற்றான் என்ற மனோ
பாவத்தை வெகுநாளாக வேரூன்றச்
செய்து வளர்த்துவந்ததால் அந்த
வேரை இப்போது களைந்தால் தாம்
பத்யபாவத்தில் அதிர்ச்சி ஏற்பட்டு
விபத்தில் வந்து முடியும் என்று
முத்துசாமிக்குப்பட்டது ஆகையால்
இந்த தர்ம சங்கடத்தில் அவன்
மழுப்பினால்போல் பதில் சொல்ல
நினைத்தான்

"ஒரு கல்லினால் இரண்டு மாங்காய்
கள் விழலாம் அல்லவா?" என்றான்
அவன்.

'ஆனால் சர்மாவுக்குக் கமலியின்
நட்பைத் தந்ததும் இந்தக் கவிதை
தானா?" என்று கேட்டாள் செல்லம்.

'ஆம்" என்ற அர்த்தத்தில் தலை
யசைத்தான் முத்துசாமி

'அப்படியானால் நீங்கள் எழுதிய
காதல் கவிதையை சர்மாவிடம்
விலைக்கு விற்றீர்களா" என்று
கோபாவேசம் கலந்த பரிகாசத்
துடன் கேட்டாள் செல்லம்.

"ஆமாம்! அப்போது அவன்
எனக்குச் சாப்பாடு போட்டா
னல்லவா" என்று முத்துசாமியும்
சற்று அசடு தட்டிய பரிகாசத்துடன்
பதில் கூறினான்.

"இந்தாருங்கோ! இந்த விளை
யாட்டு என்னிடம் வேண்டாம் என்
னிடத்தில் நிஜத்தைச் சொல்லிவிடுங்
கள் எனக்கு அழுகை வரும்போ
லிருக்கிறது" என்றாள் படபடப்புக்
காரியான செல்லம், கண்களில் நீர்
ததும்ப முத்துசாமியின் இரண்டு
கைகளையும் பிடித்துக்கொண்டு அப்
போது அவன் முகத்தை அவள்
உறுதியுடன் பார்த்து அவன் கண்
கருவிழியில் பிரதிபலிக்கும் தன்
உருவத்தை அவள் உற்று நோக்கு
வதுபோலிருந்தது. முத்துசாமி
அவளுக்குச் சமாதானமளிக்க வேறு
வழியில்லாமல். "செல்லம்! என்
னைக் கேட்கிறாயே? எனக்கு எப்
படித் தெரியும்? அவன் அதைத்
திருடிப் பிரசுரித்திருந்தால் அதற்கு
நானா ஜவாதாரி என்று சொல்லி
வைத்தான்.

"அப்படித்தான் இருக்கவேண்டும்.
ஆனால் திருடனைச் சும்மாவிட்டு விட
லாமா, இந்தக் கவிதையின் காப்பி
ரைட் உங்களுடையதுதானே?

நீங்கள் ஏன் அந்த மானங்கெட்டவனுக்கு நோட்டீஸ் கொடுக்கக் கூடாது?'' என்று கர்ஜித்தாள் செல்லம்.

முத்துசாமி வக்கீல் பரீக்ஷைக்குப் பின் செல்லத்தினிடமேதான் அப்ரெண்டிஸ் ஆக இருப்பது தகும் என்று நினைத்துக்கொண்டான்.

"பிறர் கேஸ்களை நடத்தும் தொழில் பயிற்சிபெறும் நான் முதலிலேயே சொந்தக் கேஸின் நிமித்தம் கச்சேரியில் தலை நீட்டுவது எவ்வளவு அவமானம்?'' என்று சொல்லி சமாளித்துக்கொள்ளப் பார்த்தான் முத்துசாமி.

"என்ன நீங்கள் சொல்லுகிறது விந்தையாயிருக்கிறதே! லா காலேஜில் சேர்ந்துவிட்டால் சொந்த பாத்யதைகளை எல்லாம் விட்டு விட்டு அது முதல் பிறர் பாத்யதைகளை ஸ்தாபிக்கவே விரதம் பூணவேண்டுமபோலிருக்கிறது? அப்படித்தானே?''

"இல்லை'' என்றான் முத்துசாமி செல்லத்தின் வாதிக்கும் திறமையைக் கண்டு உள்ளம் மலரும் சிரிப்புடன்.

'இல்லை! அப்புறம் மேலே என்ன?' என்று வெருட்டினாள் செல்லம்.

"மேலே காப்பிரைட வியாஜ்யம் தொடர வேண்டியதுதான்'' என்றான் முத்துசாமி இன்னும் விரிவாகச் சிரித்துக்கொண்டு.

"அதைத்தான் நான் சொல்லுகிறேன்' என்று சற்று ஆச்வாசப் படுத்திக்கொண்டாள் செல்லம்.

முத்துசாமி சிறு நகை நகைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.— "சரி எப்படிப் பிராது எழுதுகிறது. எழுதிப் பார்க்கலாமா?— 'இந்த வாதி ஸ்கூல் மாணவி செல்லம் என்ற மடமயிலின் பள்ளித்தோழனாயிருக்கும்போது மேற்படி செல்லமென்கிற மடமயிலின் தோகை விரித்தாடும் ரூபலாவண்யங்களினால் வசீகரச் சுழலில் சிக்கி மதிமோஹம் கொண்டு தவித்துத் தடுமாறி உருகி உள்ளம் வெந்து முத்துசாமி மேலே வாக்கியத்தைச் சேர்க்கத் தினறுபவன்போல் சற்று விழித்தான்.

"சரி, போரும்! போரும் போங்கள்'' என்று சொல்லிக்கொண்டு அப்போது செல்லம் தன் கையில் இருந்த பத்திரிகையினால் முத்துசாமியின் வாயை மூடினாள் அவளுக்குப் பிரஸ்தாப பிராது கொடுக்கப்பட்டால் தன் காதல் சரித்திரம் நடுக்கச்சேரியில் அம்பலமாக்கப்படும் என்பது புலப்பட ஆரம்பித்தது.

'இந்த தஸ்தவேஜியின் தத்துவத்தை நிரூபிக்க நீயும் கூட்டில் ஏற வேண்டும்' என்றான் முத்துசாமி அவள் கையை அப்பால் நகர்த்திப் பிடித்துக்கொண்டு.

"நீங்கள் பேசாமல் இருக்கமாட்டீர்களா? நான்தான் அந்தப் பேச்சை விட்டுவிட்டேனே?'' என்று அதட்டினாள் செல்லம்.

"எப்படியும் நம்ப பாத்யதையை விட்டுவிடலாமா? வந்தது வரட்டும் என்று துணிய வேண்டியதுதான்'' என்று முத்துசாமி அவளைக் குறும்புக்காக உத்சாகப்படுத்தினான்.

அவன் தொலையட்டும் போங்கள். நமக்குச் செலவில்லாமல் அந்தக் கவிதையை அச்சுப் போட்டுக் கொடுத்ததற்கு அவனை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லிச் சிரித்துவிட்டு, அவள் மேலும் முத்துசாமி அந்த வியாஜ்ய வருணனையை விஸ்தரிக்காமலிருக்கும் பொருட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

* * * * *

சர்மா கமலியுடன் இனிதுகாலம் கழித்து வருகிறான். பணமும் பெண்டாட்டியும் ஒரே அதிர்ஷ்டத்தில் கிடைத்த பெருமை அவனுக்குப் பொங்கி வந்தது. வெறியனைபபோல் அவன் தலைசுற்றி ஆடுவான் அவன் மோஹா வேசத்தைக் கமலியினால் தாங்கமுடியவில்லை. சில சமயம் அவள்தான் இரண்டு லோகங்களுக்கும் விருத்தமாய் ஆத்திரப்பட்டுத் தன்னை மறுவிவாஹத்தில் ஒருவனிடம் ஒப்புவித்துக்கொண்டது புத்திசாலித்தனமா என்று ஆராய்ந்துபார்த்துத் தனிமையில் பெருமூச்சு விடுவாள்.

ராமனாதன் கல்யாணப் பிரஸ்ஸை உன்னத நிலைக்குக் கொண்டுவந்து விட்டான். அவனிடத்தில் உழைப்பும் ஊக்கமும் இருந்தன. மேலும் ஸீதாராமனின் மதியையும் முத்துசாமியின் நீதியையும் அவன் அடிக்கடி கலந்து பயன்படுத்திக்கொண்டான். அவன் "பிஸினஸ்'' இப்போது வெகு விரிவாய் நடக்கிறது. உஷா அவன் நிழல்போல் அவனை அனுசரித்து வாழ்க்கை நடத்துகிறாள். அவன் அன்பால் அவள் கிலேசம் என்பதையே அறியாதவளானாள். இருவருடைய நேசமும் ஜீவநதியும் சமுத்ரமும் ஸங்கமமாகும் இயற்கை பெருமை வாய்ந்து அமோகமாய் விளங்குகிறது.

பத்மாவும் சக்ரபாணியும் ஸினிமாத் தொழிலில் எல்லையற்ற பணப் பெருக்கால் ஆகாச மாளிகை கட்டி வாழ்கிறார்கள். அழகிரியும், பாக்யலக்ஷ்மியும் அந்த ஐச்வரியக் காட்டாடாற்று வெள்ளத்தில் உத்சாக போதைகொண்டு கடந்து புரண்டு கொண்டிருக்கிறார்கள். பாக்கிய லக்ஷ்மி உஷாவுக்குக்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டாள்.

காந்திமதியின் கணவன் இன்ஜினியர் பரீக்ஷையில் முன்னணியில் தேறி உடனே கைமேல் உத்யோகத்தைப் பெற்று மத்திய இந்திய மாகாணத்திலேயே வேலை பார்த்து வருகிறான். அவள் உயரிய குணங்களில் காந்திமதிக்கு மிகவும் மன உல்லாசம் ஏற்பட்டு, அவள் அன்புடனும் ஆதரவுடனும்பத்னி தர்மத்தைக் கடைப் பிடித்து வருகிறாள்.

சிவராமன் காந்திமதியை நாக்பூர் போய் பார்த்துவந்தபோது அவள் புக்ககத்தில் நடந்துகொள்வதையும், புக்ககத்தவர்களின் அன்பையும், மதிப்பையும் அவள் பெற்றிருப்பதையும் பற்றி மிகவும் சிலாசித்துப் பேசினார்.

"பத்மாவின் ஆகர்ஷியும் மாக்ஷிமையும், உஷாவின் கலைத்திறமும் வாடா வசீகரமும், கமலியின் பொறுமையும் தியாகமும் செல்லத்தின் காதல் வேகமும் மன உறுதியும் ஒருபுறமிருக்க, ஸரஸ்வதியின் உயரிய தோழமையும் உள்ளடக்கமும் காந்திமதியின் களங்கமற்ற உள்ளமும் பதி சிச்ருஷையும் தான் எனக்கு மேலாகத் தோன்றுகின்றன'' என்று அவர் அடிக்கடி சொல்லுவது உண்டு

ஸ்ரீமான் வேங்கட சுப்பையரும் சங்கரி அம்மாளும் தங்களுடையவும், தங்கள் ஆதரவுக்கு உள்பட்டவர்களுமான குழந்தைகளின் க்ஷேமங்களை நிரந்தரமாய் தியானித்துக்கொண்டு அமோகமான ஐச்வரியப் பெருமையுடன் தானதர்மங்களில் ஈடுபட்டு லக்ஷ்மீ நாராயணர்கள் போல் சுகந்தம், தயவு, தாக்ஷிண்யம், தாராளத்தன்மை நிரம்பிய புனித வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

சேஷ சாஸ்திரிகள் தன் மைத்துனனும் சம்பந்தியுமான மணியிடம் செழிப்பும் செம்மையும் தழைத்தோங்கிவரும் தன் குடும்பயோக க்ஷேமத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம் உள்ளம்தளிர அனைவரையும் வாழ்த்திவிட்டு எல்லாம் என் ஹ்ருதயகமலத்தில் வசிக்கும் **ஸ்ரீ ச்யாமளாம்பாள்** கிருபை என்று சொல்லி முடிப்பார்.

அவருக்கு அனுசரணையாக மணி சாஸ்திரிகள் எப்போதும் அன்பும் தயவும் சுரக்கும் மனதுடன் **ஸ்ரீ பவபூதி** மஹாகவியின் மங்கள வாக்கியத்தைப் பாராயணம் செய்வார்.

(முற்றிற்று)

ஏப்ரல்
9உ
வெளிவரும்
பக்ஷிராஜாவின்
பவளக்கொடி
மஹாலிங்கம்.. ராஜகுமாரி.. வரதன்.... ஸரோஜினி..
கிருஷ்ணன்.. மதுரம்.. லலிதா.. பத்மினி.. குமாரி ராஜம்
டைரக்ஷன்.. ஸ்ரீராமுலு நாயுடு...
நாராயணன் கம்பெனி வெளியீடு

சினிமாவும்

கலை டைரக்டரும்

சாண்டில்யன்

கடவுளைக் காப்பி அடிக்கும் அலுவலை மேற்கொண்ட ஒரு மனிதரைத்தான் சினிமா வட்டாரங்களில் கலை டைரக்டர் என்று அழைக்கிறோம். கடவுள் ரொம்ப சிரமப்பட்டு உலகத்தின் பல பாகங்களில் சிருஷ்டி செய்திருக்கும் இயற்கைக் காட்சிகளை தக்ருபமாக குறைந்த செலவில் ஸ்டூடியோவில் இவர் சிருஷ்டி செய்து விடுகிறார். கடவுள் ஆடுவதாகச் சொல்லும் அந்தக் கைலாஸத்தைக்கூட பிடித்து வந்து உங்கள் கண் எதிரே நிறுத்தக் கூடியவர் காட்சி ஜோடனைக்காரரான கலை டைரக்டர்தான்.

ஆறு மூட்டை உப்பைக் கொண்டுவா, பத்து மூட்டை பஞ்சைக் கொண்டுவா என்று ஸ்டூடியோவில் யாராவது கேட்டுக்கொண்டிருந்தால் அவரை ஏதோ வியாபாரியென்று அலட்சியமாக நினைத்து விடக்கூடாது அவர்தான் கலை டைரக்டர். ஊர்ப்பட்ட பனிக்கட்டிகளைக் கொண்டுவந்து உருகாமல் வைப்பது சாத்தியமல்லவாகையாலும், நமது சினிமாக் கடவுள்கள் ஐஸ் மேல் நின்றுகொண்டு ஒரு நிமிஷம் ஆடினால்கூட கால் மரத்துப் போகுமாகையாலும், பஞ்சு, உப்பு முதலிய சாமான்களால் கலை டைரக்டர் கைலாஸத்தை சிருஷ்டிக்கிறார். கைலாஸத்துக்கு ஜிலு ஜிலுப்புக் கொடுத்து தூரப்பார்வைக்கு மின்னும்படி செய்ய மைகாபொடி, ஜிகினா பொடி முதலியவற்றையும் தூவுவது உண்டு.

கலை டைரக்டரிடம் வேலை செய்யும் பரிவாரங்கள் அனந்தம. தச்சர்கள், காகிதம் முதலியவற்றை அரைத்தும் மண்களைப் பிசைந்தும் பிம்பங்களைச் செய்யும சிற்பிகள், வர்ணக்காரர்கள், இவர்கள் சதா இவரிடம் வேலைசெய்தவண்ணம் இருப்பார்கள். குப்பைக காகிதங்கள்கூட சினிமாவின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உபயோகப்படுகின்றனவென்றால் அதற்குக் கலை டைரக்டர்தான் காரணம். அவற்றை கட்டுக்கட்டாக வாங்கி அரைத்து பொம்மைகள் செய்து ஸெட்டுகளில் பிரதிஷ்டை செய்துவிடுகிறார்கள் இதன் காரணமாக அவை ஜனங்கள் கண்களைக் கவருவதும் சாத்தியமாகிறது

சினிமாத் தொழிலில் கதாசிரியருக்கு அடுத்தபடி நல்ல அறிவாளியாயிருக்க வேண்டியவர் கலை டைரக்டர். இதனால் மற்றவர்களுக்கு அறிவு அவசியமில்லை என்று அர்த்தமில்லை மற்றவர்கள் அறிவு ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் இருந்தால் போதும். உதாரணமாக காமிராககார

ருக்குக்காமிரா வேலை நன்ருகத் தெரிந்தால் போதும். ஒலிப்பதிவு செய்பவருக்கு அதைச் சரியாகச் செய்யத் தெரிந்தால் போதும். ஆனல் கலை டைரக்டர் சகல கலா வல்லவராயிருக்கவேண்டும். அவருக்கு சரித்திரம், புராணம், புராதன நாகரீக விவகாரங்கள், தற்கால சமூக நடவடிக்கைகள் சகலமும் தெரியவேண்டும். தெரியாவிட்டால் அததை அவ்வப்பொழுது தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் உண்டு.

ஸ்டூடியோ முதலாளி இன்று ஒரு புராணப் படமெடுப்பார். நாளைக்கு ஒரு சரித்திரப் படம் எடுப்பார் நாளன்றைக்கு சமூகப் படம எடுப்பார் இவை எலலாவற்றிலும் கண்ட சூழ்நிலையைக் கண் முன்னல் நிறுத்தவேண்டிய பொறுப்பு கலை டைரக்டரைச் சேர்ந்தது

மகாவிஷ்ணு என்ன ஆயுதங்களை வைத்துக்கொண்டிருக்கிருர்? எத்தகைய அணிமணி அணிந்துகொண்டிருக்கிருர்? வைகுண்டம் எப்படியிருக்கும்? குலோத்துங்கன் எத்தகைய கத்தி வைத்துககொண்டிருந்தான்? அவன் பெண் தலையில் சுட்டி கட்டிக்கொண்டிருந்தாளா இல்லையா? அரண்மனையிலிருந்த தூண்கள் எப்படியிருந்தன? என்ற விஷயங்களெல்லாம் அவருக்குத் தெரிநகிருகக்வேண்டும. தெரியாவிட்டால் தெரிந்தவர்களைக் கேட்டாவது தெரிந்துகொள்ள.த்தான் வேண்டும் இப்படிக் கட்டாயப் படிப்புப் படிப்பட்டதுடன் ஸெட்டுக்கு வேண்டிய சாமான்களை சேகரிப்பதும் இவர் கடமையாகிறது.

கலை டைரக்டர் முதலில் கதையைப் . படித்துவிட்டு ஒரு குறிப்பிட்ட காட்சி இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கிருர். நிர்ணயித்த பிறகு அதை காகிதத்தில் சித்திரமாக எழுதுகிருர். இதைத்தான் 'ஸ்கெச்' என்று சொல்கிருேம். இந்த ஸ்கெச்சிலிருப்பதுபோல் படக் காட்சியை அமைக்க வேண்டும். இந்தமாதிரி காட்சியை ஸ்கெச் போடும்போது கலை டைரக்டரின் புத்தி காமிரா மேலும் ஒரு கண் வைத்துக்கொண்டிருக்கும் எந்த அளவுக்கு எந்த மாகிரியில் காட்சியை ஜோடித்துக்கொடுத்தால் கதாபாத்திரங்கள் நடமாட சௌகரியமாயிருக்கும்? காமிராவை ஓட்ட எத்தகைய அமைப்பு உதவுபடியாயிருக்கும்? என்ற அமசங்களை அவர் நினைத்தே காட்சி அமைப்பை நிர்ணயிக்க வேண்டும். காமிரா அசையமுடியாதபடி காட்சிகளை இக்கட்டாக அமைப்பதால் பெரிய உபத்திரவங்கள் நேருவதுண்டு.

கலை டைரக்டரும் காமிராக்காரரும் எப்பொழுதும் இணைந்து வேலை செய்ய வேண்டியவர்கள். ஒரு கிராமத்தைதப்பற்றியும் அதில் ஒரு வீட்டைப்பற்றியும் கதையில் பிரஸ்தாபமிருப்பதாக வைத்துக்கொள்வோம். கிராமத்தை முழுக்கக் கட்டமுடியாதல்லவா? ஆகையால் பொம்மைக் கிராமம் ஒன்றை கலை டைரக்டர் சிருஷ்டிப்பார். அதை காமிராக்காரர் படம் எடுத்துககொள்வார். பிறகு கலை டைரக்டர் ஒரு வீட்டை நிர்மாணிப்பார். அதையும் காமிராககாரர் படம எடுப்பார் முதலில் கிராமம் முழுமையும் காட்டி அதிலிருந்து வீடு தோன்றும்படியாக இரண்டையும் இணைப்பார்கள்.

வீடு கட்டுவதாஞலும் சரி, அரண்மனை கட்டுவதாஞலும் சரி கலை டைரக்டருக்கு சர்க்காரின் தயவு சிறிதுகூட வேண்டியதில்லை சிமெண்டு கர்டர் முதலிய இரும்பு சாமான் இவற்றுக்காக சர்க்காரிடம் அவர் 'பர்மிட்'டுக்குத் தாளம் போடுவதில்லை. கல், சுண்ணும்பு எதுவுமே தேவையில்லை முக்கியமாக அவருக்கு வேண்டிய சாமான்கள் மரம், துணி, காகிதம், வர்ணம் இவைதான். சில வேளைகளில் அரைத்த மண்ணையும் உபயோகிப்பார்.

அரண்மனையைக் கட்டுவதாஞலும அங்கு வசிக்க வேண்டிய அரசன் இஷ்டப்படி கட்டமாட்டார். குறிப்பிட்ட காட்சியில் எந்த இடத்தில் அரசன் உலாவ வேணடுமென்று பிலிம் டைரக்டர் அபிப்பிராயப் படுகிருரோ அந்த இடத்தை மட்டுமே கலை டைரக்டர் கட்டிக் கொடுப்பார். உதாரணமாக அரண்மனை வாசல் காட்சியைப் படம் எடுப்பகஞல் அதற்கு வேண்டிய பத்தடி கட்டைச் சுவரும், அங்கிருக்கவேண்டிய அலங்காரத் தூண்களுமே நிர்மாணிக்கப்படும் அசல் ராஜாவாயிருப்பவர் எப்படி மந்திரி, பிரதானி, சேஞதிபதி முதலியோருக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமோ அது மாதிரியே சினிமா ராஜாவும் கலை டைரக்டர், காமிராக்காரர், பிலிம் டைரக்டர் இம் மூவர் கட்டுப்பாட்டின்படிதான் நடக்க வேண்டும். முக்கியமாக நடிகரின் நடவடிக்கையை அதிகமாகக் கட்டுப்படுத்துபவர் கலை டைரக்டர் என்ற சினிமாவின் விச்வகர்மாதான் ஏனென்ருல் குறைந்தபக்ஷம் வேண்டிய இடத்தையே இவர் கட்டி கொடுக்கிருர்.

எந்த நாளில் கதை நடக்கிறதோ அதன் சூழ் நிலையை ஏற்படுத்தும் பொறுப்பு இந்த விச்வகர்மாவுக்கு ஏற்பட்டிருக்கிறது அந்தப் பொறுப்பை சரியாக நிர்வகிப்பவர் ஓரிருவர்தான் தென்னிந்தியாவில் தற்சமயம் இருக்கிருர்கள்.

திரையிடத்தயார்!



முருகன் டாக்கீஸாரின்

ரத்னகுமார்

P.U.சின்னப்பா ★ P.பானுமதி ★ D.பாலசுப்ரமண்யம்
M.G.ராமசந்திரன் ★ K.P.கேசவன் M.K.மீனலோசனி
N.S.கிருஷ்ணன் ★ T.A.மதுரம் நடித்தது

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு ஸ்டுடியோ: நியூடோன்...

டிஸ்டிரிப்யூட்டர்ஸ்: **முருகன் டாக்கி கம்பெனி..**
மதுரை.....பெங்களூர் சிடி....,பெஜவாடா...

MTA

பாக்யசக்கரம்

வை. சுப்ரமண்யன்

சித்திரை மாசத்திய மாலை நேரம். அன்றையப் பொழுது பூராவும் வைராக்கியம் வைத்துச் செய்வது போல, வெய்யில் தகதகவென்று காய்ந்து ஓய்ந்திருந்தது வெய்யிலின் சூட்டுக்கு இணைந்துகொடுத்து அதன் மகாசக்தியை ஏற்று அடித்துக்கொண்டிருந்த காற்றின் தன்மை மாறியது. 'சில்' லென்ற உணர்வு கிடைக்க வாரம்பித்தது அந்தக் காற்றின் மூலம்

வெப்பத்துக்குப் பயந்து உள்ளேயே பதுங்கிக்கிடந்த நான் மணி ஐந்து அடித்து விட்டதைப் பார்த்துக்கொண்டு எழுந்து வெளியே வந்தேன் அசாதாரண தன்மையில் அதுவரை இயங்கிவிட்டு பிறகு கருணை காட்டும் நோக்கத்துடன் விளங்குவதேபோல சூரியன் தவிக்கும் சக்தியைக் குறைத்துக் கொண்டு காட்சியளித்தான். பார்வையை ஊன்றிச் செலுத்தி அந்த இயற்கையழகைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன்

மனதில் உடனே இன்பமான நினைவுகள் பூத்தன!

உள்ளே சென்று கமலம் இருந்த விடத்தையடைந்தேன் "கமலம் இன்னிக்குக் காவேரிக் கரைப்பக்கம் போவோமா?" என்று கேட்டேன்.

பகலில் காஞ்ச வெயிலுக்குச் சரியா மழைதான் ஊத்தப்போறது?' என்று சொல்லிச் சிரித்தாள் அவள் எனக்கும் சிரிப்புதான் வந்தது பிறகு அவளே சொன்னாள் என்ன இன்னிக்குப் புதுமை? திடுதிப்புனு கிளம்பத் திட்டம் போடறேள்?

"ஆமாம்: என்னமோ போய்ட்டு வருவோம் தமாஷ்ன்னு நினைச்சேன்"

'சரி; நான் இதோ தயார்!"

இருவரும் கிளம்பினோம் அது ஒரு கிராமம்; கிராமத்தையொட்டி எல்லை கோலினாற்போல காவேரி ஓடுகிறது ஒரு பெரிய வளைவுடன்

பட்டணத்தில் மாலை நேரங்களில் நினைத்த மாத்திரத்தில் எலலோரும் தங்கள் மனைவியர். குழந்தைகளுடன் கடற்கரைக்குச் செல்வதுபோலத்தான் இப்படி நாங்கள் காவேரியாற்றங்கரைக்குப் போவதும்: ஆனால் இதில் வித்தியாசம் என்னவென்றால் நான் இருந்த கிராமம்போன்ற பிரதேசங்களில் மனைவியை அழைத்துக்கொண்டு புருஷன் காவேரியாற்றங்கரைக்குச் செல்வதென்பது கிடையாது. மற்றப்படி குழந்தைகள். பெரியவர்கள் எல்லோரும் வெயில் தணிந்தவுடன் ஆற்று மணலில் உட்கார்ந்து முறையே விளையாடவும் பேசிக்கொண்டிருக்கவும் செய்வர்.

நான் அந்த கிராமத்து நடவடிக்கை சட்டதிட்டங்களுக்கு விதி விலக்கானவன். இயற்கையாக சாத்தியமாக்கிக் கொள்ளக்கூடிய அனுபவங்களை உதறித்தள்ளிவிட விரும்பாதவன்: பழைய நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் எப்போதோ தகர்த்தெறிந்து விட்டு உட்கார்ந்திருந்தவன். கமலமும் என் போக்குக்கு இணைந்து வருபவள் தவிர, என் தன்மைக்கு ஏற்றவாறு கிராமத்தின் கோடியில் தனி வீடாக இருந்தது என் வீடு.

* * * * *

ஆற்று மணலில் துண்டை விரித்து நாங்கள் உட்கார்ந்தபோது அநேகமாக சூரியன் பார்வைக்கு மறைந்துபோனான் குளுகுளுவென்ற காற்று மனதில் மேலும் மேலும் உற்சாகத்தை மூட்டிவிட்டது

உட்கார்ந்த பிறகு வெளிக் காட்சிகளை ஒரு வட்டம் ஆராய்ந்துகொண்டிருந்த என் கண்கள் தற்செயலாய் கமலத்தின் முகத்தின் பக்கம் திரும்பி நிலைத்தன ஒருக்களித்து உட்கார்ந்திருந்த அவளுடைய பக்க வாட்டுத் தோற்றம்தான் என் திருஷ்டியில் பட்டது; அந்த நிலையில் அவளுடைய அழகு ..தன் பலமே தனக்குத் தெரியாத அனுமானைப்போல. கமலத்தின் வனப்பில் உள்ள மகாசக்தி ஒருவேளை எனக்கே தெரியவில்லையா. என்ன? அப்படியில்லை சந்தர்ப்பத்தின் பொருத்தத்தில் அந்த அழகு விசாலித்தது; அவ்வளவுதான்.

நான் ஒருமித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைச் சட்டென்று திரும்பிய கமலம் பார்த்து விட்டாள். அவள் முகம் குனிந்தது........சிறிது நேரம் மௌனம் என் நிலைமையைத் திருத்திக்கொண்டிருந்த நான் தொலைவில் தெரிந்த வாராவதியை நோக்கிக் கொண்டிருந்தேன்

"என்ன அதிசயத்தைக் கண்டாச்சோ, தெரியவில்லை என்று, பாதி உதடு அசக்கிச் சொன்னாள் கமலம், குனிந்தபடியே. நான் அவளைப் பார்த்துக்கொண்டிருந்ததற்காக இந்த வார்த்தைகள் மூலம் ஒரு குற்றச்சாட்டு என் மீது!

நான் பதிலே சொல்லாமல் சும்மா சிரித்தேன் அவள் தலை நிமிர்ந்து என்னை நோக்கினாள்

"இந்த இடம் இந்த வேளையிலே ரொம்பக் குளுகுளுப்பா இருக்கு. இல்லை கமலம்?" என்று கேட்டேன்.

'ஆமாம் ; உங்களுக்குக் குளுகுளுப்புக் கொஞ்சம் அதிகமாகவே போயிட்டுதாக்கும்!"

வாராவதியின் மேல் இருந்த என் பார்வை இன்னமும் அங்கேதான் இருந்தது. ஆற்றங்கரையில் பரவி வியாபித்துக்கிடந்த பிரம்மாண்டமான மரங்கள் ஒன்றிலிருந்து ஒரு பறவை கத்திக்கொண்டிருந்தது அந்தக் கத்தல் பழக்கமான ஒரு விஷயம்தான். விட்டு விட்டு, 'அக்கோவ்; அக்கோவ்' என்று சேர்த்து, முறை வைத்துக் கூவிக்கொண்டிருந்தது

இப்போது கமலமும் ஒரு சகஜ நிலைக்கு வந்தவளாகத் தெரிந்தது லஜ்ஜையற்றுக் காணப்பட்ட அவள் முகபாவத்தின் மூலம்.

"அக்காக் குருவி கத்திண்டிருக்கு. இன்னுமே காவேரியிலே தண்ணி வந்துடும் அப்புறம் நாம் இங்கே வர முடியாது" என்றாள் கமலம்

'ஆமாம்; வாஸ்தவம்தான் இந்தக் குருவி நெடுகிலும் இப்படித்தான் கத்திண்டிருக்கும் ஆத்திலே புதுத் தண்ணி வரதை இந்த சூசகத்தினால் தெரிஞ்சுக்கலாம். ஆனா நம்ப கிராமத்திலே இந்தக் குருவி கத்தும்போதெல்லாம் எனக்குப் புதுத் தண்ணி வர ஞாபகத்தை முந்திண்டு வேறே ஒரு ஞாபகம்தான் வரும் அந்த ஞாபகம்தான் ஒரு கதை" என்றேன்.

"அது என்ன கதை? எனக்கு இத்தனை நாள் சொல்லலையே..."

"அது ஒரு காதல் கதை;...காதல் கதைதான் உனக்குப் பிடிக்காதே, கமலம்..."

"இது என்ன வேடிக்கை! அப்படி எப்பவாவது உங்களிடம் சொன்னேனா? காதல்னா என்ன. அதை எப்படி அழகாப் புரியவைக்கிற

துன்னு தெரியாமயே சிலபேர் கதை சொல்ரு; கதைகள் எழுதரு. அதுதான் எனக்குப் பிடிக்கலே, எனக்குப் பொதுவாகக் காதல்ன்னு பிடிக்காதுன்னு தீர்மானிச்சுட்டயளா? என்று கேட்டாள் கமலம்.

''இல்லே; நான் ஏதோ இப்போ சொல்லப்போற கதையின் நினைப்பையும் மனதில் தாங்கிக்கொண்டு அந்த நினைவில் ஒரு நிமிஷம் பார்த்துட்டேன் போலிருக்கு......அதுக்கு என்மேலே குற்றம் கண்டுபிடிச்சே நீ......'' என்றேன்

கமலத்தின் இதழில் புன்னகை களைகட்டியது; கையெழுத்து மறையும் நேரமாகையால், இந்தக் காட்சியைக்காண அவள் முகத்தைக் கூர்ந்துதான் நோக்கவேண்டியிருந்தது. இப்போது தைரியத்துடனே கூர்ந்து நோக்கினேன்.

இப்போதும் அவளுக்கு அலுப்புத் தட்டியதுபோலும்; மேலுக்கு அந்த உணர்வைக் காட்டிக்கொண்டு உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கவிட, "என்ன கதை அது? சொல்லுங்கோளேன்" என்றாள்.

''சொல்றேன்: அது ஒரு நல்ல சுவாரஸ்யமான கதை; உண்மையான சம்பவங்கள் இந்தக் கிராமத்திலேயே துவங்கின கதைதான் அது. இதோ நாம் உட்கார்ந்துகொண்டிருக்கும் இந்த மணற் பரப்புகூடச் சம்பந்தப்பட்டிருக்கிறது இந்தக் கதையில்......'' என்று பிரமாதமான பீடிகையுடன் கதையைத் தொடங்கினேன்

அந்தக் கதை:

1

"வெகு நாட்களுக்கு முன் நடந்த கதை இது; இந்தக் கதையின் சம்பவங்களையெல்லாம் நேரிடையாக அறிந்து வைத்துக்கொள்ளக்கூடிய பிராயம்கூட இல்லே எனக்கு. பின்னால் சேகரித்த விஷயங்கள்தான் இவை.

அதோ தெரிகிறதே- அந்த வாராவதி இன்றைக்குச் சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்டதாகும். அதற்கு முன்னால் அந்தண்டைக் கரைக்குப் போக வேண்டுமென்றால், மூங்கில் பாலம்தான் உபயோகப்பட்டு வந்தது

கிராமத்தார் மூன்று நான்கு தடவைகள் சர்க்காருக்கு மகஜர் மேல் மகஜர்கள் அனுப்பிய பிறகு, நீர்ப்பாசன இலாகாவின் மூலம் இந்தக் காரியம் நிறைவேறியது.

வாராவதியின் வேலைகள் துவக்கமாயின சர்க்கார் நேரிடையாகச் செய்யவில்லை வேலையை; 'காண்ட்ராக்'டாக எடுத்துக்கொண்டு நடத்த முன்வருபவர்களிடம் கொடுத்து செய்து முடிக்கத் திட்டமிட்டனர். அந்தத் திட்டத்தின்படி தஞ்சாவூரில் பிரபல 'கண்ட்ராக்'டராக விளங்கிய ஒருவர்தாம் இந்த வேலையை ஏற்றுக்கொண்டு செய்து வந்தார்.

வேலை துரிதமாக நடந்துகொண்டிருந்தது. கடும் கோடையிலேயே துவக்கி அந்தப் பருவத்திலேயே தண்ணீர் வருவதற்குள்ளாக முடித்துவிடத் திட்டம் போட்டிருந்தனர்.

சர்க்காரின் பிரதிநிதியாக வேலையை மேற்பார்வை பார்க்கச் சில அதிகாரிகள் அடிக்கடி தஞ்சாவூரிலிருந்து இங்கே வருவார்கள்.

வாராவதியின் வேலை தொடங்கிய பிறகு அழுது விடிந்தாற்போலிருந்த கிராமம் சிறிது உணர்ச்சிபெற்று விளங்கத் தொடங்கியது. கிராமத்தின் ஜனங்கள் பெரும்பாலும் கீழ்த் திசையில்தான் இருந்தனர். மேல் திசைக்கு வரத்துபோக்கு அதிகம் இராது. வெளியூர் செல்வோர், அல்லது மாலை நேரங்களில் மைல் கணக்காக ஆற்றங்கரைமீது உலாவப் போவோர் இப்படி வெகு சிலரே காணப்படுவர்.

வாராவதி வேலை தொடங்கிய பின்னர் அந்த வட்டாரத்திலேயே சில தற்காலிகக் குடிசைகள் திடீரென்று தோன்றின கண்ட்ராக்டரின் விசேஷ ஆட்கள், உத்தியோகஸ்தர்கள் இப்படி யாராவது தங்குவதற்கும், சாமான் செட்டுகளைப் போட்டுப் பூட்டி வைக்கவுமாகச் சில 'ஷெட்டுகள்' தோன்றின. கூலி வேலைசெய்யும் ஜனங்கள் வேற்றிடங்களில் தங்கியிருந்து வேலைக்கு ஒத்து வராதென்று அங்கேயே குடிசைகள் போட்டுக்கொள்ளவாரம்பித்தனர்.

மொத்தத்தில் ஆற்றின் கீழ்ப்புறம் அமைந்திருந்த கிராமம் போலவே, இந்தப் புதிய குடிசைகள் தோன்றிய இடமும் ஒரு கிராமமாக மாறிவிட்டது என்று சொல்லலாம்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் தஞ்சாவூரிலிருந்து கணபதிராமய்யர் என்று ஒருவர் இந்தக்கிராமத்தில்வந்து குடியேறினார். முதன் முதலில் அவர் கீழ்த்திசை கிராமத்தில்தான் வீடு கிடைக்குமாவென்று பார்த்தார். ஆனால் வாராவதி 'கண்ட்ராக்ட்' முதலியார், வாராவதி வேலை முடியும் வரையில் அவரை மேல் கரையிலேயே குடியிருக்கும்படி வற்புறுத்தி, அவருக்கு நல்லதாக ஒரு 'ஷெட்டும்' போட்டுக் கொடுத்தார். மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்த அவர், முதலியாரின் ஆலோசனையின் பேரில்தான் இந்த இடத்தில் குடி வந்தார். அதற்கு முன் அவருடைய பூர்வாசிரமம் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் தொழில்; தஞ்சாவூரில் பிரபலமாகத் தன் கலையில் கொழித்துக்கொண்டிருந்த அவருடைய வாழ்க்கையில் அஸ்தமன காலம் தலைநீட்டிவிட்டது போலும்; சிறகொடிந்த பறவை தத்திக் குதிக்கிறமாதிரி இரண்டொரு வீட்டில் பாட்டுச் சொல்லிக்கொடுத்துக் கொண்டு காலட்சேபம் நடத்திக்கொண்டிருந்தார்.

அவருடைய நிழலில் அவர் பெண் சின்னத் தங்கம் வேறே......பெரிய பெண் பெயர் பெரிய தங்கம் ஒரே வார்ப்படத்தில் வார்த்த இரண்டு பதுமைகள் அவர்கள் மூத்த பெண்ணுக்கு ஆசையுடன் வைத்து அந்த 'தங்கம' என்ற பெயரை, இரண்டாவது பெண்ணுக்கும் சூட்டி, இன்னும் இருந்த ஆசையையும் இதன் மூலம் தணித்துக் கொண்டார். வாய் நிறைய 'பெரிய தங்கம், சின்னத் தங்கம்' என்று கூப்பிட்டு வந்தார் இருவரையும். பொதுவாக இந்த முறை மற்றக் குடும்பங்களில் விதிவிலக்கு. அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை அவர்களது பெற்றோர்.

பெரிய தங்கத்துக்குக் கல்யாணம் ஆகி அவள் புக்ககம் சென்று விட்டாள் அப்பாவுடன் அவருக்கு உதவியாக அவருடைய ஏழ்மையில் இன்பத்தில், துன்பத்தில் பங்கு கொண்டு காலம் கடத்தினாள் சின்னத் தங்கம். அவளுடைய தாயார்...... அவள் எப்போதோ போய்விட்டாள்.

சிறகொடிந்த பட்சிமாதிரி வாழ்வதையும்கூட விரும்பவில்லை போலும், தெய்வம். அந்த இரண்டொரு பாட்டு ட்யூஷனும் போய் விட்டது. சின்னத்தங்கம், பாவம், காலத்தை வெறுத்தவளாகியிருந்தாள் வறட்சியடைந்திருந்த அவள் உள்ளம் சலனமற்றுப் போயிருந்தது சுவாரஸ்யமற்ற முறையிலே அமைந்து கிடந்தது அப்போதைக்கு அவள் வாழ்வு.

இந்த சரியான சமயத்தில்தான் கண்டராக்ட் கணபதிராமய்யரைச் சந்தித்தார். முன்பே பழக்கம் கொண்டிருந்த முதலியாரிடம் தன் நிலைமையை விளக்கிச் சொன்னார் அவர். வாராவதி வேலையில் நாட்டம்கொண்டிருந்த முதலியார் அவரைத் தன்னுடன் வரும்படி அழைத்து, இந்தக் கிராமத்திலேயே தங்கி கூலியாட்கள் கணக்கு எழுதுவது முதலிய வேலைகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார். கணபதிராமய்யர் சின்னத் தங்கத்துடன் இந்தக் கிராமத்தில் வந்து குடியேறினார்.

சின்னத்தங்கம் அழகாயிருந்தாள் என்று சொல்வதற்குத் தயங்குகிறேன் ஏனெனில், பொதுவாக அதுவும் கதையின் போக்கை அனுசரித்த மாதிரியில் 'அவள் அழகு' என்று சொல்வதுடன் நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை; அப்படிச் சொன்னால் பூர்ணமாய் அவள் அழகைக் குறிப்பிட்டதாக ஆகாது. மிகவும் சாதாரண குடும்பத்தில், வறுமை என்ற சூழ்நிலையில் ஒரு பாக்கிய சக்கரமாக அவதரித்தாள் அவள்! அவளுடைய பிறப்புக்குப்

பிறகு அக்குடும்பத்தில் பாக்கியம் பெருகிற்று என்று சொல்லமுடியாவிடினும் அதற்கெல்லாம் ஈடு செய்ததுபோல தேவாம்சம் பெற்றவள் மாதிரி அவள் அழகு பெற்று விளங்கினாள்.

தேகத்தினுள்ளே ரத்த ஓட்டத்தைக்கூட எளிதில் பரீட்சித்து விடலாம் என்று எண்ணும் அளவுக்கு மென்மை பெற்ற சரீரம்; மாந்தளிரை நினைவூட்டும் அந்த உடம்பு; சிருங்கார ரசத்தின் எல்லையை நிர்ணயிக்க வேறு அனுபவங்களே தேவையில்லை; அவளுடைய வட்ட வடிவமான முகத்தைப் பார்த்து விட்டால் போதும்.

இவ்வளவு பரிபூரணத்வம் பெற்றிருந்த தங்கத்தின் சூழ்நிலை எப்படி? வறுமை! உடனிருந்து பழக ஒருவருமில்லாத காரணத்தால் தனிமை! இந்த இரண்டு வகையான விஷயங்களும் ஒன்றுபட்ட ஒரு சூழ்நிலைதான் இந்த சூழ்நிலைமையையும் ஒரு சோதனையாகக் கருதி அனுபவித்து வந்தாள் அவள்.

கீழ்கரை ஜனங்களுக்கு கணபதிராமய்யரும் சின்னத் தங்கமும் ஏதோ நூதனப பொருள்கள் போலக் காட்சியளித்தார்கள்; அந்த முறையிலேதான் அவர்களைப் பார்த்தனர் ஜனங்கள. கணபதிராமய்யருக்கு கிராமத்தில் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் அத்தனை ஜனங்களிடையேயும் சின்னத் தங்கம் தனிமையைத்தான் அனுபவித்தாள். அவளையொத்த பெண்களே அந்தக் கிராமத்தில் கிடையாது இருந்த இரண்டொருவரின் வாழ்க்கை முறையும்வேறுமாதிரியாகஇருந்தது. கல்யாணமாகி வாழ்க்கையை முற்றிலும் அனுபவித்துவிட்ட கிழவிகள் போன்று,பேசிப், ப்ழகிக் கொண்டிருந்தனர். கல்யாணமாகாமல். பதினாறு வயது வரை வளர்ந்து நின்றிருந்த தங்கத்திடம் அவர்கள் பழகியது தங்கத்திற்கே பிடிக்கவில்லை. உற்சாகமற்று, போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த தன்னையொத்த பெணகளுக்காக அனுதாபப் படுவதுடன் நிறுத்திக் கொள்வாள் அவள் இன்னும் பார்க்கப்போனால் மேல் கரையைத் தாண்டி கிழக்கே அவள். அடி எடுத்து வைத்ததே ஒரு தடவையோ இரண்டுதடவைகளோதான் அதற்கு மேவில்லை. ஒன்றிலும் பற்றில்லாமல் விரக்தியான மனோபாவத்துடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

2

ஆனி மாதம் பிறந்துவிட்டது. துரிதமாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாராவதி வேலையென்றாலும் ஆற்றில் தண்ணீர் வருவதற்கு சொற்ப காலமே இருந்தது.

இந்த நிலையில், இரண்டு நாட்கள் விடாமல் கோடை மழை வேறு பெய்து வேலையைக் கலைத்தது. இரண்டு நாளையச் சுணக்கம் முதலியாருக்கு ஏராளமான நஷ்டத்தைக் கொடுத்துவிடும்போலிருந்தது.

வேலையை முடிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர் முதலியாரும். சர்க்காரும் சர்க்காரின் பிரதிநிதியாக வந்த ஒரு உத்தியோகஸ்தர்தான் நமக்கு இங்கே குறிப்பிட வேண்டியவர்

உத்தியோகம்பொறுப்பு வாய்ந்த பெரிய உத்தியோகம். அத்தனைக்குக் கலாசாலையில் வாசித்திருக்கிறான் சந்திரமௌளி ஆனால் பிராயத்தில் இளமையானவன்தான் அவன் மிகவும் மெச்சத்தகுந்த முறையில் தன் கடமையைச் செலுத்தி வேலையை மேற்பார்வை பார்த்து வந்தான் அவன் அந்த வேலைக்காக 'சூபர்வைசரா'க அவனைத் தான் அனுப்பியிருந்தனர் மேலதிகாரிகள்.

மழைக்குப் பிறகு இருந்த பத்து தினங்களில். வேலையை முடித்து விடுவதாக உறுதி கூறினார் முதலியார். எனவே வேலை ஸ்தலத்திலேயே அந்தப் பத்து தினங்களும் தங்கியிருப்பது என்று சந்திரமௌளியும் தீர்மானித்தான். முதலியாரிடம் இந்த விஷயத்தைச் சொன்னதும், அவர் அதற்கான ஏற்பாடுகளைச் செயதார். தனியாக வசதியுடன் இருந்த ஒரு 'ஷெட்'டை அவனுக்கு ஒழித்துக்கொடுத்தார் தவிர, அவனுக்குக் கணபதிராமய்யர் வீட்டில் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்தார். கீழ்கரைக்குச்சென்று சாப்பிட்டு வருவதென்றால், நடக்காத காரியம்; வேறு ஹோட்டல்களும் கிடையாது. எனவே, இந்த ஆலோசனையை முதலில் கணபதிராமய்யரே பிரஸ்தாபித்தார். சந்திரமௌளியும் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டான்".

[கதையைக் கேட்டுக்கொண்டு வந்த கமலம் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தாள். 'கதாநாயகியை அறிமுகம் பண்ணிவைத்தேன்; இப்போது கதாநாயகனும் வந்துவிட்டான் கதையிலே, இனிமேல் தான் சுவாரஸ்யம் போலும்'' என்றாள். பால்போல எரித்த நிலவொளியில் அவள் பல் வரிசை பளீரிட்டது.

''ஆமாம். இப்போதுதான் நெருக்கம்! சின்னத்தங்கமும் சந்திர



மௌளியும் காதலர்கள். இவர்கள் சந்திப்பு எவ்வளவு இயற்கையாக அமைந்தது பார்! உண்மையான சம்பவம் என்பதனால் இன்னும் பொருத்தமாக இருக்கிறது. கூடுமானவரை இயற்கை வழியை விட்டுப் பிரியாமல் கதையைக்கொண்டு போகிறேன் கமலம்'' என்றேன்]

''சின்னூ, இன்னிலேருந்து பத்து நாள் நம்மாத்திலே ஒத்தர் சாப்பிடப் போறார் சேத்துச் சமைக்கணும்'' என்றார் கணபதிராமய்யர் சின்னத் தங்கத்திடம்.

அவளுக்கு இந்தவிஷயம் கொஞ்சம் ஆச்சரியத்தை அளித்தது ஒருவர்—அன்னியராயினும்—சாப்பிட வருவதன் மூலம் வீட்டில் கொஞ்சம் நிசப்த நிலைமை மாறி, சலனம் உண்டாகப்போகிறது என்பதை நினைத்துப் பார்த்ததில்தான் அவளுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

''சரி; யார் அப்பா, அது?'' என்று கேட்டாள் அவள்.

''அவர் தஞ்சாவூரிலேயிருந்து வந்திருக்கார் சூபர்வைசர் உத்தியோகம்.'' என்று சொன்னார் தந்தை.

சாதாரணமாகத்தான் பட்டது இந்த விஷயம் சின்னத்தங்கத்துக்கு. அதற்குமேல் பேச்சு ஒன்றும் வளரவில்லை.

சந்திரமௌளியை முதன் முதலில் ஒரு நாள் வேலை ஸ்தலத்தில் பார்த்த கணபதிராமய்யர் சற்றுத் திகைத்தார் அவனுடைய கவர்ச்சிகரமான தோற்றம் அவர் மனதை அள்ளியது. சாதாரணமாக எந்த வாலிபனைக் கண்டாலும், கணபதிராமய்யருக்கு சின்னத்தங்கத்துக்கு வரன் தேடும் ஞாபகம்தான் வரும். தானாக முயற்சித்து அந்தக் காரியத்திலேயே ஊன்றியிருந்து வெற்றியடைவதில் சிரத்தை காட்டுவதில்லை அவர். பெரிய தங்கத்துக்குக் கல்யாணம் செய்வதிலும் இப்படித்தான் ஒத்திப் போட்டு, ஒத்திப்போட்டுக் கடைசியில் ஒருவாறு அவளுக்குக் கல்யாணத்தை முடித்தார். ஏதோ கொஞ்சம் 'வக்கு' இருந்த காலத்திலேயே அப்படி; இப்போது சின்னத்தங்கத்தின் துரதிருஷ்டம் காரணம் போலும் கையில் 'பசை' இல்லாத ஒரு பலவீனம். அவரே முயற்சிப்பதை வெகுவாகத் தடை செய்தது. எங்கேயாவது இந்த மாதிரி கல்யாணம் ஆகாத பையன் யாரையாவது பார்க்கும்போது மாத்திரம் சின்னத்தங்கத்துக்கு வரன் பார்க்க வேண்டிய தன் மகத்தான 'பொறுப்பு' நினைவுக்கு வந்துவிடும். இந்த ரீதியில் அவர் சந்திரமௌளியைப் பார்த்தபோது உடனே சின்னத் தங்கத்தின் ஞாபகம் அவருக்கு வந்தது. இரண்டு பேருக்கும் இருந்த பொருத்தத்தை நினைத்து வியந்தார்......ஆனால் சந்திரமௌளி 'கவர்ன்மெண்ட்' சூபர்வைசர் என்பது முதன் முதலாக அவருக்குத் தெரிய வந்தபோது, அவர் கற்பனைக் கோட்டை 'சரசர' வென்று சரிந்தது! தன் பைத்தியக்காரத்தனத் துக்காகத்தானே பச்சாத்தாபமடைந்தார்.

கணபதிராமய்யரே இந்த நிலையை அடைந்தாரென்றால், சின்னத்தங்கத்துக்குச் சந்திரமௌளியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது அவள் எந்த நிலையைப் பெற்றிருப்பாள் என்று ஊகிக்கலாமல்லவா?

'சந்திரமௌளி: 'சூபர்வைசர்' என்றதும் அவள் அனுமானத்தில், 50 வயதுக்குமேற்பட்ட ஒரு கிழவர், தொளதொளவென்று நடந்து கொண்டு, பஞ்சகச்சமும் தானுமாய்க் காட்சியளித்தார்.

''அம்மா குழந்தை, அவர் சாப்பிட வந்துட்டார்; இலையைப் போடு'' என்று தந்தை சொன்னதும், இயற்கையான எண்ணத்துடன் அந்த 'அவரை' ஒரு முறை திரும்பிப் பார்த்தாள் அவள் காலின்கீழ் ஒரு நெருப்புத் துண்டம் கிடந்து அதை மிதிக்க நேரிட்டு விட்டால் எப்படி இருக்கும்? வேதனை உணர்ச்சிக்கு உதாரணமில்லை இது. அத்தகைய அதிர்ச்சியடைந்தாள் அவள், சந்திரமௌளியின் தோற்றத்தைப்பார்த்து விட்டு கணபதிராமய்யர் வீட்டில் இப்படிப் பளிங்கு பொம்மை போன்று ஒரு பெண் இருப்பது முதன் முதலாகத் தெரிய வரவும் அவனும் அதிர்ச்சியடைந்தான். பிறகு சமாளித்துக்கொள்ளும் பாவனையில் அர்த்தமில்லாமல் கூடத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

தன் கற்பனையில் கண்டிருந்த சந்திரமௌளிக்கும் தன் முன்னால் பிரத்தியட்சமாகக் கண்ட சந்திரமௌளிக்கும் இருந்த வித்யாசத்தைப் பார்த்துத் தன்னையே பரிகசித்துக்கொண்டாள் சின்னத்தங்கம்.

சின்னத்தங்கத்தின் வாழ்க்கையில் முதன் முதல் பிரகாசம்தோன்றியது இந்தச் சந்தர்ப்பத்தில்தான் என்பதை இடையில் சொல்லிவிட வேண்டும்.

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு. பித்தம், காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம் பெண்களும் அருந்தக்கூடியது பத்தியமில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனாம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)

189, வக்கீல் புது தெரு

Post Box No. 27 — மதுரை.

[அடுத்த இதழில் முடியும்]



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்கோயிலில்

பி.ஸ்ரீ.

47

அம்மையார் பேயார் ஆனது

★

கணவன் மனைவியின் அடிகளில் தாழ்ந்து வணங்கியது பார்த்தவர்களுக்கு எவ்வளவு அதிசயமாக இருந்திருக்க வேண்டும்! 'மானிளம் பிணைபோல்' வந்து நின்றார் மனைவியார் பரமதத்தன் தன் இரண்டாம் மனைவியோடும் தளர்நடையிட்டு வந்த பெண் குழந்தையோடும் எதிர்கொண்டுவந்தவன் கும்பிட்டதும் புனிதவதியார் அச்சத்துடன் ஒதுங்கி நின்றார் உறவினரோ வெட்கமடைந்து, என்ன இது பரமதத்தா?—மனைவியைக் கும்பிட்டாய்?' என்று கேட்டார்கள்.

'நீங்களும் கும்பிடுங்கள்!'

பரமதத்தனின் விடை அவர்களை மேலும் திகைப்படையச் செய்திருக்க வேண்டும்:

மற்றவர் தம்மை நோக்கி
'மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வம் ஆதல்
நான் அறிந்(து) அகன்ற பின்பு,
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்மின்' என்றான்.

[மகவு—குழந்தை. பொற்பதம்—அழகிய பாதங்கள் செய்மின்—செய்யுங்கள்]

தான் மனைவியைக் கும்பிட்டது போதாதென்று மற்றவர்களை நோக்கி 'நீங்களும் கும்பிடுங்கள்' என்று சொன்னதும் சுற்றத்தார் 'என்ன ஆச்சரியம், என்ன மாயம்!' என்று திகைத்து நின்றதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை அப்போது புனிதவதியார் சிவபெருமானின் அடிகளைப் போற்றி ஒரு பிரார்த்தனை செய்து கொண்டார்.

பேயாகப் பிரார்த்தனை!

ஆச்சரியமான பிரார்த்தனை; சிந்தை ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு பிரார்த்தித்துக் கொண்டதாகக் கூறியுள்ளார் சேக்கிழார் பெருமான் இதுதான் பிரார்த்தனை செய்ய வேண்டிய முறை.

புனிதவதியாரின் பிரார்த்தனை தான் என்ன? இறைவனே! நீ என்னை ஆட்கொண்டதால் கணவன் என்னை விட்டுப் பிரிந்தான் அவனுக்காக நான் தாங்கியிருந்த இந்த அழகு மிக்க உடம்பு இனி எனக்குத் தேவையில்லை. உன் திருவடிக்கீழ் இருந்து எக்காலமும் போற்றும் பேறுதான் அடியேனுக்கு இனிமேல் தேவை. அதற்குப் பேய் வடிவு தந்தருள வேண்டும்!' என்பது பிரார்த்தனை.

திருவருள் அப்படியேகூடப் புனிதவதியார் ஊன் நிறைந்த அழகை உதறியெறிந்து எலும்புடலாக நின்றாராம் விரும்பிய பேய் வடிவம் வந்துவிட்டது: ஆனால் பயமுறுத்தும் பேயல்ல. விரும்பி வணங்கும் பேய்; தமிழர்மீது வணங்கும் பேய் மண்ணெலாம் வணங்கும்பேய்; வானமும் வணங்கும் பேய்!' என்கிறார் சேக்கிழார் சுவாமி

வானமும் மண்ணும் எல்லாம்
வணங்குபேய் வடிவம் ஆனார்.

காரைக்கால்—புனிதவதியார் இனிமேல் காரைக்கால்—பேயார் ஆகிவிட்டார் இவரைக் காரைக்கால—பேய் அம்மையார் என்றும் சொல்லுகிறார்கள்

பேய் வடிவம் என்றால் புனிதமான பேய் வடிவம், ஞான வடிவம்.—ஆண்டவனை அறிந்து போற்றும் ஞானவடிவம் 'ஆண்டவன் அறிந்து கொண்டால் போதாதா? உலகத்திற்கு நாம் எப்படி இருந்தால் என்ன?' என்ற மனநிலையைப் பிரதிபலிக்கின்றது இந்தப் பேய் வடிவம்.

மானுடம் இவர்தாம் அல்லர்!

என்றானே கணவன் அப்படியே பிறரும் எண்ணும்படி ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஞானப்பிறவியென்ற மறு பிறவியை இந்தப் பிறவியிலேயே பெற்று வாழ்ந்தார் காரைக்கால் புனிதவதியார் என்பது கதையின் உட்பொருள்.

மகிழ்ச்சியும், அச்சமும்

அம்மை பேயானதும், எங்கும் மலர் மழை பொழிந்ததென்றும், தேவதுந்துபியின் நாதம் எங்கும் நிறைந்து விம்மியதென்றும், தேவர்களும் முனிவர்களும் அளவளாவினர் என்றும், சிவகணங்கள் கூத்தாடின என்றும் பெரிய புராணம் சொல்லுகிறது இந்த நிலையில்,

தொலைவில்பல் சுற்றத் தாரும்
தொழு(து) அஞ்சி அகன்றுபோனார்.

பரமதத்தன் நீங்களும் கும்பிடுபோடுங்கள் என்று சொன்னபோது திகைத்து நின்றவர்கள் இப்போது ஒருவரும் வற்புறுத்தாமலே அஞ்சித் தொழுதவண்ணம் நழுவி விட்டார்கள் அவர்களுக்கும் முன்பே பரமதத்தன் மனைவியோடும் மகளோடும் மெள்ளத் தொழுது நழுவிவிட்டான் என்று சொல்லவா வேண்டும்?

பிரபந்தம் பாடினார்

பிறகு அம்மையார் உலகத் தொடர்போடு துன்பத் தொடரெல்லாம் நீங்கப்பெற்றார் என்றும், திருவருளோடு ஒன்றுபட்டுப் பாடல்கள் பாடினார் என்றும் சொல்லுகிறார்கள்.



சென்னை சட்டசபைக்-காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு சென்னைப் புதிய மந்திரி சபையின் பிரதம மந்திரியான ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ பக்தவத்ஸலம் முதலியோரை தலைவர் தேர்தல் தினத்தன்று சேர்த்து எடுத்த படம்.

உற்பவித்(து) எழுந்த ஞானத்(து)
ஒருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி
அப்பொழு(து) அருளிச்செய்வார்.

[உற்பவித்து—தோன்றி உமைகோன்—சிவபெருமான்]

என்கிறது பெரிய புராணம். இரட்டை மணிமாலை என்ற பிரபந்தத்தையும் அந்தாதியாகப் பாடியிருக்கிருர் காரைக்கால்-பேயார்.

அம்மையும் அப்பாவும்

அப்பால் இவர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலயங்கிரியை அடைந்து அந்த மலை மேல் அடிவைத்து நடப்பது தவறு என்று தலையால் நடந்து போனுராம். அப்போது உமாதேவியார், எலும்புடம்பு தலையால் நடந்து வருகிறதே; அந்த அன்புதான் என்னே, என்னே!' என்று அதிசயித்தாராம். அதற்குச் சிவபெருமான்,

வரும்இவள் நம்மைப் பேணும்
அம்மைகாண் உமையே!
மற்(று)இப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப்
பெற்றனள்!

என்று பதில் சொன்னுராம்.

உமையம்மையை நோக்கிச் சிவபெருமான் காரைக்கால்-அம்மையை 'இவள் நம்மைப் பேணும் அம்மை!' என்று அறிமுகப் படுத்தியதுடன், இந்த அம்மையை நோக்கி, 'அம்மையே!' என்றும் அருளோடு அழைத்தாராம்:

அருகு வந்(து) அணைய நோக்கி
'அம்மையே!' என்னும் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்.

[அருகு வந்து அணைய—நெருங்கி வந்துசேர.]

சிவபெருமான் 'அம்மையே' என்று தம்மை அருளுடன் அழைத்'! தும் அம்மையாரும் 'அப்பா'! என்று அன்புடன் கூவிக் கொண்டு அடிவிழுந்து வணங்கினுராம்:

அங்கணன் அம்மையே!' என்(று)
அருள்செய, 'அப்பா!' என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்து வீழ்ந்(து) எழுந்தார்.

[அங்கணன்—சிவபெருமான். பங்கயம்-தாமரை.]

பிறகு உனக்கு வேண்டியதென்ன?' என்று கேட்டாராம் சிவபெருமான் அதற்கு அம்மையார்,

இறவாத இன்ப அன்பு
வேண்டிப், பின் வேண்டு கின்றுர்;
'பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்(பு) உண்டேல், உன்னை
என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும. நான் மகிழ்ந்து பாடி,
அறவா! நீ ஆடும் போ(து) உன்
அடியின்கீழ் இருக்க' என்றுர்.

[அறவா-தருமத்தைச் சொரூபமாக உடையவனே]

'சுவாமி, அடியேனுக்கு இறவாத இன்ப அன்பு வேண்டும்' என்பதைத் தான் முதன்மையான வரமாகவும் கேட்பார் காரைக்கால அம்மையார். இரண்டாவது வரமாகப் 'பிறவாமை வேண்டும்; பிறப்பு உண்டானுல் தேவரீரை ஒரு காலமும் மறவாதிருக்க வேண்டும்' என்றுர் மூன்றுவது வரமாக அம்மையார், 'ஐயன் ஆடும்போது அடியேன் பாட வேண்டும்' என்று முறையிட்டுக்கொண்டாராம்.

அம்மையார் வேண்டியபடி வரம் கொடுத்த பெருமான், 'தெற்கே திருவாலங்காட்டில் நான் ஆடுவது கண்டு நீ பாடுவாயாக' என்று அருள் செய்தாராம். அம்மையாரும் அங்கே போய்த் 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' என்ற பிரபந்தத்தைப் பாடிப் பேரின்பம் அடைந்தார் என்பர்.

ஆதியோ(டு) அந்தம் இல்லான்
அருள்நடம் ஆடும் போது,
கீதம் முன் பாடும் அம்மை

என்று அடிமலர் போற்றி இந்தக் 'காரைக்கால் அம்மையார் புராண'த்தை முற்றுப் பெறச் செய்கின்றுர் சேக்கிழார் பெருமான்



தேர்த்தட்டு வார்த்தை

'குஞ்சரன்'

வாரன்

21

சாரமும் பலனும்

★

இருப்பவனைப்பற்றியும் இறப்பவனைப் பற்றியும் அறிவுடையோர் கவலைகொள்ளமாட்டார்கள். இருப்பும். இறப்பும் காணும் உடலைப் பாதித்தாலும் காணாத உயிரை எந்த அளவிலும் பாதிப்பதில்லை.

உயிரும் உடலும்

ஒரே உடலுக்கு, இளமை, யௌவனம், கிழத்தனம் என்ற பல பருவங்கள் வருவதுபோல உயிருக்குப் பற்பல மாறுதல்கள் தோன்றும்; தோன்றியவை அழியும். ஒருவன் கிழிந்த வஸ்திரத்தைக்களைந்து புதிய வஸ்திரத்தை அணிந்துகொள்வது போல். உயிர் பழைய சரீரத்தை விட்டுப் பிரிந்து புதிய சரீரத்தைப் பெறுகிறது. தோற்றமும் மறைவும்; வளர்தலும் தேய்தலும்; பிறப்பும் இறப்பும், ஆகிய விகாரங்களெல்லாம் உடலுக்கே உரியவை உடலுக்கு அவை சுபாவங்கள். ஆகையால் விலக்க முடியாதவை.

உயிருக்கோ அவ்விகாரங்கள் எவையும் இல்லை. உயிர் நித்யமானது அழிவற்றது, அசைவற்றது எங்குமுள்ளது, எக்காலத்துமுள்ளது பஞ்ச பூதங்களாலும் ஆயுதங்களாலும் வேறு எவற்றாலும் அழியாதது விகாரமடையாதது. உண்டாகவோ பிறக்கவோ செய்யாதது; ஆகையால் அழியவோ இறக்கவோபோவதில்லை. தோன்றியது மறையும், பிறந்தது இறக்கும். அஞ்ஞானத்தால் உயிரே இறப்பதாக நினைப்பவனும். பிறந்ததெல்லாம் இறந்தே தீரும் ஆதலால், கவலைகொள்ள இடமே இல்லை.

சுய தர்மம் விடத்தகாதது

க்ஷத்திரியனுக்கு யுத்தம் சுய தர்மம் அவனைச் சுவர்க்கத்திற்கு அனுப்பும் வாயில். தானாக வந்த போரைக் கைவிடும் க்ஷத்திரியன் அதனால் கீர்த்தியை இழப்பான் பழி பாவத்திற்கு ஆளாவான். மரணத்தினும் அப்பழி கொடியது போரைக் கைவிட்டால், பயந்து பின் வாங்கியதாகப் பலவீரர் தூற்றுவர் ராஜ்யமுமின்றி இம்மையில் அப்பழிக்கிடமாக வாழநேரும் சுய தர்மத்தைக் கைவிட்ட பாவத்தால் மறுமையில் நரகத்தில் அழுந்த வேண்டும். போரை மேற்கொண்டால். வெற்றி கிட்டி இம்மையில் ராஜ்ய சுகம் கிட்டலாம் மறுமையிலும் சுவர்க்க இன்பம், புண்ணிய காரணமாகக் கிடைக்கும் போரில் இறந்தாலும் புண்ணியத்தால் மறுமையில் சுவர்க்கப் பேறு கிடைக்கும் பாப புண்ணியம் இரண்டும் பந்தத்தையே தருகின்றன ஆதலால் கருமத்தை விடாமல் பந்தத்திற்கு ஆளாகாதிருக்க வேண்டும்.

பலனில் இச்சை விடத்தக்கது

வேதம் கடல் அல்லது தடாகம் போன்றது அதன் ஸாரமாகிய உபநிஷத் கிணறு போன்றது. வேதம் கூறும் கரும பலன்களில் ஆசை வைக்காமல் ஸித்தி அடையினும் அடையாதிருப்பினும் ஸமமாக எண்ணிக் கருமத்தைச் செய்தால். பந்தம் செய்யும் பாப புண்ணியம் இரண்டிற்கும் ஆளாகாதிருக்கலாம். பந்த நிவர்த்தியை அடையலாம். பல திறப்பட்டவர்கள் நன்மை கருதி விரிவாகவிருக்கும் வேதத்தைக் கண்டு கலங்காமல் அதன் நோக்கத்தையும் ஸாரத்தையும் தெளிவாகக் கூறும உபநிஷத்தால் இப்பொருளை கிரகிக்கலாம். பலனில் ஆசையின்றிக் கர்மாவைச் செய்வதே யோகம். இந்த யோகத்தால் ஆத்மக் ஞானமும் கிட்டும்.

ஞானியின் தன்மை

ஆத்மக்ஞானி ஆசைகளை அறவே ஒழித்திருப்பான் சுக துக்கங்களில் முறையே விருப்பு வெறுப்புக் கொள்ளமாட்டான் அவயவங்களைத் தன்னுள்ளே அடக்கிக்கொள்ளும் ஆமைபோல், விஷயங்கள் கிட்டினாலும் ஞானி தன் இந்திரியங்களை அவற்றில் புகவொட்டாது தன்னுள்ளே அடக்கிக்கொள்வான் இந்திரியங்களைத் தன் வசப்படுத்தியவனுக்கே ஞானம் நிலைத்திருக்கும். மோட்சம் கிட்டும். ஆனால் ஆத்மஸ்வரூபம் கிட்டும்வரை, காற்று கப்பலை இழுப்பதுபோல், இந்திரியங்களை அனுசரித்துப் போகும் மனம் ஒருவன் விவேகத்தை இழுக்கும்.

சாந்தி குலைவதேன்?

தகாத விஷயங்களைச் சிந்திப்பதிலிருந்து அவற்றில்பற்று உண்டாகிறது. அதனால் காமம், கோபம், மோஹம், நினைவு மறைதல், சாந்தி நாசம் முதலியன முறையே உண்டாகின்றன. மனம் ஏகாக்ரப் படாதவனுக்கு சாந்தியும் இல்லை; சுகமுமில்லை கடலில் சேரும் நதிகள்போல் எவனைச் சேரும் விஷய ஆசைகள் அடியோடு மடிகின்றனவோ அவனே ஞானி, ஞானயோகி. அந்நிலையே ப்ரும்ம நிர்வாணம். அதைப்பெற அஹங்கார மமகாரங்களாகிற மோஹத்தை விடவேண்டும் ஆத்மக்ஞானம் அடைந்தவன் மறுபடி பிறப்பதில்லை

இவ்வத்யாயப் பொருளை இன்னும் சுருக்கமாக்கிச் சிந்தையில் தரிக்கும வண்ணம், வேதாந்த தேசிகர் என்னும் பெரியார் நாலுவரிகள் கொண்ட ஒரு அழகிய தமிழ்ப் பாட்டில் வெளியிடுகிறார்.

உடலம் அழிந்திடும்; உள்ளுயிர்
ஒன்று அழியாது எனைப்போல்;
விடுமதிபற்று; விடாதது
அடைத்த கிரிசைகளே;
கடுக உனக்கு உயிர்காட்டு
நினைவு அதனால் உளதாம்;
விடு மயல்; என்று விசயனைத்
தேற்றினன் வித்தகனே.

(இன்) உடலம் அழிந்திடும்—தேகம் அழியும், உள் உயிர் ஒன்று எனைப்போல் அழியாது-சூட்சுமான ஒப்பற்ற ஜீவாத்மா (பகவானாகிய) என்னைப்போல் என்றும் அழியாது. விடாதது அடைத்த கிரிசைகள்—(அவரவர்க்குரிய) நித்திய கர்மாக்கள விடத்தக்கதல்ல. விடுமது பற்று—அவற்றின் பலனின் ஆசையே விடவேண்டியது அதனால்—நிஷ்காம்ய கருமத்தால் உனக்கு—உனக்கு, கடுகு—விரைவில், உயிர்காட்டு நினைவு உளதாம்—ஆத்மஸ்வரூபக்ஞானம் உண்டாகும். மயல் விடு—அக்ஞானத்தை விட்டுவிடு, என்று—என்று உபதேசித்து, வித்தகன்—பகவான், விசயனைத் தேற்றினன்—அர்ஜுனனைத் தெளிவுபெறச் செய்தான்

பலன் கூறும் கதை.

தக்ஷிண தேசத்தில் புரந்தரம் என்ற நகரத்தில் தேசவர்மா என்ற பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் சாஸ்திர ஞானத்தில் தேர்ந்து தனக்குரிய தர்மங்களை விடாது அனுஷ்டித்து வந்தான் தேவ பூஜை அதிதி பூஜை ரிஷிகடன், பிதுர்க்கடன் இவற்றைக் குறைவில்லாமல் செய்தும் அவன் மனதிற்குச் சாந்தி உண்டாகவில்லை மோட்சமடைவதற்கான ஞானத்தைப் பெறும் பொருட்டு ஞானிகள். யோகிகள் முனிவர்களை அடிக்கடி வரவழைத்து ஆராதித்தும் வந்தான்.

ஒருநாள் ஆத்மஸ்வரூபம் கிட்டப்பெற்ற ஜீவன் முக்தரை சந்தித்தான் அவர் முகத்தில் அபூர்வமான ஒளியும் சாந்தியும் நிலவுவதைக் காணப் பிராமணனுக்கு ஆச்சரியமாயிருந்தது உலக விவகாரங்களில் ஈடுபட்டபோதிலும் அவர் மனம் சமாதியிலமர்வது தேவ சர்மாவுக்கு நன்கு விளங்கிற்று அவரை நன்கு பூஜித்துவிட்டு சர்மா மிக்க வணக்கத்தோடு தன் சிந்தையை அடக்க ஒரு உபாயம் கூறும்படி ஜீவன் முக்தரை வேண்டினா அதற்கு யோகி மித்ரவான் என்ற பெயருடைய ஆடுமேய்ப்போனின் இருப்பிடத்தைச் சொல்லி அவனைப் போய்க் கேட்டுத்தெரிந்து கொள்ளச்சொன்னார். சர்மா உடனே அவ்வாட்டிடையனைத் தேடிச் சென்று கடைசியாக அவனை ஒரு வனத்தில் த்யானம் செய்துகொண்டிருக்கக் கண்டார் சர்மா அவனை வணங்கித்தான் வந்த காரியத்தைத் தெரிவித்தபோது ஆட்டிடையன் சொல்லலானான்

கோதாவரி தீரத்தில் ப்ரதிஷ்டானம் என்ற பட்டணத்தில் துர்தமனன் என்பவன் வாழ்ந்து வந்தான் அவன் அந்நாட்டரசன் அளித்த தானங்கள் பலவற்றைப் பெற்று ஜீவித்தான் தானம் பெறுவது பாபதொழிலாகையால் அவன் இறந்த பின் கர்மாவிற்குரிய நரகங்களை அனுபவித்துப் பின் ஓர் வேட குலத்திலே பிறந்தான் நீசப் பெண் ஒருத்தியை விவாகம் செய்து வாழ்ந்தான் வயிறு வளர்க்க வகை இன்றி அவன் கஷ்டப்படுவதைப்பார்த்த அவன் மனைவி, விபசார தொழிலைக் கைக்கொண்டு பொருள் தேட ஆரம்பித்தாள் நாளடைவில் கொழுத்திருந்த ஒரு சண்டாள விடனைக் காதலனாக அடைந்தாள் அவன் மூலமாக அவளுக்கு ஒரு பெண் பிறந்தது. அப்பெண் குழந்தை தக்க பருவம் அடைந்தபோது தன் மகள் என்று கூடப் பாராமல் விவாகம் செய்துகொண்டான்.

இப்பாதகங்களுக்கெல்லாம் இடங்கொடுத்த அப்பெண்ணின் தாயும் ஒருநாள் திடீரென இறந்துடாகினீ என்னும் பூதமாகப் பிறந்தாள் பூதமாயிருந்து தன் முதல் புருஷனாகிற வேடனை உயிரோடு உண்டுவிட்டாள். பூதமாயிருந்த அச் சண்டாளியும் வேடனும் யமலோகம் சென்று பல நரகங்களை அனுபவித்தனர். மறுபடி வேடன் சிறுத்தையாகவும் சண்டாளி ஆடாகவும் மறுஜன்மம் எடுத்தனர். அச்சிறுத்தை ஒரு நாள் ஆட்டைத் துரத்திற்று. அப்போது ஆட்டு மந்தையோடு நானும் (ஆட்டிடையன்) பயந்து ஓடினேன் இந்த இடத்திற்கு வந்ததும் ஆடு ஓட்டத்தை நிறுத்தி நின்றது சிறுத்தையைப் பார்த்துத் திரும்பி விருந்தாளியை உபசரிப்பவர் போல் 'என்னைச் சாப்பிட்டு உன் பசியை ஆற்றிக்கொள்' என்று வேண்டிக்கொண்டது சிறுத்தையோ 'பிற பிராணியைக் கொன்று தின்று உடலை வளர்ப்பது பாபச்செயல் அல்லவா? என்று தர்மம் கூறியது இச்சம்பாஷணையைக் கேட்டு ஆச்சர்யமடைந்து நின்ற நான் 'பிராணிகளாயிருந்தும் நீங்கள் இருவரும் விரோதத்தையும் பயத்தையும் விட்டு இவ்விடத்திற்கு வந்ததும் மனிதரைப் போல் பேசக் காரணம் என்ன?' என்று கேட்டேன் காரணம் சொல்ல முடியாமல் சிறுத்தையும் ஆடும் 'அங்கே அருகில் இருந்த ஒரு வானரத்தைக் கேட்கலாம்' என்று சொல்ல மூவரும் வானரத்தினிடம் சென்று அந்த க்ஷேத்திர மகிமையை என்னவென்று கேட்டோம். வானரம் சொல்வது:

இங்கு ப்ரும்மா ப்ரதிஷ்டை செய்த திரியம்பக லிங்கம் ஒன்று உண்டு அதை ஸுகர்மா என்னும் அந்தணன் ஒழுங்காகப் பூஜித்து வந்தான் லிங்கத்திற்கு நைவேத்தியம் செய்த கந்தமூல பலங்களையே அவன் சாப்பிடுவது வழக்கம். ஒரு தினம் அவன் இருப்பிடத்திற்கு வந்த அதிதி ஸுகர்மாவின் நியம நிஷ்டையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டவராய் அங்குள்ள கல்மீது கீதையின் இரண்டாம் அத்யாயத்தை எழுதி வைத்து அதைப் பாராயணம் பண்ணும்படிச் சொல்லிப் போனார் அன்று முதலே இவ்விடத்தில் இருப்பவருக்கும் வருபவருக்கும் இயற்கையாக அமைந்த பகைமை நீங்கி சாந்தியே பரவியிருக்கிறது எங்களிடம் குரங்கு சொன்னது அநுபவத்தில் முற்றும் உண்மையாகவே இருக்கிறது. நீரும் இக்கீதை இரண்டாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்தால் மனச்சாந்தி உண்டாகும். என்று ஆட்டிடையன் சொன்னான் அவனை வணங்கித் தன் இருப்பிடம் சென்று, தேவ சர்மா ஓர் ஆத்மக் ஞானியை அடுத்து இரண்டாம் அத்யாயத்தை உபதேசம் கேட்டான் அதன் பலனாக மோக்ஷத்தையும் அடைந்தான். (பாத்ம புராணத்திலுள்ளது.)

துஷ்யந்தலம்!

நாகராஜன

[சென்றவாரத் தொடர்ச்சி]

அங்கம் 4

காலம் — காலை வேளை.

இடம் — கண்வின் வீடு.

பாத்திரங்கள் — கண்வ், துஷ்யந்தை, அவளுடைய தோழிகள்.

துஷ்:—அப்பா! என் உயிரினும் மேலாகிய உங்களைப் பிரிந்து எப்படியப்பா இருப்பேன்!

கண்வ்:—ஆ! மகளே! சரி; வருந்துவதனால்தான் யாது பயன்? துஷ்யந்தையாகிய நீ என்று ஒரு ஆணாகப் பிறக்காமல் பெண்ணாய்ப் பிறந்துவிட்டாயோ, அப்பொழுதே பிறன் ஒருவனுக்கு உரியவள் அப்படியிருந்தும் உன்னை உடமைக்காரனிடம் ஒப்புவிக்கும்பொழுது இந்த மனம் ஏன் இப்படிக் கலங்குகிறது?

துஷ்:—ஹா! அனும்வதா! பிரியசூதா! உங்களை விட்டு எப்படியடி அந்த அயோத்தி குடியில் வாழ்வேன்!

பிரி:—குழந்தை உள்ளம் படைத்த, பொன்னே போன்ற உன்னுடன் பழகிவிட்டு இனி இந்த ஊரில்...

கண்வ்:—ஏன் கலங்குகிறீர்கள் குழந்தைகளே! (கண்களைத் துடைத்துக்கொண்டு) சரி; துஷ்யந்தை! சந்தோஷமாய் போய் வா!

கணவனுடன் சாந்தியுடனும் இன்பமுடனும் வாழ்க்கை நடத்து!

துஷ்:—அ...ப்...பா!...போய்...வருகிறேன்!

அங்கம் 5

[துஷ்யந்தையை நந்தவனத்தில் விட்டுவிட்டு வந்த சகுந்தலன் அயோத்தி குடிக்கு வந்த பிறகு தான் 'அவள் விலாசத்தை அறியாமல் வந்துவிட்டோமே!' என்று நினைத்து வருந்தினான். மிகப் பெரிய அந்த நகரில் பதினேழுவயதுப் பெண் ஒருத்தி என்ற ஒரே அடையாளத்தைமட்டும் வைத்துக்கொண்டு அவளை எப்படிக் கண்டு பிடிப்பது என்று தெரியவில்லை. இனி அவளைச் சந்திப்பது என்பதே மிக மிகக் கஷ்டம் என்று தெரிந்தவுடன் அவனால் பிரிவின் ஏக்கத்தைச் சகிக்க முடியவில்லை ஆகவே அவளைப்பற்றிச் சற்று மறக்க மயக்கம் கொடுக்கும் மருந்துகளை உட்கொள்ளப் பழக்கப்படுத்திக் கொண்டான். துஷ்யந்தை அவனுக்கு எதிரில் நின்றபோதும் முழு மயக்கத்திலேதான் இருந்தான்]

துஷ்:—ஆ! நாதா!

சகு:—நாதனா? யாரது நாதன்?

துஷ்:—என்ன சுவாமி பரீட்சிக்கிறீர்களா? நாதா!...

சகு:—மறுபடியும் நாதனா? நான் நாதனில்லையே! சாமிநாதன் ராமநாதன், ரங்கநாதன் கூட இங்கு இல்லையே! யாராவது ஆள் மாறாட்டமோ?

துஷ்:—ஆ! சுவாமி! அந்த நாளை மறந்துவிட்டீர்களா? அன்று கல்லூரி நந்தவனத்தில்...

சகு:—என்ன? கல்லூரி நந்தவனமா? நான் பள்ளிப் படிப்பையே தாண்டினவனில்லையே!

துஷ்:—ஏன் வீணாக என் மனத்தைப் புண்படுத்துகிறீர்கள்? சுவாமி!

சகு:—யார் உன் மனத்தைப் புண்படுத்துகிறார்கள்? ஏதாவது பைத்தியம்...

துஷ்:—ஹா நாதா!

சகு:—சரி; சரி: மறுபடியும் நாதனா? போ. வெளியே! யாரடா அங்கே!

துஷ்:—ஹா! 'அன்று உன்னைத்தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினையேன்' என்று சொன்ன தாங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? சீக்கிரம் திரும்பி வந்து உன்னை அழைத்துப் போகிறேன்' என்று உறுதிமொழி கொடுத்துவிட்டு, எட்டு மாதங்களாகியும் அழைக்க வராமலிருக்கவே, நானாகப் புறப்பட்டு வந்து உங்கள் காலடியில் விழும்பொழுது என்னைப் புறக்கணிக்கிறீர்களா?...சுவாமி! வேடிக்கை. பரிகாசம் எல்லாம் போதும்! என் நிலையை அறியாமல் என்னை இன்னும் புண்படுத்துவதும் அழகா? முதன் முதல் அன்று என்னைப் பார்த்தவுடன் அன்புடன் வார்த்தைகளைக் கொட்டிய தாங்கள் வாய் ஏன் இன்று இவ்வளவு கோபத்துடன் வார்த்தைகளை உதிர்க்கிறது? சுவாமி! என்னால் பொறுக்கமுடியாது! என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் பிரபு!

சகு:—போதும் உன் பிரசங்கம்! உன்னுடன் பேச எனக்கு நேரமில்லை. ....தடியன்களா? ஏண்டா நிற்கிறீர்கள்?

துஷ்:—சுவாமி! இதற்குத்தானா...

(மூர்ச்சித்து விழுந்துவிடுகிறாள் அவளை வேலைக்காரர்கள் தூக்கி ஊருக்கு வெளியே விட்டுவிடுகிறார்கள்.)



அங்கம் 6

இடம் — சகுந்தலன் பங்களா.

காலம் — சில வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள்

பாத்திரங்கள் — சகுந்தலனும் இரண்டு ஆட்களும்.

[சகுந்தலன் நல்ல நினைவுத் தெளிவுடன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறான் இரண்டு ஆட்கள் வருகின்றனர்]

முதல்வன்:—சாமி! இவன் என் மச்சான்!

இரண்டாமவன்:—ஆமாம் சாமி! இவன் என் தங்கை புருசன் இவன் என் தங்கையிடம் வந்து என்னன்னமோ சொல்கிறான் சாமி!

முதல்வன்:—ஏன். சாமி! அவ, என் பெண்சாதி,

நான் அவளை என்ன பண்ணினால் இவனுக்கு என்ன?

இரண்டா:—சரி; சாமி! அவளும் இஷ்டப்பட்டால் சரி. அவ சம்மதிக்காதபோது இவன்...

சகுந்தலன்:—ஏய்! என்னடா இது? ஒரு சமயத்தில் ஒருவன் தான் பேசணும்!

முதல்வன்:—சரி சாமி! இவன் என் மச்சான். என் பெண்சாதியை நான் அதான் சாமி சமூகத்திலே சொல்ல வெக்கமா இருக்குதுங்க! அவ சம்மதிக்கல்லை...

சகு:—அடடேடே!... (துஷ்யந்தையின் ஞாபகம் வருகிறது) ஹா! துஷ்யந்தை! துஷ்யந்தை! பாவி, நான் உன்னை மறந்துவிட்டேன்! துஷ்யந்தை! (சோர்ந்து விழுகிறான்) ஆ! துஷ்யந்தை! பல வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் நீ பூரண கர்ப்பிணியாய் என் முன்பு வந்து நின்று. "நாதா" என்று அழைத்தாயே! ஆ! என் உயிரே மயக்கத்தில் உன்னை மறந்து புறக்கணித்தேனே! ஹா! என் கண்ணே! நீ எங்குதான் சென்று



என்ன என்ன துக்கத்தை எல்லாம் அனுபவித்தாயோ! 'தஞ்சம்' என்று என் முன்னிலையில் நீ அலறியபோது உன்னைத் துரத்தினேனே! ஹா !......துஷ்யந்தை! என் உயிரே! உன்னைக் காண்பேனு ?

அங்கம் 7

இடம் — ஒரு சிறு கிராமம்

காலம் — மாலை

பாத்திரங்கள் — சகுந்தலன்; துஷ்யந்தை, ரபதன்.

[துஷ்யந்தையைத் தேடிக்கொண்டு தேச யாத்திரை செய்துவந்த சகுந்தலன், கடைசியில் ஒரு ஊருக்கு வருகிருன் ஊரின் கோடியில் பெரிய கூட்டத்தின் மத்தியில் சிறு பாலன் ஒருவன் புளியுடன் விளையாடிக்கொண்டிருக்கிருன்—அதாவது அந்த ஊரில் கொஞ்ச நாட்களாகக் கிடைக்காதிருந்த புளியை எங்கிருந்தோ ஏராளமாகக் கொண்டுவந்து உருண்டை உருண்டையாக உருட்டி எல்லாருக்கும் வழங்குகிருன் பாலகனின் வசீகரத் தோற்றத்தில் மனதைப் பறிகொடுத்த துஷ்யந்தன் அருகில் சென்று அவனுடன் பேசிக்கொடுக்கிருன்]

சகு:—புளியுடன் விளையாடும் குழந்தாய்! நீ யார் அப்பா! உன் தாய் தந்தை யார் ?

சிறுவன் :—என் பெயர் ரபதன் ! என் தாயார் துஷ்யந்தை ! அப்புறம் தந்தை......அப்படியென்ருல்......?

சகு:—ஆ ! துஷ்யந்தையா ? ஆ! என் மகனே! எங்கேடா இருக்கிருள் உன் தாய் ?

ரபதன்:—அதோ.........

[ரபதனைத் தூக்கிக்கொண்டு வரும் சகுந்தலனைப் பார்த்துவிட்ட துஷ்யந்தை......]

துஷ்:—ஆ ! நாதா ! நாதா ! ஆ! இப்பொழுதாவது என்னை அடையாளம் புரிந்ததா? நாதா! நாதா!

[அவன் கால்களில் விழுகிருள். விழுந்த அவளைத் தூக்கி நிறுத்துகிருன் சகுந்தலன்]

சகு:—என் கண்ணே! துஷ¬! இப்பொழுது கணக்கு சரியாய்ப் போய்விட்டது முதன் முதலில் நான் உன்னைச் சந்தித்தபோது நான் உன் கால்களில் விழுந்தேனு? இப்பொழுது நீ என் கால்களில் விழுந்துவிட்டாய் ரொம்ப சரி.

ரபதன்:—ஒண்ணுலே ஒண்ணு போனு ஸைபர் !



மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இரண்டாவது வீட்டுக்குடைய கிரகம் லக்னத்திலிருப்பதால் இந்த மாதம் சென்றதைக்காட்டிலும் மேஷ ராசிக்காரர்களுக்குச் சற்று அனுகூலகரமாயிருக்கும். பண விஷயங்களில் முன்னையும் விடக் கொஞ்சம் வசதிகள் அதிகரிக்கும் சூரியன், புதன் இருப்பதும், 5-ல் சனி இருப்பதும் உத்தியோகம், குழந்தைகளைப் பற்றிய விஷயங்கள், குடும்ப விவகாரம் முதலியவற்றில் மன நிம்மதியிராது எந்தத் துறையிலும் வெற்றி பெறுவதற்கு முன்னதாக ரொம்பக் கிலேசப்படும்படியாயிருக்கும். லக்னாதிபதி 12-ல் இருப்பதும், இந்த இடத்துக்குரிய கிரகமான குரு நீசமடைந்து 10-வது இடத்தில் இருப்பதும் கட்டுக்கடங்காத செலவைக் குறிப்பதாகும். எடுத்த முயற்சிகளில் கிடைக்கக்கூடிய வெற்றி தாமதப்படும். குடும்பத்திலேயுள்ள முதியவர்களை மரியாதையாக நடத்த வேண்டும் இல்லையானால் அவர்களுடைய அதிருப்திக்கும், கோபத்துக்கும் பாத்திரமாக நேரும். உத்தியோகத்தில் வேலை மிக்க பளுவடையும். வயதில் பெரியவராகவுள்ள ஒருவருக்கோ அல்லது தகப்பனாருக்கோ தேக நிலை சரியில்லாமற்போய் சிறிது காலம்வரைக் கவலைப்படும்படியிருக்கும். உத்தியோகம், பண விஷயம இரண்டுக்கும் இம்மாத இரண்டாம்பகுதி தரம். சிலருக்கு உத்தியோகத்தில் ஏமாற்றங்கள் ஏற்படுமென்பதற்கான அறிகுறி காண்கிறது. சொந்த ஆரோக்கியம் ரொம்ப மோசமென்றோ தரமென்றோ சொல்லமுடியாமல் நடுத்தரமாயிருந்துவரும் இந்த கட்டத்தில் மாணவர்களாயிருப்பவர்களுக்கு நிலைமை சந்தோஷகரமாயிருக்கும். சுக்கிரன் லக்னத்திலிருப்பதால் இம்மாதத்தில் விவாகங்கள் நிகழலாம் பணக்காரர்களாயிருப்பவர்கள் இம்மாதத்தில் கடன்கள் கொடுப்பது உசிதமன்று ஏழைகளாயின் அவர்கள் கடன்கள் வாங்குவது சரியல்ல. ஹேஷ்யக்காரர்கள் அல்லது வியாபாரிகளுக்கு நடப்பு திருப்திகரமாயிருக்கும் இவர்கள் இரண்டாம் பகுதியில் பயன் அடைவார்கள் இம்மாதத்தில் வியாபாரம் நன்கு நடைபெறும். இரண்டாம் பகுதியில் தான் புதிய வியாபார முயற்சிகளைச் செய்யலாம். இன்னும் சிறிதுகாலம் வரை குடும்ப சுகம் திருப்திகரமாயிராது. எதிர்பாராத வியாபார பேரத்தின் மூலம் நல்ல வருமானம் கிட்ட இடமுண்டு. இம்மாதக் கடைசி நாட்களில் செய்யும் விவாக சம்பந்தமான முயற்சிகள் ஏமாற்றத்தில்தான் முடியும்

ஏப்ரல் 16, 17, 19, 26, 29, 30, மே 3, 7, 8, 9, 13 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமான தினங்கள்.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் சென்ற மாதத்தைவிடச் சிறந்ததென்று சொல்லமுடியாது. நம்பிக்கைகளெல்லாம் சொல்லளவில் நிற்குமேயன்றி பூர்த்தி பெருது குடும்பத்திலேயோவென்ருல் அதிகக் கவலைகள் தான் சிலருக்கு இருக்கும் இடம்கூட மாறும்படி ஏற்படலாம் மே மாதம் 18-ந்தேதிவரையில் பண விஷயத்துக்கு விசேஷமாயில்லை ஏப்ரல் மாதம் 28 ந்தேதிவரையில் செலவு படு கடுமையாயிருக்கும் அஜாக்கிரதை காரணமாகப் பண விவகாரங்களில் ஏதாவது கோளாறுகள் ஏற்படும். கிட்டத்திலிருப்பவர்களால் ஏமாந்து போகும்படியும் நேரும் உறவினர்களாலும் பண சம்பந்தமாகக் கவலைகள் மூளும் தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது. முதல் பகுதியில் குழந்தைகளில் ஒருவருடைய சுகவீனத்தால் கவலை ஏற்படும் இம்மாதத்தில் நண்பர்களை நம்பிப் பயனில்லை இரண்டாம் பகுதியில் கலியாணம்போன்ற சுப காரியங்கள் நிகழும் உத்தியோகத்தில் அபிவிருத்தி எதுவும் தென்படக் காணோம். பார்க்கபோனுல் இத்துறையில் ஏமாற்றத்துக்குத்தான் இடமிருப்பதாகக் காண்கிறது உறவினர்களில் ஒருவரோ அல்லது நண்பரோ பணம் அல்லது உத்தியோகம் காரணமான விவகாரங்களினுல் கஷ்டப்பட நேரும். இம்மாதத்தில் தூர இடத்துப பிரயாணம போக நேரலாம். வியாபாரிகளுக்கும் இம்மாதம் நல்லதாயில்லை. இவர்களுடைய வியாபார நடவடிக்கைகள் சில தடங்கல்களுக்கு உட்படும். உள்ளூர் வியாபாரத்தைவிட வெளி வியாபாரம் சாத்தியகரமாயிருக்கும். புதிதாகக் கூட்டாளியாகச் சேர முடியாமற் போவதோடு, ஏற்கனவேயுள்ள கூட்டாளித்வ முறையிலும் திருப்திகரமான நிலைமையைக் காணமுடியாது இரும்பு வியாபாரிகளாயின் அவர்களுக்கு ஓரளவு நலல காலமிது. யந்திரங்களுக்கு நல்ல கிராக்கி இருக்கும் பணக்காரர்கள் வீடுகள் கட்டுவதில் தீவிரமாக முனைந்து நிற்பர்

ஆனால் இந்த வேலை தாமதமாக நடந்துவரும். நெருங்கிய உறவினர் ஒருவர் இம்மாதத்தில் முக்கியஸ்தராவார். செல்வாக்கு நிறைந்த பழைய உறவினர் ஒருவரது நல்லெண்ணம் ஒத்துழைப்பு இவற்றால் அனுகூலமேற்பட இடமிருக்கிறது

ஏப்ரல் 17. 18. 19. 22. 26. 27. 29. 30, மே 3, 5, 8, 9, 13 தேதிகள் இவர்களுக்குப் பயன் தரத்தக்கவை.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

சாதாரணமான நிலையிலுள்ள மிதுன ராசிக்காரர்களுக்கு இம்மாதம் நல்லதாயிருக்கும். மொத்தத்தில் இது தங்களுக்கு லாபகரமானதென்பதை அவர்கள் உணர்வர். ஆரம்பத்தைக் காட்டிலும் இது சந்தோஷகரமானதாயும், நலன் தரத்தக்கதாயும் இருப்பதைப் போகப்போக உணர்ந்துகொள்ளலாம் 11-வது இடத்திலுள்ள கிரகங்கள், இவ்வீட்டுக்குடைய செவ்வாய் 10-வது இடத்தில் இருப்பது இவை காரணமாகத் திடீரென்று திரவியம் கிட்ட இடமேற்படும். எனவே செல்வ விஷயத்தில் இம்மாதம் அதிருஷ்டகரமானதாகும் குடும்ப சுகத்துக்கும் கட்டுக்கடங்காமல் போகும் செலவுகளுக்குப் இம்மாத இரண்டாம் பகுதி ஏற்றதன்று. சகோதரர்களுக்கிடையே சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பரஸ்பரம் சகாயம் செய்துகொள்ள நேரும் உறவினர்களில் ஒருவர் உத்தியோகத்தில் உயர்வடைவது நிச்சயம் புதிய சிநேகிதர்கள் ஏற்பட்டு, அவர்களுடைய செல்வாக்கின் பயனை நன்கு உணரும் நிலை உண்டாகும். குழந்தையொன்றின் தேக நிலை காரணமாக மன நிம்மதி இராது. நண்பர்களில் ஒருவரால் செலவு அதிகமாகும்; அல்லது சச்சரவாவது ஏற்படும் சாதாரணமாயிருப்பவர்கள் கடன் வாங்க நேரும். பணக்காரரானால், நண்பர் ஒருவர் மூலம் திடீரென்று லாபத்தை அடையலாம் இரண்டாம் பகுதியில் ஒரு பிரயாணம் வாய்க்கலாம் இருக்கும் இடத்தை மாற்றுவதைப் பற்றி ஏதாவது ஒரு கவலை தீவிரமாயிருந்துவரும் தனவந்தர்கள் கட்டிடங்களில் பணத்தை முதலீடு செய்வது லாபகரமாயிருக்கும் கொஞ்ச காலத்துக்கு மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் செவ்வையாயிராது உத்தியோகத்தில் விரும்பத்தக்கதொரு மாறுதலோ அல்லது ஊதிய உயர்வோ ஏற்படும். வேலை அதிகரிப்பதோடு பொறுப்பும் பெருகும் ஏப்ரல் 27-ந் தேதி அதிருஷ்டகரமாயிருக்கும் வேறு எஜமானர் ஏற்படுவதற்கும் இடமுண்டு வியாபாரிகளுக்கு ஏற்ற காலம் வியாபார நடப்பும் திருப்திகரம் கூட்டு வியாபாரம் செழிப்புற நடக்கும் இதன் அமைப்பு விதிமுறையை மாற்றுவது சம்பந்தமாயுள்ள யோசனையை ஒத்திவைத்துக்கொள்ள நேரும். மாணவர்கள் பரீட்சைகளில் தேர்ச்சியடைவர். ஊழியர்களுக்கு முதலாளிகளின் பாராட்டிராது.

ஏப்ரல் 16. 17. 19. 27. 29. மே-3. 6, 8, 9. 12 தேதிகள் இவர்களுக்கு வசதி தரும் தினங்கள்.

கடக ராசி

(புனர்வஸு கடைசீ பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

சென்ற மாதத்திலிருந்ததைக் காட்டிலும், கிரகங்களின் போக்கு இம்மாதம் கடக ராசிக்காரர்களுக்கு அதிக வசதியைத் தருவதாகவே அமைந்துளது பண விஷயங்களில் அபிவிருத்தி உண்டு. சூரியன்-சுக்கிரனின் சம்பந்தம் சிறந்த யோகம். இது எதிர்பாராத தன பிராப்தியை உண்டுபண்ணலாம் உத்தியோகத்தில் எதிர்காலம் குறித்து நம்பிக்கைகளுக்கு இடமேற்படும். ஊதிய உயர்வோ, அல்லது உத்தியோகத்தில் அந்தஸ்து உயர்வோ உண்டாகும்; அல்லது செய்யும் வேலையிலாவது மாறுதலிருக்கும். செலவு கடுமை. 4-வது வீட்டைப் பாப கிரகங்கள் பார்ப்பதால் குடும்பவாழ்வு உவகையைத்தராது செவ்வாய். குரு இவர்கள் காரணமாக குழந்தைகளைப் பொறுத்தவரை அனைத்தும் சரிவர நடக்காது குழந்தைகளில் ஒருவரால் அதிகக் கவலை உண்டாகும் ஊழியம் செய்யும் இலாகாவின் ஆதரவு கிட்டும் கண் பார்வை சரியல்லாமல் இருப்பவர்களானால் அவர்களுக்கு சனி இரண்டில் இருப்பதும் சுக்கிரன், சூரியன் இருவரும் 10-ல் இருப்பதும் நன்மையைத் தருவதாயில்லை போதிய பணமில்லையானாலும் செய்யும் சேவைக்கு மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும் முதியவர்கள் அல்லது அதிகாரிகள் ஆதரவைப் பெறலாம். குடும்ப வட்டாரத்தில் விவாகங்கள் நிகழும். ரத்தக் கெடுதியாலோ அல்லது வாயு உபத்திரவத்தாலோ மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் சரியில்லாமற்போய் கவலை உண்டாகும். ஏழ்மையிலுள்ள உறவினர்களுக்காகப பணம் செலவிட நேரிடும் வியாபாரிகள் இம்மாதம் அதிருஷ்டசாலிகளாயிருப்பர் இவர்களுடைய பழைய புதிய வியாபாரங்கள் திருப்திகரமான வருமானத்தைக் கொடுக்கும். உள்ளூர் வியாபாரம் சிறப்புற்று அதிருஷ்டத்தைத் தரும் வெளிநாட்டு வியாபாரம் திருப்திகரமாயிருக்குமென்று சொல்வதற்கில்லை. தங்க வியாபாரிகள் விற்பனையில் இறங்குவது உசிதம். இல்லையானால் நஷ்டமேற்படக்கூடும்

ஏப்ரல் 17. 19. 21, 27. 29. மே 3. 7. 8. 9 தேதிகள் இந்த ராசிக்காரர்களுக்கு உயர்வான நாட்கள்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

ஏப்ரல் மாதக் கடைசீ வாரம் வரையில் 8-வது வீட்டிலுள்ள செவ்வாய் காரணமாக பண வசதிகள் பாதிக்கப்படுவதுடன் மனைவியின் ஆரோக்கிய வாழ்க்கையும் நேர்மையோடிராது இதற்குப் பிறகுதான் ஸிம்ம ராசிக்காரர்களுக்கு அனுகூலமான கிரக நிலைமை பிறக்கிறது இதனால் வாழ்க்கை மனோகரமாகவும், வெற்றி தருவதாகவும் விளங்கும் உழைப்புக்குத்தக்க வருமானமில்லாமல் வேலைப் பளு அதிகமாயிருக்கும் குரு 6-ல் இருப்பதே

1949-ம்ஹு ஏப்ரல்மீ 14உ முதல் 1949-ம்ஹு மேமீ 14உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதற்குக்காரணம். குழந்தைகளைப்பற்றிய பிரச்னைகளைச் சமாளிக்கும்படியாயிருக்கும். இது இன்னும் கொஞ்சகாலம் வரையில்தான். சிலருக்கு தூரத்திலுள்ள இடத்துக்குப்பிரயாணம் செய்ய நேரிடும். ஸிம்ம ராசி உள்ள டாக்டர்களுக்கு சிரேஷ்டமான மாதமிது. இவர்களுக்கு எதிர்பாராத வருமானம் கிடைக்கும் உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவுண்டு. வேலையில்மாறுதல் ஏற்படுமென்பதற்கான அறிகுறி காண்கிறது இது புதியவேலையிலிருந்துபழைய வேலைக்குப் போகும்படியானதாகவுமிருக்கலாம். 12-வது இடத்தைக் குரு, செவ்வாய் இருவரும் பார்ப்பதால செலவு கட்டுமீறிப் போகும். இந்தப் பார்வை காரணமாகவே அனுவசியமான அவதூறுகளுக்குப் ஆளாகநேரும் குழந்தையொன்றிற்காக அதிகமாகச் செலவுகள் செய்யும்படி ஏற்படும். இதனால் அபாயம் ஏதும் ஏற்படுமென்பதற்கில்லை. எழுத்தாளர்கள், பிரசுரகர்த்தர்கள் கதாசிரியர்கள் இவர்களுக்கு இம்மாதம் வெற்றிகரமாகும் இம்மாத முடிவுக்குப் பின்னர் பண விவகாரங்களில் சுபிட்ச நிலை ஏற்படுவதற்கு இடமிருக்கிறது உத்தியோகத் துறையில் ஆதரவிருக்கும். இம்மாதக் கடைசீ வாரத்தில் வாழ்க்கையில் கொள்ளும் மனோபாவம் அபிவிருத்திகரமாயிருக்கும். வியாபாரிகள் அதிருஷ்டகரமாக வியாபாரத்தை நடத்தி வருவார்கள். இம்மாதக் கடைசீ வாரத்திலிருந்து இதை இன்னும் திறம்படச் செய்ய வசதி ஏற்படும். வெளிநாட்டு வியாபாரம் அதிக வருவாயைத் தரும். கூட்டு முறை ஆட்டம் கொடுக்கும். பழைய கூட்டு பாதகமடையாமல் நடந்து வரும். வர்த்தகத்தையொட்டி நீண்டதோர் சுற்றுப் பிரயாணம் நிகழக்கூடும். இதற்கு ஏப்ரல் 27 28 தேதிகள் அதிருஷ்டகரம்.

ஏப்ரல் 16, 17, 19, 30 ...ள் இவர்களுக்கு விசேஷம்.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம் சித்திரை 2-ம் பாதம் முடிய.)

கன்யா ராசிக்காரர்களுக்கு இம்மாதம் முக்கியமாக விளங்கக்கூடியதாகும். ஆரோக்கிய நிலை, அந்தஸது அல்லது பணம் இவற்றில ஏதாவது ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழும் ஒன்று தனக்கோ அல்லது மனைவிக்கோ தேகநலமற்றுப்போகும். பணம் சம்பந்தப்பட்ட வரையில் எதிர்பாராத செலவினங்களெல்லாம், சமாளிக்க முடியாதபடி வந்து சேரும் மாதக் கடைசி வாரத்தில்தான் திடீரென்று நிவாரணம் கிட்டும். குழந்தைகளில் ஒருவருடைய தேக ஸ்திதி பற்றிக் கவலை ஏற்படும் ஒரு நீண்ட பிரயாணம் வாய்க்கக்கூடும் அல்லது உஷ்ண அதிகரிப்பாலும், வயிற்றுக் கோளாறுலும் வருந்த நேரும், ஆத்மீகத் துறையிலுள்ளவர்களுக்கோ, அல்லது இரகசியப் போலீஸ் போன்ற இலாகாக்களில் சேவை

1949-ம் வருஷம் ஏப்ரல்மீ 14-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலை.

செவ்வாய் சுக்கிரன்	சூரியன் ராகு புதன்		உரானஸ்
	ராசி		
குரு			சனி
		சந்திரன் கேது	நெப்டியூன்

புரிபவர்களுக்கோ இந்த மாதம் சாதகமாயிருக்கும். குடும்ப வாழ்வுக்கு இம்மாத முதற்பகுதி ஏற்றதாயில்லை. சிலருக்கு வீடு மாற்றும்படி ஏற்படலாம் பண சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் சுலபமாக நடந்து வரும். உத்தியோகத்தில் மாறுதலுக்கான ஒரு முயற்சி உருப்பெற்றுவரும். சேவை செய்யும் காரியாலயத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது சில இனங்களில் காரியாலயத்தில் செய்யும் வேலையில் திறமையில்லை யென்ற அவச் சொல்லுக்கு ஆளாக நேரும். உறவினர்களில் ஒருவருடைய தேக நிலைமைக்காகப் பெரிதும் கவலைப்படும்படி இருக்கும். தூர இடத்திலுள்ள உறவினர் ஒருவரைப் பற்றி வரும் செய்தி மகிழ்ச்சிகரமாயிராது 8-வது வீட்டிலுள்ள கிரகங்கள் ஒரு தினுசாகவிருந்தபோதிலும் வியாபாரிகள் நற்பயனை அடைவர். நல்ல லாபம் தரத்தக்கபடி வியாபாரம் நடக்கும் வியாபாரஸ்தலம மாறுதலுக்குட்படலாம் தொலைவிலுள்ள வியாபாரம் லாபகரமாக நடக்கும் அனுகூலம் பயக்கத்தக்க வகையில் புதிய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம் வியாபாரத்தையொட்டிய பிரயாணமொன்றைப் பயன்தரத்தக்க வகையில் ஏறகலாம்.

ஏப்ரல் 27 28, மே 6 இந்தத் தேதிகள் நல்லவையன்று ஏபரல் 17, 19, 20 30 மே 2, 3, 8, 9, 12, 13 தேதிகள் இவர்களுக்கு மேலானவை.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதீ, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் துலாராசிக்காரர்களது வாழ்க்கையில் சௌகர்யமான நிலைமை இருந்துவரும். பண விவகாரங்களுக்கு வசதிகரமாயிருக்கும் விவாகம் போன்ற சுப காரியங்கள் நிகழும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வுண்டு குடும்ப சுகம் மாத்திரம் எதிர்பார்க்குமளவிலிராது செய்யும வேலையில் ஒரு மாறுதல் ஏற்படலாம் இம்மாதத்தில் ஒரு பிரயாணம் நேரக்கூடும். சுபகாரிய நிமித்தம் கடுமையான செலவேற்படும் சாதாரணமாக இம்மாதம் அனுகூலமாகவும் திருப்திதருவதாயும் விளங்கும். தொழிலில் முன்னேறுவது சுலபம் நண்பர்கள் உதவி கிட்டும் நண்பர்களில் சிலருக்கு நல்ல காலபலமிருந்து வரும். கல்யாணமானவர்களானுல் தங்கள் விவகாரங்களைப பரஸ்பரம் மனைவி, அல்லது புருஷனிடம் ஒப்படைப்பது நலம். நினைத்து வந்த அபிலாஷை கைகூடும் வியாபாரிகளுக்கு, வியாபாரம் பணம் இத் துறைகளில் எதிர்பாராத சம்பவங்கள் நிகழும் கிரகங்கள் உதவிகரமாயிருக்கும். ஹேஷ்யபூர்வமான முதலீடுகளில் நல்ல லாபமுண்டு. தைர்யத்தோடு புதிய வியாபாரங்களில் இறங்கலாம். கூட்டு வியாபாரம் அனுகூலம் தருவதாயிருக்கும். கிட்டிய பந்து ஒருவரையே கூட்டாளியாகச சேர்த்துக்

கொள்ளலாம். தேகாரோக்கியமும், திடமும் சற்று திருப்திகரமாக இல்லாமற்போகலாம் கூட்டாளியாக வருபவருடைய விவகாரங்களும், செல்வநிலைமையும் தற்பொழுது திருப்திகரமாயிருந்துவரும். இதேமாதிரி தான் புதிதாக மணந்துகொண்ட மனைவியின் நிலைமை யும் 11. 2. ஆகிய வீட்டுக்குடையவர்களான சூரிய னும் செவ்வாயும் மேஷத்திலிருப்பதால் இம்மாதம் எதிர்பாராத லாபம் வருவதற்கு இடமுண்டு. போட்டிப்பந்தயங்களில் சிரத்தைகொண்டவர்களுக்கு இந்த நிலைமை முக்கியமாக உதவியாயிருக்கும்.

ஏப்ரல் 17. 19, 22. 27. 29, 30, மேமீ 2, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்கு நலம்.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

முக்கிய கிரகங்களான சனியும் குருவும் சரியான இடத்தில் இல்லாததால் குடும்பம் உத்தியோகம் இரண்டு துறைகளிலும் விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மன நிம்மதியிராது. குரு நீசனுயிருப்பதால் மனச்சுணக்கத்துக்கும், பண விஷயத்தைப் பொறுத்து கவலைகளுக்கும் உட்பட நேரும். குழந்தைகளைப் பெற்றவர்களானல் தங்கள் குழந்தைகளது தேகநிலை அல்லது நடத்தைபற்றி கவலைப்படும்படி நேரும். ஏழை நிலையிலுள்ளவர்களுக்கு உறவினரிடமிருந்து உதவி கிட்டும்

இந்த ராசியுள்ள மாணவர்கள் பரீட்சைகளில் எழுதிய தோரணைபற்றி திருப்திகொள்ள முடியாமற்போகும். மே மாதம் முதல் வாரத்திலோ அல்லது அதற்கும் முன்னதாகவோ கைமாற்று வாங்க நேரக்கூடும் 6-வது இடத்தில் பல கிரகங்கள் சேர்வதால் தேக நிலைமை கூட அதிகச் சூடுகாரணமாகப் பாதிக்கபபடலாம் சில இனங்களில் ஊழியர்களாலோ வேலைக்காரர்களாலோ உபாதைகள் ஏற்படலாம இவர்களிடம அனுதாபம்காட்டும்படியிருக்கும். இமமாதக் கடைசிவாரம் குறிப்பாக நன்ருகவிருக்கும். சகோதரரோ அல்லதுஅவரைப்போன்ற நிலையிலுள்ள உறவினரோ முன்னுக்கு வரலாம் இம் மாத இரணடாம் பகுதி துவங்கும்வரையில் மனைவியின் பொது ஆரோக்கியம் திருபதிகரமாயிராது உத்தியோகத் துறையில் வேலை ரொம்ப அதிகமாயிருக்கும் குருவின் நீசநிலை காரணமாக எஜமானரின் ஆதரவு தாமதப்படும் சிலருக்கு ஒரு பிரயாணம் நேருமென்று சொல்லலாம். காரியாலயத்தில் சிப்பந்திகளுடன் சச்சரவேற்படக்கூடும். வியாபாரிகளுக்கு இந்த சமயம் சரியாயிராது. இவர்கள் இரண்டாம் பகுதிவரை காததிருக்கவேண்டும் இதற்குப் பிறகுதான் வியாபார நடப்பு நல்ல முறையிலிருக்கும் ஹேஷ்ய பூர்வமான வியாபார இனங்களையெல்லாம் அடியோடு விலக்க வேண்டும் மே 2-ந்தேதிக்குப் பிறகு கூட்டு முறை ஓரளவு சரியாயிருக்கும்.

ஏப்ரல் 17. 19. 21. 27. 30, மே 3, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்கு உதவிகரமான நாட்கள்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

பலன்களைப் பொறுத்தவரையில் இந்த மாதம் தனுர் ராசிக்காரர்களுக்கு ஒரே சீராயிருக்குமென்று சொல்வதற்கில்லை. அதிக லாபமோ, நஷ்டமோ ஏற்படாது. பண விஷயத்தில் அதிகரித்த வசதிகள் இருந்துவரும். குடும்ப விவகாரங்கள், பண விஷயம் இவற்றிலேயே அதிக சிரத்தை ஏற்படும். சிறிது காலம் வரையில் நீடிக்கும் புதிய வருமான மார்க்கம் புலபபடும். குழந்தைகள். ஆபீஸ் பண விவகாரம் ஆகியவை குறித்து விசேஷமாக மனக்கவலையிருக்குமென்பது இம்மாததிய பிரத்யேகாம்சம். அல்லது கிட்டிய பந்துவுடன் உள்ள மனஸ்தாபம் இதற்குக் காரணமாகலாம். ஆபீஸில் வேலை அதிகமாயிருக்கும். எதிர்பார்த்தபடி மேலதிகாரியின் ஆதரவிருக்காது. இம்மாதக் கடைசீ வாரத்தில் உறவினரில் ஒருவரோ அல்லது நண்பரில் ஒருவரோ தீவிரமாக எதிரிடையாயிருபபர். சொந்தமாகச் சிரத்தை கொள்ளும்படியான சுப காரியமேதேனும் நிகழும். குழந்தைகளில் ஒருவரால் மன நிம்மதி ஏற்படும். தசா புக்தி அனுகுணமாகயிருக்கும் படசத்தில் இந்த மாதம் மனைவி கர்ப்பந்தரிக்கலாம். இதனுலும் கவலை ஏற்படலாம். இப்போது உள்ள இடம் சொந்த ஊராக இல்லாமலிருந்தால், சொந்த ஊருக்குப் போகும்படியான சந்தர்ப்பமும் ஏற்படும். வியாபாரிகள் ஹேஷ்ய இனங்களில் அளவுக்கு அதிகமாக ஈடுபட நேருமாதலால் வியாபாரத்தில் அதிகப்படியான பொறுப்புகளைச் சமாளித்து ஈடுகொடுக்க நேரும். கடைசீ வாரத்தில் கடன் படும்படியாகும். ஆனல் முதலெடுப்பில் சற்று லாபமும் இருக்கும். புதிய வாடிக்கைக்காரர்கள், நண்பர்கள் ஆதரவுண்டு. மே 9—10 தேதிகளில் உரானஸின் வீடசண்யத்தால் புதிய ஊககமும், சந்தர்ப்ப வசதிகளும் ஏற்படும். உத்தியோகம் வியாபாரம் இரண்டுக்கும் இது முக்கியமான சமயம்.

ஏப்ரல் 17. 19. 21. 27. 30, மே-2. 3, 8, 9, 12, தேதிகள் இவர்களுக்குத் திவ்யமான தினங்கள்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

சென்ற மாதத்தைவிட இது மகரராசிக்காரர்களுக்குச் சற்று விறுவிறுப்பானதுதான். குடும்ப விஷயம், சொத்து வீடு இவைபற்றிய அலுவல்களிலேயே சிரத்தை கொள்ளும்படியிருக்கும் பணக்காரர்களாயிருந்தால் அவர்கள் வீடு. நிலம் முதலிய இனங்களில் பணத்தை முதலீடு செய்ய நேரும் குறிப்பாக இம்மாதம் சகோதரர் அல்லது சகோதரி விஷயத்தில் அதிகசிரத்தை கொள்ளும்படி யிருக்கும். சிக்கனத்தை அனுஷ்டிக்கும் சித்தமிருப்பினும் செலவு அளவுமீறி உச்சத்தை அடையும். கொஞ்ச காலத்துக்கு தானே அல்லது மனைவியோ ஆரோக்கிய நிலையில் இல்லாமல் போகக்கூடும் தொலைவிலுள்ள உறவினர் வீட்டுக்குப் பிரயாணம் போகக்கூடும். இம்மாதக் கடைசிவாரத்தில் குமாரர்களைப்பற்றிய நல்ல சேதியைக் கேள்விப்படலாம். நெடுநாளைய வயிற்றுக் கோளாறுகளுடையவராயின் இந்த கட்டத்தில்

அதிகமாக அவதிப்பட நேரும். எதிர்பாராது பணம் சம்பாதிக்கும் சந்தர்ப்பம் வாய்க்கலாம். நல்ல லாபம் வராததற்காக வியாபாரிகள் கஷ்டப்படும்படியிராது. இரண்டாம் பகுதி இவர்களுக்கு நல்லது. உறவினர்கள் காரணமாக வியாபாரம் செழிப்புறும். ஊழியர்களுக்கு உத்தியோக அல்லது ஊதிய உயர்வேற்படும். வியாபாரப் பெருக்கத்துக்காக ஒரு பிரயாணத்தை மேற்கொள்ள நேரும். கொஞ்ச காலத்துக்குக் கூட்டு வியாபார முறை சரிவரயிராது. எனவே தனித்துச் செய்யும் வியாபாரம் அதிக வருவாயைத் தருவதாயிருக்கும். கூட்டு வியாபாரத்திலிருந்தால் பாகஸ்தரின் வியாபாரப் போக்கை கூர்ந்து கண்காணித்து வர வேண்டும் ஏனெனில் இத்தகைய வியாபார நிலை சுலபமாயிராது. பாகஸ்தரின் பிரச்னைகள் சொந்த நிலையையும் பாதிக்கக்கூடுமென்பதே காரணம். மரணச் செய்தியொன்று வருவதற்கு இடமிருப்பதாகக் காண்கிறது.

ஏப்ரல் 17, 19, 20, 27, 30, மே 3, 5, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

மூன்ருவது இடத்திலுள்ள கிரகங்களின் காரணமாகக் கும்ப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பல அலுவல்கள் ஏற்பட்டு தீவிரமாக நடந்துகொள்ளும்படி நேரும். இம்மாதத்தில் படிக்கும் வேலையும், எழுதும் வேலையும் ரொம்ப அதிகமாயிருக்கும் உறவினர் ஒருவருடைய விவாக முயற்சி குறித்து சிரத்தைகொள்ள நேரும் அல்லது சொந்தமாகக் குடும்பத்திலேயே ஒருவரின் விவாக முயற்சிகளில் ஈடுபடும்படியாகும் எதிர்கால சுபிட்சத்தை நாடி திட்டங்களையும் ஏற்பாடுகளையும் செய்வதில் மனம் முனைந்து நிற்கும். குரு 12-ல் இருப்பதால் செலவு அபரிமிதமாக ஏற்படும். சகபாடியின் எதிர்ப்புக்கும், வெறுப்புக்கும் இலக்காக நேரும். இதனுல் கொஞ்சகாலம் மனக்குழப்பமேற்பட்டுத் திகைக்கவேண்டி வரும். குடும்ப வாழ்வோ நிம்மதியாகவிராது. பணக்காரர்களுக்கு நஷ்டமில்லை ஏழைகளுக்கு உரிய காலத்தில் உதவி கிட்டும் இம்மாதக் கடைசிவாரத்தில் குடும்பத்தில் மாறுதலேற்படக்கூடும். அல்லது ஊதிய உயர்வுண்டு. உத்தியோகத்தில் ஒரு மாற்றமிருக்கலாம். மேலதிகாரியின் ஆதரவு கடைசி வாரத்தில் கிடைக்கும்.

வெளியாருக்குச் செய்யும் உதவி உரிய காலத்திலமையாது இக்கட்டத்தில் குடும்ப விவகார விவாதங்களில் சிக்கிக்கொள்ளவே கூடாது. இல்லையானுல் அதிருப்திக்குத்தான் ஆளாக நேரும் கல்யாணமாகாதவர்களுக்கு இம்மாதம் அந்த சுபகாரியம் நிகழச் சாதகம். அல்லது சிருங்கார ரஸ பூர்வமான புதியதொரு தொடர்பேற்படலாம். காதலர்களுக்கிடையே அமைதியின்மையை உண்டுபண்ணக்கூடிய மாதமிது. வியாபாரிகளுக்கு நிலைமை சுமாராயிருக்கும். இவர்களது வியாபாரம் நன்கு அபிவிருத்தி பெறும். லாபகரமான முறையில் புதிய பாகஸ்தர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஏப்ரல் 17, 19, 26, 30, மே-2, 3, 7, 9, 13 தேதிகள் இவர்களுக்கு உன்னதமானவை.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

தசா, புக்திகளில் கெடுதலாக இல்லாமலிருக்கும் பட்சத்தில், மீனராசிக்காரர்களுக்கு இம்மாதம் கோசார ரீதியிலுள்ள கிரகங்கள் மிகவும் உதவியான நிலையிலேயே அமைந்துள்ளன 11-வது இடத்திலுள்ள குரு தன்னுடைய ஏகாதச ஸ்தான பலனைக் கொடுப்பதற்கு இன்னும் இரண்டு மாதங்களாகும். 6-ல் சனியிருப்பது முதலில் விரோதத்தை வளர்த்துப் பிறகு அதை மடியச் செய்யும். சில இனங்களில் சனியின் காரணமாக ஜூன் 15-ந்தேதி வரை பணமுடை இருக்கும். இதனுல் கடன் படவும் கூடும். உத்தியோகத்துக்குப் பொறுப்பான குரு நீசன் எனவே மனோ தைர்யமிருக்காது. பின்னர் ஏகாதசப் பிரகஸ்பதியின் அனுகூல வீட்சண்யம் ஏற்படும் பணக்கஷ்டமுள்ளவர்கள் இச்சமயத்தில் கடன் வாங்க நேரும் கடன் அளவு உச்சத்தை அடையும் பணக்காரர்களானுல் இந்த கட்டம் செலவுமிகுந்ததாக விளங்கும்: பணம் கடன் கொடுப்பது உசிதமன்று. கொடுத்த கடன் பாக்கிகளை வசூலிக்கும் வேலை நடக்கும். மறைமுகமான ஹிம்ஸைகள் இருந்த போதிலும் உத்தியோகத்தில் நிலைமை அபிவிருத்தியடையும். மேலதிகாரியின் ஆதரவிருக்கும். ரொம்ப நெருங்கியவர்கள் விருந்தாளிகளாக வருவர் சகோதரரில் ஒருவரோ அல்லது சகோதரியோ பூர்ண திருப்தியைத் தருவர் இம்மாதக்கடைசியில் ஒரு பிரயாணம் சம்பவிக்கலாம் தொலைவிலுள்ள உறவினரைப்பற்றி நல்ல செய்தி வரும். இரண்டாமபகுதி முதல் பண விஷயத்தில் அபிவிருத்தி தென்படும். வியாபாரிகளுக்கு லாபமுண்டு. மாணவர்களுக்கு சந்தோஷகரமான சந்தர்ப்பம். விவாகங்கள் நடக்குமென்றும் எதிர்பார்க்கலாம்.

ஏப்ரல் 16, 19, 26, 30, மே-3, 7, 8, 9, 12, 13 தேதிகள் இவர்களுக்குச் சிறந்தவை.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
8, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

குடும்ப வைத்தியம்

...குச்சாமாமா...

மூன்று வயதிற்கதிகமான குழந்தைகளுக்கேற்படும் வயிற்றுப்போக்கு, மந்தம், முதலியவற்றிற்கு—கற்பூர வள்ளி, ஓமவள்ளி இவற்றின் ரஸத்துடன், காரத்தையும் நெடியையும் குறைக்கத்தக்கவளவு தேனைக் கலந்து கொடுக்கலாம்.

வில்வத்தின் வேர், துளஸியின் புஷ்பம். புங்கன் கொட்டை கோரைக்கிழங்கு ஓமம் அல்லது ஜீரகம், இவற்றின் கஷாயத்தை வேளைக்கு ஒரு பாலடை வீதமாக தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்கலாம்.

இதே வயதுள்ள குழந்தைகள், சவலை போன காரணத்தாலோ, ஆகாரத்தின் கோளாருலோ, வயிற்றுப்புசத்தோடும், குழந்தையை எடுத்தால் வயிறு மட்டும் தனியே வைத்துக் கட்டியது போலுள்ள கனத்தோடுமிருந்து, கண்டதெல்லாம தின்னவேண்டுமென்ற ஆசையுள்ளதாயும், கிடைத்தது போதாதென்று மேலும மேலும் பக்ஷணத்திற்காக அழுது பிடிவாதம பிடித்து வாங்கித் தின்னும்குணகமேடுள்ளதாயும் ஆயினும் தின்றதை ஜீர்ணித்துக்கொள்ள சக்தியற்றதாய் தினமும் 3—4 வேளை கொதகொதவென்று நுறையோடுகூடிய தாய். அதிகமான அளவில் மலமுள்ள வயிற்றுப்போக்கோடு கூடியதாயும், மெலிந்த தேகமும், சூர்பிய தோள்களும் உலர்ந்த மார்பும் உள்ளவராய் இருந்தால், இக்குழந்தைகளுக்கு முஸ்தாதக்ரம் என்ற மருந்தைக் கொடுக்கலாம். அதாவது:—புதிதாகக் கொண்டுவரப்பட்ட பச்சைக் கோரைக்கிழங்கை—தண்ணீரில் ஊறவைத்து நிலத்தில் கேய்த்து மேல்தோலைப போக்கி வெளுப்பாக்கிக் கழுவி-இலேசாக நசுக்கி, ஜலத்திலிட்டுக் காய்ச்சி வடிகட்டி கஷாயம் எடுத்துக் கொள்ளவும். வீட்டிலேயே தயாராக்கிய பசுவின் தயிரில் இக்கஷாயத்தைப் போதுமான அளவில் கூட்டி தயிரைக் கடைந்து மோருண்டாக்கி வெண்ணெயை நீககி—மோரை ஆகாரமாகவும் மருநதாகவும் உபயோகிக்கலாம். இதை நீடித்த நாள் கொடுப்பதாலும் கெடுதல் நேராது.

வயிற்றுக்கடுப்புக்கு

இப்பிராயத்தைச் சேர்ந்த குழநதைகளுக்கு-வயிற்றுக் கடுப்போடு சளிபோன்ற சீதமோ அல்லது இரத்தத்துடன் கலநத மலமோ சீதமும் ரத்தமும் கலந்துமேயோ போகுமானுல். பூரா அல்லது அஸ்கா சர்க்கரையைக் கொஞ்சம் நெய் விட்டுக் குழைத்துக் கொடுப்பது நலம்.

சர்ககரையில் தயாரிக்கப்பட்ட தனி ஜீராவை ஒரு ஸ்பூனளவாக தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம்.

காட்டகத்திப்பூவென்ற கடைச் சரக்கின் கஷாயத்தை ஒரு பாலடையளவில் தினம் 2,3 வேளை கொடுக்கலாம்.

செம்பழமான, வில் பழத்தின் உள் மாமிசத்தைத் தண்ணீரில் கொதிக்க வைத்துக் கசக்கிப் பிழிந்து வடிகட்டி கொஞ்சம் கல்கண்டுங் கூட்டி இளம் பாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு ஸ்பூனளவாக தினம் 3–4 வேளை கொடுக்கலாம்.

கொஞ்சம் பாலையோ, தாய்ப் பாலையோஎடுத்து அத்துடன் ஸமனிடையாக விளக்கெண்ணெயைக் கூட்டி இரண்டையும் ஒன்ருய் கேய்த்துக் குழப்பிய குழம்பில் வேளைக்கு ஒரு காலணு பரமாணமாக தினம் 2-3 வேளை கொடுக்கலாம்.

ஏழு எட்டு வயசுவரையில் வளர்ந்த குழந்தைகளானுல் மேற்சொன்ன மருந்துகளை எல்லாம கொஞ்சம் அளவில் கூட்டி கொடுக்கலாம மற்றும், ஒரு ஸ்பூன் வெந்தயத்தை, கல்குச்சி அசுத்தங்கள் இல்லாதபடி சுத்தமாக்கி இதைக் கொஞ்சம் தயிருடன் உட்கொள்ளக்கொடுக்கலாம். தொட்டால் சிணுங்கி (தொட்டால் வாடி) என்ற செடியின் இலையை அம்மியிலிட்டு வெண்ணெய்போல் அரைத்து எடுத்து அதில் ஒரு சுண்டைக்காயளவு முதல் நெல்லிக்காயளவுவரையில் கொஞ்சம் தயிரில் கலந்துகொடுக்கலாம்.

கொம்பரக்கு என்ற கடைச் சரககை வாங்கிப் பொடிசெய்து,

அதில் இரண்டு—மூன்று ஸ்பூனளவு எடுத்து, ஒரு கோப்பையிலிட்டு, இதில் கொதிக்குந் தண்ணீர் ஒருகோப்பையளவாகக்கூட்டி 'டீ' கஷாய முண்டாக்குவதேபோல் உண்டாக்கி வடிகட்டி எடுத்த கஷாயத்தில் கொஞ்சம் கல்கண்டின் பொடியும் கூட்டி வேளைக்குக் காலவுன்ஸ் வீதம் தினம் 3,4 வேளை உட்கொள்ளலாம். இதேபோல இலவின் பிசின் என்ற கடைச் சரக்கையும் உபயோகிக்கலாம்.

வெப்பாலையரசி என்ற கடைச் சரக்கை வாங்கி கல், மண் முதலியவை இல்லாமல் சுத்தஞ்செய்து இலேசாக வருத்துப்பொடிசெய்து வேளைக்கு ஒருசிடிகையளவு முதல் $\frac{1}{4}$ ரூபாய் நிறைமட்டுமாக தினம் 2 முதல் 4 வேளை தேனில்கலந்தும் கொடுக்கலாம்

சீதபேதியைப் போக்க.

மங்குஸ்தான் பழத்தின் உள் கதப்பைத் தனித்துச் சாப்பிடுவதாலும் இரத்தத்தோடு கூடிய சீதபேதி குணமாகும். புளிப்பு மாதுளைப்பழத்தின் தோலை வெண்ணெய்போல் அம்மியில் அரைத்து எடுத்துக்கொள்ளவும் இதன் மேல்மாவின் உள்பட்டையையோ, அத்தியின் உள் பட்டையையோ, கவசம்போல் சுற்றி மூடி சிறு நூலினால் பொட்டணம்போல் கட்டவும். இதற்கும் மேல் கோதுமை மாவைப் பிசைந்து ஜவ்வுபோலாக்கியதைப் பூசவும். நிழலில் இது இலேசாகக் காய்ந்த பின் காவி மண்ணை அரைத்து இதன்மேல் $\frac{1}{2}$ அங்குல கனம மட்டும் பூசி, நிழலில் கொஞ்சம் உலர்த்தவும். பிறகு இதை தணலின்மேல் வைத்துச் சமைக்கவும். உள்ளே யுள்ள மாதுளைத் தோல் வரையில் சூடேரிய பிறகு -(மேல் கவசங்கள் சூட்டினால் வெடித்து விடும்) தணலினின்றும் வெளியே எடுத்து துரிதமாக கவசங்களை எல்லாம் நீக்கி—மாதுளையின் தோல் கல்கத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பிழிந்து. கிடைக்கும் ரஸத்தை எடுத்துக்கொள்ளவும் இந்த ஸ்வரசத்தில் 2 ஸ்பூன் முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ் வரையில் வயதிற்கும் நோயின் பலத்திற்கும் தக்கபடியாக தினத்திற்கு 2முதல் 4வேளையாக உள்ளுக்குக கொடுக்கக் நெடுநாட்பட்ட சீதபேதியும்குணமாகும்

மாங்காய் வற்றலைத் தயிரில் கலக்கியோ; மாங்கொட்டையின் உட்பருப்பை அரைத்துத் தயிரில் கலக்கியோ—தயிர் பச்சடிபோல் செய்தோ கொடுப்பதும் நல்லது.

படிக்காரத்தைப்பொரித்து-ஆறி அடங்கித் தணிந்தபின் பொடித்து அதற்குச் சமனிடையாக காவி மண்ணையும் பொடித்து வஸ்திரகாயம் பண்ணிச்சேர்த்தெடுத்து வைத்துக் கொள்ளவும். இந்தப் பொடியில் ஒரு சிடிகையளவுமுதல் 1/8 ரூபாய் நிறையளவாக தினமொன்றுக்கு 2-முதல் 4-வேளை வரையில் தேனில் கொடுக்க—ஆரம்பிக்கும்போதே சீதபேதியைத் தடுத்துக் குறைத்துக் குணமாக்கலாம்.

வடித்தவுடன் கை பெறுக்காத சூடுள்ள சோற்றைப் பரிமாரி—அதில் கொஞ்சம் புளித்த தயிரையும்கூட்டிக்குழைத்துசூடுடனேயே அரை வயிரளவுமடடும் வேறொன்றும் சாப்பிடுமுன் ஒரு வேளை புசிப்பிப்பது நல்லதென்றும்வயிற்றுப்போக்கை நிறுத்துமென்றும் சொல்வர் இதேவயிற்றுப்போககு பெரியவர்களுக்கானால் கொஞ்சம் உரமான மருந்துகளைக் கொடுக்க வேண்டும் இதுவரையில் சொன்ன மருந்துகளையே அளவில் அதிகப்படுத்தியுடகொள்ளச்செய்வது நலம். ——

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

சிறு விளம்பரங்கள்

சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிருர்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம கணிக்க ரூ. 2 சக்தி கவசம ரூ. 7—8—0. வி. பி. பி. தனி ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

அறிவிப்பு

★

மாயவரத்தில் எமது ஜவுளிக்கடையை 10-3-49 முதல் காளியாக்குடி லாட்ஜ் காபி கிளப்புக்கு எதிர்புறம் மாற்றப் பட்டிருக்கிறபடியால் அன்பர்களனைவரும் விஜயம் செய்து வேண்டியவற்றை வாங்கி ஆதரிக்க கோருகிறேன்

V. S. ராமஸ்வாமி
(S/o. V. N. S. Iyer.)
Prop :
ஸ்ரீகாமகோடி வஸ்த்ராலயம்
பட்டமங்கலத் தெரு,
மாயவரம்.

●

H.O. சுப்பிரமணிய விலாஸ்
பெரிய தெரு, கும்பகோணம்.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்
ஆனந்த பற்பொடி (Reg)
(40 வருஷங்களாகப் புகழ்பெற்றது)

சரீரத்துக்கு வாசப்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும்கிடைக்கும் கேட்லாக்இனும்.

ஆனந்த பற்பொடி ஒர்க்ஸ்,
வைத்திய ஸித்தாச்ரமம், மதராஸ் 4.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.
பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். 1வருஷ பலன் மாதவாரி எழுத ரூபா 5. ஆருடம மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோ நிதி," தியாகராய நகர்,
மதராஸ் 17. தபால்பெட்டி 1417.

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்
45, பரோடா தெரு,
தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 2
மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை
வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

உங்கள் ஆரோக்யம், செல்வம்,
சந்துஷ்டிக்கு
விக்ரமி

புத்ர சந்தானமற்றவர்களுக்கு நேரடியான பலன். ஹானியற்றது. பரிபூர்ண நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம், பிரபல M. D. டாக்டர்களால் சிபார்சு செய்யப்பட்டது விக்ரமி இதுவரை தவறினதில்லை. விலை ரூ 125.

இண்டோ யூரோப்பியன்
கெமிக்கல் கம்பெனி,
ஆனந்தபுவன், பிரின்ஸஸ்தெரு, பம்பாய்,
தந்தி : "DHANLAKHI".

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்



காளியும் ராஜகுமாரியும்

ரங்கநாதன்

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு புத்திரி. வேறு ஆண் குழந்தைகளே கிடையாது. அந்த அரசகுமாரியை அவன் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தான். அவளிடத்தில் அவன் மிகவும் பிரியமாக இருந்து வந்தான்.

அந்த அரசக்குமாரியின் பெயர் சந்திரிகை. சந்திரிகை சிறு குழந்தையாயிருக்கும் போதே இல்லாத அடமபிடித்து அழுவாள். அவளை ஓய வைப்பதற்குள் அரண்மனையிலுள்ளவர்களுக்குப் பெரிய பாடாகி விடும்.

அரசனுக்கு அவள் ஒரே செல்ல புத்திரியாக இருந்ததினால் அவள் இஷ்டப்படியே வளர்த்து வந்துவிட்டான். அரசகுமாரிக்கு அடிக்கடி கோபம் வந்துவிடும். அவளுக்குக்கோபம் வந்தால், கையில் கிடைத்தது எதையும் எடுத்துப்போட்டு உடைத்து நாசம் செய்துவிடுவாள்.

அவள் அதிகம் வளர வளர அவளது பிடிவாதமும் கோபமும் கூடவே வளர்ந்து வந்துவிட்டது. பெரிய கோபக்கார ராஜகுமாரி என்றே சந்திரிகை பெயர் எடுத்துவிட்டாள். அவள் கல்யாண வயதுகூட அடைந்துவிட்டாள் இருந்தும் அவள் கெட்டகுணமாகிய கோபம் அவளை விட்டு அகலவேயில்லை.

ஒவ்வொரு நாட்களையும், அரசன் அவளுக்கு ரோஜாமாலையை மிகவும் அன்போடு கொண்டு வந்துகொடுப்பான். சந்திரிகை அதை வாங்கி சுக்கு சுக்காக பிய்த்தெறிந்து விடுவாள் தகப்பனுடன் கடிந்துகொள்வாள்

தோழியர்களிடத்தில் அவள் இன்னும் அசாத்திய முன் கோபத்தைக்காட்டி விடுவாள். அவளை அவர்களால் யாரும் திருப்திபண்ண முடியாது தோழியர்களை அவள் கண்டபடி திட்டினாள்; அடித்தாள், அவர்கள் கொண்டுவந்து கொடுக்கும் எதையும் போட்டு போட்டு உடைத்தெறிந்தாள்.

தான் ஒரு அரசகுமாரி என்ற அகம்பாவமே அவளுக்குத் தலைதூக்கி நின்றது தன் சொல்படி எல்லாரும் நடக்க வேண்டும் என்று மமதை கொண்டிருந்தாள். அவள் ஏவியபடி செய்தும். தோழியர்களாலும். மற்றவர்களாலும், அவளை ஒன்றும் திருப்தி பண்ண முடியவில்லை.

அரசன் "தன்னுடைய ஒரே புத்திரி இப்படி கெட்டக் குணம் படைத்து விளங்குவாளா? தனக்குப் பிறகு பட்டத்திற்கு வரக்கூடியவளுக்கு இப்படிப்பட்டக் கெட்ட புததி இருக்குமா? இவளை எந்த அரசகுமாரன் வந்து கல்யாணம் செய்துகொள்வான்" என்று எண்ணி மனம் புழுங்கி வருந்தினன்.

நாளுக்கு நாள் சந்திரிகையின் அட்டூழியமும் அட்டகாசமும் தான் அதிகரித்து, அரண்மனையிலுள்ளவர்களை, கஷ்டப்படுத்திகொண்டிருந்தன

அரசனல் இதைப் பொறுக்க முடியவில்லை. ஆகவே தனக்குத் தெய்வ பலத்தினல்தான் அரசகுமாரியின் புத்தியை மாற்றமுடியும் என்று நினைததான் ஆகவே தன் குலதெய்வமாகிய காளி கோயிலுக்குப் போய் 'தாயே! நீதான் என் மகளின் கெடட குணத்தை மாற்றி, அருள் புரிய வேண்டும். உன் அனுக்கிரகத்தினல் அவள் இந்த ராஜ்யத்தையே நீதி தவருமல் எனக்குப் பிறகு ஆள வேண்டும்," என்று பிரார்த்தனை செய்துகொண்டான்.

காளிக்கும் அரசனிடம் இரக்கம் உண்டாயிற்று அரச குமாரிக்குப் புத்தி கற்பித்து, அவள் தீய குணத்தை அகறற சித்தம் கொண்டாள் காளி

அதே ஊரில் ஒரு சோற்றுக் கடை இருந்தது அதன் எஜமானன் ஒரு கொடியவன். ஈவிரக்கமற்றவன். அவனிடம் ஒரு வேலைக்காரப்பெண் இருந்தாள் அவளை அவன் இல்லாத கொடுமை செய்வான். அவளிடத்தில் இராப்பகலாக வேலை வாங்குவான். அவளுக்குச் சரியானபடி ஆகாரம கொடுக்க மாட்டான் அவள் உடுத்துக் கொள்வதற்கு கிழிந்துபோன கந்தைத துணிகளே கொடுத்தான். அவளை நாள்தோறும் அடித்துப் புடைதது வேலை வாங்குவான்.

அந்தப் பெண் அவன் பண்ணின் கொடுமைகளைச் சகித்துக்கொணடு, தன் விதியை நொந்து அவள் சோற்றுக் கடையில் வேலை செய்து வந்தாள். அவள் ஒரு அநாதை அவளுக்கு வேறு போக்கிடம் இல்லாததால் அங்கேயே அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு அரச குமாரியின் வயதுதான் ஆயிற்று. அவள் உருவத்திலும் உயரத்திலும் அரச குமாரியைப் போலவே இருப்பாள். அவள் முகமும் அரச குமாரியின் முகம் போலவேயிருக்கும். அவள் கந்தையுடுத்து, சரியான ஆகாரமின்றி, சோற்றுக்கடையில் வேலை செய்துவந்தாள் அரசகுமாரி ராஜயோகத்திலிருந்து விதவிதமாக ஆடையுடுத்தி, அறுசுவையான ஆகாரம் சாப்பிட்டு பிறரை வேலை வாங்கிக் கொண்டு சுகமாக இருந்தாள். இதுதான் அவர்கள் இருவருக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு நாள் நடுநிசி. ஊரே அசந்து தூங்கிக்கொண்டிருந்தது எங்கும் ஓரே நிசப்தம்.

காளி அரண்மனையிலுள் புகுந்தாள் அரச குமாரி தூங்கிககொண்டிருந்த அறைக்குள வந்து விட்டாள் அரச குமாரி அசந்து தூங்கிக்கொண்டிருந்தாள் காளி அவளை அப்படியே தூக்கித் தன்தோள்மேல் சாத்திக்கொண்டாள அடுத்த நிமிஷம் அந்த ஊரிலிருந்த சோறறுக்கடைக்குப் போனுள். அந்த ஏழை வேலைக்காரப் பெண் படுத்துத் தூங்கின இடத்திறகும் வந்துவிட்டாள்

அரசகுமாரியை அந்த வேலைக்காரப்பெண் படுத்திருந்த இடத்தில் கிடததினுள் அரசகுமாரியின் ஆடைகளை வேலைக்காரப் பெண்ணுக்கு அணிவித்தாள். வேலைக்காரப் பெண்ணின் கந்தை ஆடைகளை அரசகுமாரிக்கு அணிவித்தாள். பிறகு அரசகுமாரியை, கந்தை உடையில் சோற்றுக்கடையில் விட்டுவிட்டு வேலைக்காரப்பெண்ணை அரசகுமாரியின் உடையுடன் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, காளி தன் கோயிலுக்குப் போய் விட்டாள்

பொழுது விடிந்தது அரசகுமாரி கண்விழித்துப் பார்த்தாள். தான் எங்கேயோ ஒரு புதிய இடத்தில் இருப்பதை அறிந்தாள் தன்னுடைய விலையுயர்ந்த ஆடைஆபரணங்களுக்குப் பதில் கந்தையைக் கண்டு மிகவும் வருந்தினுள் அதறகுள் சோற்றுக் கடையின் எஜமானுகிய அந்தக் கொடியவன் அங்கு வந்துவிட்டான் வழக்கம் போல செய்யவேண்டிய வேலையைச் செய்யாமல் நிற்பதைக் கண்டு, அவளைக் கழியால் நையப் புடைததான் வேலைக்காரப் பெண் உடையிலிருந்த அரசகுமாரிக்கு அடி பொறுக்க முடியவில்லை. கதறிக்கதறி அழுதாள் "நான் ஒரு ராஜகுமாரி. எனக்கு வேலை செய்யவே தெரியாது," என்று அவள் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை "வேலைக்காரப் பெண் ராஜகுமாரியாக ஆகப் பார்க்கிருயா, பாசாங்கு செய்து ஏமாற்றப்பார்க்கிருயா," என்று பரிகாசம் செய்து மேலும் நையப் புடைத்தான். சந்திரிகை பார்த்தாள், "இனி வேலை செய்யாமல் சும்மா அழுதுகொண்டிருந்தால், உதை விழுந்துகொண்டேயிருக்கும்" என்று சோற்றுக்கடையில் வேலை செய்ய ஆரம்பித்தாள். அவள் வேலைகளைச் சரியாகச் செய்யாததினுல், அவளுக்கு உதை விழுந்துகொண்டேயிருந்தது. சந்திரிகை கஷ்டப்படடுக் கொண்டு சோறறுக் கடையிலேயே இருந்து வந்தாள்.

அரண்மனையில் கொண்டு விடப்பட்ட வேலைக்காரி அன்று காலையில் விழிததெழுந்ததும் அவளுக்கு வேலை செய்ய தோழியர்கள் மேல் தோழியர்களாக வந்தார்கள் அவளைப் பலவிதமாக அலங்காரம் செய்தார்கள் விதம் விதமான தின்பண்டங்கள் கொண்டு வந்து வைததார்கள். அவளுக்கு இதெல்லாம் புதுமையாகயிருந்தது ஏதோ கனவு உலகத்தில் சஞ்சரிப்பதாகத் தோன்றிற்று ஆச்சரியப்பட்டுக் கொண்டேயிருந்தாள் அரண்மனையில் இருந்தவர்கள் எல்லாரிடமும் மரியாதையாகவும், பணிவாகவும அன்பாகவும் பேசினுள்.

"முன் கோபக்காரியான் சந்திரிகைதிருந்திப்போய்விடடாளே, அன்பாகவும் சாந்தமாகவும் பேசுகிருளே" என்று அவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அரசனும் வந்தான் ரோஜா மாலையை வழக்கம்போல் கொண்டுவந்து அரச குமாரியிடம் கொடுத்தான் அவள் அதை அணிந்துகொண்டு அரசனை வணங்கினுள்.

அரசனுக்குத்தன் மகள் புத்தி திருந்திப்போய்விட்டாள் என்று அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

அரசனுக்கும் மற்ற எவருக்கும் காளி செய்த சூழ்ச்சி தெரியாததால் உண்மையாகவே அரசகுமாரி திருந்திப்போய்விட்டாள் என்று நினைத்தார்கள்.

ஒரு மாதம்வரைக்கும் வேலைக்காரி அரண்மனையிலும், ராஜகுமாரி சோற்றுக்கடையிலும் இருந்தார்கள். ஒருத்தி சுகத்தை அனுபவித்தாள் மற்றவள் சொல்லமுடியாத கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தாள்.

இந்த ஒரு மாதகாலத்தில் சோற்றுக்கடையில் அவதிப்பட்ட சந்திரிகை தன் தவறை உணர ஆரம்பித்தாள் தான், தந்தையையும், தோழியையும். தன் அகம்பாவத்தினாலும், கோபத்தினாலும் படாத பாடுபடுத்தி வைத்ததற்குப் பலன்தான் இப்படி இங்கேவந்து கஷ்டப்படுகிறேன், இனிமேல் நான் ஒரு நிமிஷங்கூட, முன்போல் கொடியவளாக நடந்துகொள்ள மாட்டேன். எனக்குப் புத்தி வந்துவிட்டது கடவுளே! என் குற்றத்தை மன்னித்துக் காப்பாற்று! என்று தனிமையில் தூங்குவதற்கு முன் சொல்லி அழுது காலத்தைக் கடத்தி வந்தாள்.

காளி, "ராஜகுமாரிக்குப் புத்தி வந்துவிட்டது. சோற்றுக் கடையில் அவள் அனுபவித்த கடின வாழ்க்கை அவளுக்கு நல்ல பாடம் கற்பித்துவிட்டது' என்பதை அறிந்தாள்.

ஆகவே ஒருநாள் நடுநிசி காளி முன்போலவே அவ்விருவரையும் இடம் மாற்றிவிட்டாள். அரசகுமாரி முன்போலவே அரண்மனைக்கு வந்துவிட்டாள். வேலைக்காரி பழையபடியே கந்தை உடுத்தி, சோற்றுக்கடையில் வேலை செய்பவளாக மாறிவிட்டாள்.

அரண்மனைக்கு வந்து சேர்ந்த சந்திரிகை எல்லாரிடமும் அன்பாகவே, நல்ல வார்த்தைகள் பேசிப் பழகி வந்தாள். அவள் அரண்மனைக்கு வந்துவிட்ட போதிலும். தான் சோற்றுக் கடையில் அவதிப்பட்டது, அவளுக்கு இன்னும் ஞாபகத்திற்கு வந்து, அவளை உறுத்திக்கொண்டிருந்தது ஆகவே ஒரு நாள் அவள் தோழியர்களுடன், அந்தச் சோற்றுக் கடைக்குப் போனாள். என்ன ஆச்சரியம்! அங்கே அவளைப் போலவே ஒரு பெண் கந்தை உடுத்தி தன் எஜமானனிடம் உதை வாங்கிக்கொண்டு வேலை செய்வதைப்பார்த்து, அவள் உள்ளம் உருகியது.

தான் அவதிப்பட்டதுபோல் உண்மையாகவே ஒரு ஏழைப் பெண் கஷ்டப்பட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறாள் என்பது புலனாயிற்று.

அதற்குப்பிறகு அந்த வேலைக்காரியைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்து வந்து அவளைத்தன் தோழியாக அமர்த்திக் கொண்டாள்.

காளி செய்த சூழ்ச்சியால் ஏழை வேலைக்காரப் பெண்ணின் கஷ்டம் நீங்கிற்று அரசகுமாரியின் கெட்ட குணமாகிய கோபம் போயே போய்விட்டது.

சந்திரிகைக்குச் சிறந்த ராஜகுமாரன் கணவனாக வந்து அமைந்தான். தன் தந்தைக்குப் பிறகு அவளே அந்த நாட்டுக்கு ராணியானாள். நீதி தவறாமல் அரசாண்டு, மக்களுக்குப் பல நன்மைகள் புரிந்து நீண்டகாலம் வாழ்ந்து வந்தாள்.

அரிய சந்தர்ப்பம் ! ★ குறைந்த விலை !

4 K. W. கிராம்டன் பார்க்கின்ஸன் 110 வோல்ட் D. C.
ஜெனரேடர், ரெகுலேடருடன் ரூ. 1375.

ஓர் ம்டன் சிம்சன் மானோபிளாக் பம்புசெட்டு 4"X3" சைஸ் 5 H. P.
R. T. H. மோட்டார் A. C. 3 Phase 50 Cycles 2880 R. P. M. செட் ரூ. 1250.

2 H. P. A. E. I. A. C. 3 Phase 50 Cycles 1440 R. P. M. மோட்டார் ரூ. 380.

1 H. P. இங்கிலீஷ் மேக் A. C. 3 Phase 1440 R. P. M.
400 / 440 வோல்ட் மோட்டார் ரூ. 340.

இடாலியன் பேக்லைட் 5 amp. 1 வே. சுவிச்சு ரூ. 7—[illegible]—0 டஜன்.
இடாலியன் பேக்லைட் 5 ஆம்ப்ஸ் 2 வே. சுவிச்சு ரூ. 9—[illegible]—0 டஜன்.
இடாலியன் பேக்லைட் 5 amp பெட் சுவிச்சு ரூ. 10—[illegible]—0 டஜன்.

★

விவரங்களுக்கு :

எஸ். எம். டி. வேலு & கம்பெனி,

எலக்ட்ரிகல் இம்போர்டர்ஸ், சேலம் டவுன்.

தபால் பெட்டி 48. தந்தி : 'வேலு'

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம நீங்கும், ஆரோக்யம, குடும்ப க்ஷேமம், கலியாணம, வியாபார லாபம், பகை, சமாதானம, உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம. மற்றும் ஸகல வழியிலும மேன்மையுண்டாகும. மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம, குடும்பம், ஆரோக்யம், படிப்பு, அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும முக்யவிஷயங்களும எழுதியனுப்பப்படும. ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது. செய்யும் தொழில், கடிதம எழுதும் நேரம தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோக்யாபசம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Estd: 1920

சேலம் மூன்றுதாமரை

பீடிகளை உபயோகித்து,, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,

கோட்டை, சேலம். S.I.R.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House

ஸூரஜ்மல்ஸ்
வைரங்கள்
1895 லிருந்து
313, எஸ்ப்ளனேட், மதருஸ்.